
நவம்பர்
வெளியீடு!
ஸாஹினியின்
அதிசய திருடன்
டைரக்ஷன்... P.புல்லையா BA
ஸ்டுடியோ
விஜயா - வாஹினி
தயாரிப்பு... S.பவநாராயணா - D.B.நாராயணா



ESTD. 21-3-52 REGD. No 3072

EDUCATION OUR SOLE AIM

HEAD OFFICE: **RISHIVANDIYAM** – *BRANCH OFFICE:* **MADRAS**

"B" தபால் & நேர்முக வகுப்புகள் ஆரம்ப தேதி: 31-10-58

24-9-58ல் நிறுவிய நமது சென்னை கிளை ஸ்தாபனத்தில் 8-10-58 முதல் ஆரம்பமான **தபால் & நேர்முக வகுப்புகளில்** பல மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க **31-10-58 முதல் நமது "B" குரூப் தபால் & நேர்முக வகுப்புகள் ஆரம்பிக்கவிருக்கிறோம்.** கீழ்க்கண்ட வகுப்புகளுக்கு நீண்ட நாள் அனுபவமும் முழுத்திறமையும் வாய்ந்த M.A., B.A., L.T., B.A., வித்துவான், என்ஜினியர், டாக்டர் முதலிய நமது ஆசிரியர்களால் எளிய நடையில் மிகத்தெளிவான முறையில் உத்திரவாதத்துடன் பாடங்கள் பயிற்சி யளிக்கப்படும். பாடங்கள் பயிற்சி யளிப்பதற்கும் தேர்வின் வெற்றிக்கும் உத்திரவாதப்பத்திரம் வழங்குகிறோம். **நேர்முக வகுப்பிற்கு மிகக்குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது. தபால் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக மாதம் மும்முறை பாடங்கள் அனுப்பிப் பயிற்சி யளிக்கப்படும்.**

1. **யுத்கல் யுனிவர்ஸிடி** B.A. & B. Com. **மார்ச் 1960** :—இண்டர், பிரி-யுனிவர்ஸிடி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இவ்வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 2. **யுத்கல் யுனிவர்ஸிடி** Inter & I. Com. **மார்ச் 1960** :—S.S.L.C. அல்லது மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இவ்வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெறலாம். 3. **ஓவர்ஸியர் & ட்ராப்ட்ஸ்மேன் வகுப்புகள் மார்ச் 59** :—மெட்ரிகுலேஷன் அல்லது S.S.L.C. தேர்ச்சி பெற்றவர்களும் - தவறியவர்களும் சேர்ந்து பயிற்சி பெறலாம் 4. **சர்வீஸ் கமிஷன் அக்டோபர் 59.**

1. **பிரி-யுனிவர்ஸிடி.** 2. **மெட்ராஸ் மெட்ரிகுலேஷன்.** 3. **பனாரஸ் மெட்ரிகுலேஷன்,** 4. **ஆந்திரா மெட்ரிகுலேஷன்,** 5. **தமிழ் வித்துவான்** வகுப்புகள். 6. S.S.L.C. 7. ESLC, (*8-ம் வகுப்பு*) 8. **ஹிந்தி வகுப்புகள்** (59 பிப்ரவரி), 9. **ஹோமியோபதி** (தமிழ் & ஆங்கிலம்). 10. **கைத்தறி** நெசவு. 11. **விவசாயம்.** 12. Book Keeping, 13. **போஸ்டல் கிளார்க்.** 14, **போஸ்ட்மேன்.** 15. **கிராம மணியம்.** 16. **கிராம மணியம்.** 17. **பேசிக் ஆங்கிலம்** (ஆரம்ப ஆங்கிலப் பாடங்கள் முதல் 5-ம் பாரத்திற்குரிய ஆங்கிலப் பாடங்கள் வரை) முதலிய **1959 மார்ச், எப்ரல் ஃ 1960-ம் வருட சர்க்கார் ஃ யுனிவர்ஸிடி தேர்வுகளுக்குப் பயிற்சி யளிக்கப்படும். தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் யாவரும் இவ் வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெறலாம்.**

ஆகவே. **31-10-58** முதல் **ஆரம்பமாகவிருக்கும் நமது "B" குரூப் நேர்முக வகுப்புகளின்** விவரங்களுக்கு **25** NP **ஸ்டாம்புடன்** விண்ணப்பித்து உடன் சேர்ந்து பயிற்சி **பெற்று பயன் அடையவும்.** இவ்வகுப்பில் 14-11-58 **வரை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

89690

தமிழ் நாட்டின் தனிப்பெரும் கல்வி ஸ்தாபனம் :

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

சென்னை கிளை : நெ. 7, நாகமணி முதலித் தெரு, (Near Market)
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

M21.N42 1P

தீபாவளி வெளியீடு
MAV PICTURES SALEM
எம்.ஏ.வி.பிக்சர்ஸ்
மாதவி
கதை வசனம்
வேங்கடராமானுஜம்
பாடல்கள்
கா.மு.ஷெரீப்
சங்கீதம்
K.V.மஹாதேவன்
டைரக்ஷன்
கிருஷ்ண ராவ்
ஸ்டுடியோ
ரத்னா (சேலம்)
BHARAT STUDIO

விநியோகஸ்தர்கள்: மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி மு திருச்சி, தஞ்சாவூர்: ஸாரதா பிலிம்ஸ் சர்க்யூட் - காரைக்கால். கோயம்புத்தூர்: ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ் - கோயம்புத்தூர். வட, தென் ஆற்காடு, செங்கற்பட்டு சித்தூர் உள்பட - ஏவி. எம். லிமிடெட் சென்னை-4. F.M.S. ஷா பிரதர்ஸ்-சிங்கப்பூர்.

தீபாவளி
வெளியீடு
சரவணபவா
& யூனிட்டியின்
நான் வளர்த்த
தங்கை
அஸோஸியேட்
டைரக்ஷன்
T.K. ராமு
டைரக்ஷன்: Ch. நாராயணமூர்த்தி, B.A
Jupiter Advertising

'சிரஞ்சீவி'யின்

அற்புதமான மர்ம நாவல்

நள்ளிரவில் நடந்தது

பிரபல நடிகை சுகந்தியின் அறையில் மாண்டவனின் சவம் மறைந்த மாயம். அதைத் தொடர்ந்து பல மர்மங்கள். படித்து முடிக்கும் வரை புஸ்தகத்தை கீழே வைக்க மனம் வராது.

விலை ரூ. 1 25

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை-2.

(டீலக்ஸ்) தானாகவே 50 முறை சுடும் பிஸ்டல்



லைசென்ஸ் தேவையில்லை. தானாகவே இயங்கி, 50 முறைகள் சுடக்கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல். இது வெடிக்கும்போது வரும் பயங்கர ஒலியும், தீப்பொறிகளும், திருடர்களையும் வன விலங்குகளையும் பயப்படச் செய்யும். சினிமா நாடக நடிகர்களுக்கு முற்றிலும் பயன்படக்கூடியது. விரோதிகளிடமிருந்து தப்பவும் மற்றும் இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கும் உங்களுக்கு சிறந்த துணை இது. விலை ரூ. 10/50. வி. பி. பி. சார்ஜ் ரூ. 2/50. 25 ரவைகள் இலவசம். அதிகப்படி ரவை டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 1. பிஸ்டல் கேஸ் விலை ரூ. 3. பிஸ்டலை சுத்தம் செய்யும் எண்ணெய் ஒரு சீசா ரூ. 1. (திருப்திக்கு உத்தரவாதம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.)

எலக்ட்ரிக் & ரேடியோ கைட்: சிறந்த மெக்கானிக்காக மாற உதவும் புத்தகம். 117 படங்கள் கொண்டது. ரூ. 15. செலவில் வீட்டிலேயே ரேடியோ தயாரிக்கவும், மற்றும் ரேடியோ ரிப்பேர் செய்வது, வயரிங், எலெக்ட்ரிகெல் மெகானிஸம் மற்றும் மின்சார சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள உதவும் புத்தகம். வேறு தொழில்கள் பற்றியும் கற்கலாம். புதுப்பிக்கப்பட்ட பதிப்பு ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1. தையற்கலையும், துணிகள் கத்தரிப்பதும் ரூ. 4. சோப்புகள் தயாரிப்பது ரூ. 3. புகைப்படக்கலை ரூ. 3. வாசனை திரவியம் செய்யும் முறை ரூ. 1-50. ஒரே மாதத்தில் ஹிந்தியைக் கற்க உதவும் புத்தகம் ரூ. 4. திருமண வாழ்க்கையின் நுணுக்கங்கள் 88 படங்களுடன் ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1-25 ஒன்று முதல் மூன்று புத்தகங்களுக்கு.

TARUN TRADERS. (P.P.) P. B. 19 ALIGARH (INDIA)

GOKUL
SANTOL
TOILET POWDER
T.S.R's
GOKUL
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
Padmini Priyadarsini
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்

பொங்கல் வாழ்த்து

- ஓவியச் சிறப்பு
- அழகின் சிரிப்பு
- புகைப்படக் கவர்ச்சி
- கன்னித் தமிழின் களிப்பு
- சித்தத்தைத் தொடும் செயல் திறன்
- முத்துக் கோத்தன்ன எழுத்துக் கோவை

★

கண்ணைக் கவரும்
வண்ணக் களஞ்சியமாய்
கருத்தைப் பிணிக்கும் சிந்தனைக் கருவூலமாய்ப்
பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனைக்குத்
தயாரிலிருக்கின்றன.

★

அணுகாந்தி பாண்டிய பதிப்பகம்

P/16, கீழவாசல் : : தஞ்சாவூர்

படம் 17

காட்சி 3

பேசும்படம்

★ நவம்பர் 1958 ★

பொருளடக்கம்

		பக்கம்
1.	செய்திச் சுருள் ...	10
2.	தேவிகா (வர்ணப் போட்டோ) ...	18
3.	சோளி வகைகள் - சௌகார் ஜானகி ...	19
4.	'ரே சுக்கா - பகடி சுக்கா'வில் டி. ஆர். ராமச்சந்திரன் (வர்ணப் போட்டோ) ...	24
5.	புதிய வெளியீடுகள் ...	25
6.	பானுமதி - நவரச நாடகம் ...	27
7.	கொண்டை வகைகள் ...	37
8.	எஸ். ஜி. ஈஸ்வர் - வாழ்க்கைச் சித்திரம்...	43
9.	சபாஷ் மீனா (திரைக்கதை, வசனம்) ...	53
10.	கூடி வாழ்ந்தால் கோடி நன்மை (படக்காட்சிகள்) ...	57
11.	ஸ்டுடியோ விஜயம் ...	65
12.	திரை உலகம் திரண்டு எழுந்தது ...	74
13.	'ஓடி விளையாடு பாப்பா'வில் எம். என். ராஜம் (வர்ணப் போட்டோ) ...	81
14.	'ரே சுக்கா பகடி சுக்கா'வில் ராமராவ் (வர்ணப் போட்டோ) ...	84
15.	கேள்வி-பதில் ...	85
16.	தபால் பெட்டி ...	90
17.	நான் ரஸித்த காட்சி ...	95
18.	வெட்டுங்கள் வெட்டுங்கள் ...	99
19.	ஓடி விளையாடு பாப்பா(படக் காட்சிகள்)...	101
20.	ஓடாதே நில் (படக்காட்சிகள்) ...	105

★ SEVENTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, 17, General Patters Road, Madras-2. (Phone 86001) Proprietors: Ramanath Publications. Managing Editor: T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES :

17, General Patters Road, Madras-2.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon

செய்திச் சுருள்

'அன்பு எங்கே?' வருகிறது

உண்மையான அன்பு எங்கே இருக்கும் என்பதை அறிய எல்லோருக்குமே ஆர்வம் உண்டு. இந்தப் புதிருக்கு விடையாக அமைந்திருக்கும் திரைக்கதையைக் கொண்டதுதான் ஜூபிலி பிலிம்ஸாரின் இரண்டாவது படமாகும். 'அன்பு எங்கே?' என்ற இந்தப் படத்தின் வசனங்களை மாறன் எம் ஏ., எழுதியிருக்கிருர். பண்டரிபாய், சூர்ய கலா, தேவிகா, பாலாஜி, எஸ். எஸ். ராஜேந்திரன் மற்றும் பலர் நடிக்கும் இப்படத்தை யோகானந்த் டைரக்ட் செய்கிருர்.

தெய்வ பலம்

பொன்னலூரி சகோதரர்கள்—சியாமளா ஸ்டுடியோவில் தயாரித்திருக்கும் முதல் தனித் தமிழ்ப் படத்திற்கு 'தெய்வ பலம்' என்று பெயர். புதுமுகம் ஜெயஸ்ரீ கதாநாயகியாக இதில் அறிமுகமாகிருர். தயாரிப்பாளர்களில் ஒருவரான வசந்தகுமார் ரெட்டி இதை டைரக்ட் செய்கிருர். பாலாஜி, வி. ஆர். ராஜகோபால், சாரங்கபாணி மற்றும் பலரும் இதில் நடித்து வருகின்றனர்.

சென்னை தியாகராயா கல்லூரியின் கலைமன்றத்தார் மந்திரி சுப்ரமணியம் தலைமையில் புரட்சி நடிகருக்கு ஒரு வீர வாளை 28-9-58 அன்று பரிசாகக் கொடுத்தனர்.

மீண்ட சொர்க்கம்

மதுரம் பிக்சர்ஸ் தயாரிப்பான 'அகல் விளக்கு' படத்தயாரிப்பில் பல மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 'மீண்ட சொர்க்கம்' என்று தற்போது படத்திற்கு பெயரிடப்பட்டிருக்கிறது. தவிர எஸ். எஸ். ராஜேந்திரன், இ. வி. சரோஜா இருவருக்கும் பதில் தற்போது இதில் ஜெமினி கணேசனும் பத்மினியும் பிரதம பாகத்தில் நடித்து வருகிருர்கள். படத்தை, இதன் திரைக்கதை, வசனகர்த்தாவான ஸ்ரீதரே டைரக்ட் செய்து வருகிருர்.

விஜயதசமி படங்கள்

வழக்கம் போலவே இவ்வருடம் விஜயதசமியன்று பல புதிய படங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

''புத்தா பிக்சர்ஸ்'' பாகஸ்தர்களில் ஒருவரான ஜி. என். வேலுமணி 'சரவணா பிலிம்ஸ்' என்ற சொந்தக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிருர். இதன் சார்பில் சிவாஜி கணேசன், எம். ஆர். ராதா, டி. எஸ். பாலய்யா, எஸ். வி. சுப்பய்யா, சாவித்திரி, எம். என். ராஜம் முதலியோர் நடிக்கும் படமொன்றை வேலுமணி தயாரிக்கப் போகிருர். இப்படத்தின் ஆரம்ப விழா சென்ற மாதம் 22-ம் தேதியன்று நெப்டியூன் ஸ்டுடியோவில் வி. நாகய்யா தலைமையில் நடைபெற்றது. சென்னை மந்திரி ஸி. சுப்ரமணியம் இதை ஆரம்பித்து வைத்தார். சோலைமலை கதை, வசனம் எழுதி யிருக்கும் இதன் டைரக்டர் பீம்சிங்.

•

'அவன் அமரன்' படத்தைத் தயாரித்த பீபிள்ஸ் பிலிம்ஸார் 'முதன் மந்திரி' என்ற படத்திற்கு

'அதிசயத்திருடன்' படத்தில் வரும் இவர்கள் யார் என்பதைச் சொல்லவாவேண்டும்?

பாரமவுண்ட் ஸ்டுடியோவில் விஜய தசமியன்று பூஜை போட்டிருக்கின்றனர். எஸ். எம். குமரேசன் நடிக்கும் காட்சி ஒன்று ஆரம்ப தினத்தன்று படமாக்கப்பட்டது. படத்தின் டைரக்ஷன் பொறுப்பை, கதாசிரியர், வசனகர்த்தாவான நாகர்கோயில் எஸ். நாகராஜன் ஏற்றிருக்கிருர்.

பின்னணிப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் 'சினிமா உலகம்' பத்திராதிபர் பீ. எஸ், செட்டியார், டைரக்டர் ஆர். ஆர். சந்திரன் மூவரும் பங்கு கொண்டுள்ள இசை மணி பிலிம்ஸின் 'கடவுள் எங்கே?' என்ற படத்திற்கான ஆரம்ப விழாவும் இதே தினத்தன்று வாஹினியில் நடைபெற்றுள்ளது. சென்னை மேயர் ஸ்ரீமதி தாரா செரியன் காமிராவை முடுக்கி விட்டார். தியாகராயா கல்லூரி பிரின்ஸிபால் தலைமை தாங்கினுர். படத்தின் கதை நோபல் பரிசு பெற்ற தாகூரின் 'கீதாஞ்சலி'யை அடிப்படையாகக் கொண்டது. ராஜேந்திரன், ஓ. ஏ. கே. தேவர், டி. பாலசுப்ரமணியம், டி. ஆர். ராமச்சந்திரன், பக்கிரிசாமி, ராஜசுலோசனு, மனேரமா, புது முகம் குசுமகுமாரி முதலியோர் நடிக்கும் இதை ஆர். ஆர். சந்திரன் டைரக்ட் செய்வார்.

வாஹினியில் மேற்படி தினத்தன்றே 'மகனே மருமகன்' என்ற புதுப்படத்தை, கே. விநாயகம் எம். எல். ஏ. தலைமையில், சென்னை மந்திரி எம். பக்தவத்சலம் துவக்கி வைத்தார். 'தஞ்சம் உனை அடைந்தேன் கண்ணா பரமாத்மா' என்று படத்தின் கதாநாயகன் மகாலிங்கம் பாடும் பாட்டும் அன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டது. மகாலிங்கத்துடன் இதில் மைனுவதி, எம். என். ராஜம், சந்தியா, வனஜா, முத்துலக்ஷ்மி, நாகய்யா, சாரங்கபாணி, வி. கே. ஆர். முதலியோர் நடிக்கின்

சௌகார் ஜானகி இப்படித் தோன்றுவது 'தர்மபத்தினி'யில்

றனர். ஜி. ஆர். பி. எஸ். புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இதன் கதை, வசனங்களை தஞ்சை ராமய்யாதாஸ் எழுதியிருக்கிறார்., தயாரிப்பாளரில் ஒருவரான வி. ராதாகிருஷ்ணன் இதை டைரக்ட் செய்கிறார்.

வைஜயந்திமாலாவை சகுந்தலையாகவும் ஜெமினி கணேசனை துஷ்யந்தனாகவும் வைத்து 'சகுந்தலை' படத்தை ஈஸ்ட்மென் கலரில் குப்தாவின் கலா மந்திர் தயாரிக்கப் போகிறது. இதற்கான பூஜை அவர்களது காரியாலயத்திலேயே நடைபெற்றது. ஹிந்தி, தமிழ் இரு பாஷைகளில் தயாராகும் இப்படம் ராமண்ணா டைரக்ஷனில் ஜெமினியில் தயாராகும்.



ஏர் - இந்தியா ஸ்தாபனத்தார் வி. நாகய்யா தலைமையில் ஒரு 'விமான அறிமுக விழா'வை விஜயா கார்டனில் ஏற்பாடு செய்திருந்தனர்.

பிரபல நாவலாசிரியர் 'அகிலன்' எழுதியுள்ள 'உத்தமப் பெண்மணி' என்ற கதையை பவானி பிக்சர்ஸார் தயாரிக்கப் போகிறார்கள். இதற்கான பூஜை அவர்களது காரியாலயத்தில் நடைபெற்றது. சிவாஜி கணேசன்-பத்மினி பிரதமபாகத்தில் நடிக்கும் இதை டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்வார். வசனங்களை அகிலனே எழுதுகிறார்.

'மேக்-அப்' கலைஞர் என். பி. சிவராமனின் 'சிங்கார நிலையம்' என்ற நவீன சாதனங்கள் கொண்ட ஒப்பனை நிலயத்தைத வைஜயந்திமாலா திறந்து வைக்கிறார்.

ஜெமினி கணேசன் தோன்றும் சிறு காட்சி ஒன்றை, 'மணிமண்டபம்' படத்திற்காக அதன் ஆரம்ப விழா வன்று படமாக்கினார் டைரக்டர் வேதாந்தம் ராகவய்யா. வி. பி. டி. புரொடக்ஷன்ஸாரின் இத்தயாரிப்புக்கான கதை, வசனம், பாடல்களை கண்ணதாசன் எழுதியிருக்கிறார். விஸ்வநாதன் ராமமூர்த்தி ஜோடி இசை அமைக்கும் இதில் எம். என். ராஜம், ராஜசுலோசனா, நம்பியார் முதலியோர் நடிக்கின்றனர். பரணியில் இதன் ஆரம்ப விழா நடைபெற்றது.

விஜயதசமியன்று ஆரம்பமான படங்களில் கனவு பலித்ததம்மா' படமும் ஒன்று. இ. ரா. சண்முகம் கதை, வசனம் எழுதியுள்ள இதை எம். எஸ். ராமனாதன் டைரக்ட் செய்கிறார், ஜெமினி கணேசன், வி. ஆர். ராஜகோபால், எஸ். வி.

சுப்பய்யா, டி. ஆர், நடராஜன், கே. டி சந்தானம், ராஜசுலோசன முதலியோர் நடிக்கும் இதை கலை வாணி பிலிம்ஸார் தயாரிக்கிருர்கள். இதன் ஆரம்ப பூஜை பாரமவுண்டில் நடைபெற்றது.

அருணு பிலிம்ஸ் காரியாலயத்தில், டைரக்டர் ஆர். எம் கிருஷ்ணசாமி தயாரிக்கும் 'அபலை அஞ்சுகம்', எம். ராதாகிருஷ்ணன் தயாரித்து டைரக்ட் செய்யும் 'சவுக்கடி சந்திரகாந்தா' இரண்டின் ஆரம்ப பூஜைகளும் நடைபெற்றன,

'அபலை அஞ்சுகம்' கல்கியில் கி. ரா. கோபாலன் எழுதிய கதை. அன்று 'வெண்ணிலா குடை பிடிக்க' என்று, படக்கதாநாயகன் மகாலிங்கம்-சுசீலா பாடும் பாட்டு, அருணு பிலிம்ஸ் காரியாலயத்திலேயே பதிவாக்கப்பட்டது.

விமான விழா

அயல் நாடு செல்ல விரும்பும் நடிகர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் 'ஏர்-இந்தியா இண்டர்நேஷனல்' ஸ்தாபனம் செய்யும் சலுகை, வசதிகளை விளக்க - மேற்படி ஸ்தாபனத்தார் நாகய்யா தலைமையில் ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். அபாயமற்ற பாதுகாப்பான பிரயாணம் விமானத்தில் கிடைக்கிறது என்பதை விளக்க ஒரு துண்டுப் படமும் காட்டப்பட்டது. தலைமை வகித்த நாகய்யா அயல் நாடு செல்ல விரும்புவோருக்கு ஏர் - இந்தியா ஸ்தாபனம் செய்ய முன் வந்துள்ள ஏற்பாடுகளைப் பெரிதும் பாராட்டியதுடன் சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு பிரதி திங்கள், சனிக்கிழமைகளில் நேரடி சர்விஸ் இருக்கிறது என்றும் கூறினர்.

பெண்மணிக்கு ஒரு சொல்!

ஐந்திலும் சரி, ஐம்பதிலும் சரி, உங்கள் கூந்தல் கருகருவென்றும் அடர்த்தியாகவும் வைத்துக் கொள்ளலாம். இளவயதில் வரும் வழுக்கையைத் தடுத்து கேசத்தைக் காப்பாற்ற, கேசவர்த்தினியை இன்றே உபயோகியுங்கள்.

கேசவர்த்தினி ஷாம்புவினல் தலையை மணமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.

★

கேசவர்த்தினி
பிராடக்ட்ஸ்
கோயமுத்தூர்.

எங்கள் இதர தயாரிப்பு:
அஞ்சன் கண் மை

ஆந்திர பிரதேசத்தில் அமோக வெற்றிகண்டு
தென்னாட்டில் நவம்பர் 7 முதல் வெற்றிமுரசு கொட்ட வருகிறான்

ஆர். ஆர்
பிக்சர்ஸ்

காத்தவராயன்

டைரக்ஷன்: ராமண்ணா

திரைக்கதை வசனம் துறையூர் K. மூர்த்தி • சங்கீதம் G. ராமநாதன் • பாடல்கள் தஞ்சை ராமையாதாஸ் • ஒளிப்பதிவு டைரக்டர் ராஜாபாதர் • ஆர்ட் கங்கா

எச்சரிக்கை!

உங்கள் குழந்தையின்
ஜலதோஷம்
அபாயகரமாகக் கூடும்!

வியாதி ஆரம்பிக்கு முன்னரே,
அவன் சளித்தொந்திரவுகளை இந்த நல்ல,
சக்திவாய்ந்த ஆயின்மென்டால் ஒழியுங்கள்!

2 விதங்களில் ஜலதோஷத்திலிருந்து
நிம்மதி தருகிறது.

1
மூக்கின்
வழியாக
வேலை
செய்கிறது.

உங்கள் குழந்தை விக்ஸ் வேபோரப்பின் சக்தி வாய்ந்த ஔஷத ஆவிகளை சுவாசிப்பதால், அவன் மூக்கிலும், தொண்டையிலும் உள்ள சளி உபாதை அகல்கிறது.

2
சருமத்தின்
வழியாக
வேலை
செய்கிறது.

வேபோரப்பின் சுகம் தரும் உஷ்ணம் சருமத்தினூடே சென்று உங்கள் குழந்தையின் மார்கபத்தை உடைத்தெறிகிறது.

விக்ஸ்
வேபோரப்

மார்பிலும், முதுகிலும்,
தொண்டையிலும் தேய்த்தாலே போதும்!

328-A

நவம்பர் வெளியீடு
கோபி பிரதர்ஸ்
அளிக்கும்
ஓடாதே! நில்!!
வசனம்:
சிவ-சுந்தரம்
(கோபி சகோதரர்கள்)
கதை·டைரக்ஷன்:
S.பாலசந்தர்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

LTS. 583-543 TM

★★ தேவிகா

டி. ஜி. ஆர். பிக்சர்ஸ் துரிதமாகத் தயாரித்து வரும் 'இவன் அவனே தான்' படத்தில் முக்கியமான பாத்திர மொன்றை ஏற்று நடித்து வருகிருர் இவர்.

சோளி வகைகள்

'சௌகார்' ஜானகி

என்னிடமுள்ள நூதன வகை சோளிகளில் சிலவற்றை இங்கே நான் அணிந்திருக்கிறேன்.

ஊதா வர்ணத்தில், வட்டமான உருவில் சரிகை வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள, மெல்லிய கெட்டிக்கரை கொண்ட சோளியை இங்கே நான் அணிந்திருக்கிறேன். கழுத்து வெட்டப்பட்டுள்ள வகை இதில் சற்று நூதனமாக இருக்கிறதல்லவா? இத்தகைய சோளிகளுக்கு கழுத்தை ஒட்டினாற்போல பட்டையான 'நெக்லேஸ்' அணிவது பொருத்தமாக இருக்கும்.

இடுப்பைச் சுற்றி பட்டையாக மடித்து விடப்பட்டு, முழங் கையைத் தொடுமளவுக்கு கையை நீட்டி வைத்து தைக்கப்பட்டிருக் கிறது இந்தச் சோளி. கழுத்திலும் கைகளிலும் வேலைப்பாடில்லாத, ஆனால் எளிய முறையில் தைக்கப்பட்டிருந்தாலும் கவர்ச்சிகரமாக இந்தச் சோளி இருக்கிறதல்லவா?

எதிர்ப்பக்கத்தில் நீங்கள் பார்க்கும் அதே பாணியில் தைக்கப்பட்டிருக்கும் சோளியைத் தான் இங்கும் நான் அணிந்திருக்கிறேன்.

இத்தகைய சோளிகளுக்கு கழுத்தில் சாதாரணமாக ஒரு மெல்லிய சங்கிலி போட்டுக் கொண்டாலே போதுமானது. அதுவே கவாசசிகரமாக இருச்கும்.

தவிர, நீங்கள் விருப்பப்பட்டால் இத்தகைய சோளிக்கு கைகளின் ஓரங்களில் மெல்லிய கொசுவம் (பிரில்) வைத்தும் தைத்துக் கொள்ளலாம்.

நான் இங்கு அணிந்திருப்பது பச்சை நிறச் சோளி. இதன் ஒரு புறம் சிவப்பு நிறப் பட்டையும் மறுபுறம் மஞ்சள் நிறப் பட்டையும் கொண்டு, 'வி' என்ற ஆங்கில எழுத்தைப் போல் கழுத்தைச் சுற்றி தைக்கப்பட்டிருக்கிறது. பின்புறம் இந்த இரண்டு பட்டைகளும் கழுத்திற்குக் கீழே ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த மாதிரி சோளி வகைக்கும் கழுத்தில் மெல்லியதான சங்கிலியை அணிவது கவர்ச்சிகரமாகவும், எடுப்பாகவும் இருக்கும். இத்தகைய சோளிக்கும் முழங்கையைத் தொடும் வரை கைகள் இருக்க வேண்டும்.

பாசி மணிகளைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள் நீங்கள். அந்த வகை சிறிய மணிகள், கழுத்தைச் சுற்றி வட்டமாகவும், கைகளில் வளைவாக மேலும் கீழும் வைத்தும் தைக்கப்பட்டுள்ள வெள்ளை நிறச்சோளியை இங்கே நான் போட்டுக்கொண்டிருக்கிறேன்.

சாதாரணமாகவெள்ளை நிறச் சோளிகளில் இம்மாதிரி 'சம்கி' வேலைப்பாடுகள் செய்தால் எடுப்பாக இருக்கும்.

சோளிக்குப் பொருந்தும் வகையில் கைகளில் அதே நிற வளையல்களை நான் அணிந்திருக்கிறேன்.

பனாரஸ் பட்டு வகையைச் சேர்ந்த, அகலமான கெட்டிக் கரையைக் கொண்ட சோளியை நான் இங்கே அணிந்திருக்கிறேன்.

சற்றேரக்குறைய 'ஓவல்' வடிவில் இந்தச் சோளியின் கழுத்து வெட்டி, தைக்கப்பட்டிருக்கிறது.

பச்சை நிறச் சோளி அணிந்திருப்பதால் அதற்கு எடுப்பாக இருப்பதற்காக சிவப்பு நிற கற்கள் கொண்ட நெக்லேஸைப் போட்டுக் கொண்டிருக்கிறேன்.

‘ப’ என்ற எழுததைப் போல வெட்டப்பட்டுள்ள கழுத்தைக் கொண்ட கிரீம் கலர் பட்டுச்சோளியை இங்கு நான் போட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்தச் சோளியின் கைகளில், அகலமான பார்டர் இருக்கிறது. சிவப்பு நிற இழைகள் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டப்பட்டிருக்கின்றன— பார்டரில்.

இத்தகைய சோளிகளுக்கு கழுத்தில் முத்து மாலைகள் அணியலாம். பகட்டான வர்ணங்களில் அகலமான கரைகள் கொண்ட இத்தகைய சோளிகளை அணியும் போது, கைகளில் அதிக வளையல்கள் அணியக் கூடாது.

இங்கு நான் அணிந்திருக்கும் சோளி சற்று நூதனமானது முதுகுப் புறம் ‘வி’ என்ற ஆங்கில எழுத்தைப்போல் - அணிந்திருக்கும் மஞ்சள் நிறச் சோளிக்கு எடுப்பாக இருப்பதற்காக - பச்சை நிறத் துணியில் பட்டையாக வைத்துத் தைக்கப்பட்டிருக்கிறது. ‘வி’ என்ற எழுத்தின் வடிவத்தில் தான் இதன் கழுத்தும் வெட்டி, தைக்கப்பட்டிருக்கிறது. கூந்தலை நான் செய்திருப்பது போல் பிச்சோடா போட்டு கட்டுவது இதற்கு எடுப்பாக இருக்கும்.

புதிய வெளியீடுகள்

ஜிம்போ

தயாரிப்பு : பஸந்த்-வாடியா

டைரக்ஷன் : ஹோமி வாடியா

நீளம் : 14,396 அடி

வெளியிட்ட தேதி 26-9-58

வசனம் : ஆரூர்தாஸ்

புரொபஸர் சக்ரவர்த்தி என்ற, ரசாயன சாஸ்திரி நித்ய யௌவன மாக இருக்க ஒரு மருந்தைக் கண்டு பிடித்து, அதன் ரகசியத்தை ஒரு தாயத்தில் வைத்துத் தன் மகன் கழுத்தில் கட்டுகிறார். காட்டு மிரு கங்களால் பெற்றோரைப் பிரிந்த அந்தக் குழந்தை ஜிம்போ என்ற பெயரில் ஒரு மனிதக் குரங்கி னிடம் வளருகிறது. அவனைக் கண்டுபிடிக்க அவன் பெரியப்பா ஒரு சமயம் தன் உறவினளான லீலா என்ற பெண்ணோடு காட் டுக்கு வருகிறார். அதே சமயத் தில், ஜிம்போவைப்பற்றிக் கேள் விப்பட்ட காட்டு ராணி மாயாவும் அவனை அடையும் பொருட்டு, லீலாவுக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடருகிறாள். ஜிம்போ வைக்கண்ட லீலாவும், மாயாவும் அவனைக் காதலிக்கின்றனர். லீலா வின் கூட்டத்தோடு வந்த வேட் டைக்காரன் பாக்யநாதன், ஜிம்போ விடமிருந்து அந்த ரகசியத்தைப் பெற முயற்சிக்கிறான். பாக்யநாத னும் காட்டு மனிதர்களும் செய் யும் பல இடையூறுகளிலிருந்தும் ஜிம்போ தப்புகிறான். கடைசியில் மாயாவிடம் சிறைப்பட்ட ஜிம்போ வும் அவன் காதலி லீலாவும், யானைக்கூட்டத்தின் உதவியால் காப்பாற்றப்படுகின்றனர். மாயா, பாக்கியநாதன் இருவரும் மடி கின்றனர்.

விமர்சனம்

சர்க்கஸ் மிருகங்களான சிங்கம், யானை, மனிதக்குரங்கு ஆகியவை களை திறமையாகக் கையாண்டிருக் கிறார்கள். கண்ணுக்கு மிகச் சிறந்த விருந்தளிக்கின்றன வண்ணக் காட்சிகள்.

சபாஷ் மீனா

தயாரிப்பு : பத்மினி பிக்சர்ஸ்

டைரக்ஷன் : பி. ஆர். பந்துலு

நீளம் : ?

வெளியிட்ட தேதி : 3-10-58

வசனம் : ப. நீலகண்டன்

நடிகர்கள் : சிவாஜி கணேசன், சந்திரபாபு, சரோஜாதேவி, மாலினி, ரங்கராவ்.

வீட்டுக்கடங்காத பிள்ளையான மோகனை சென்னைக்கு அனுப்பு கிறார் அவன் தந்தை. அவனோ தனது நண்பனான சேகரை தனக் குப் பதில் மோகனாக நடிக்க வைக்கி றான் சென்னையில். நிஜமான மோகன் அவன்தான் என்று அவனை நிஜமாகக் காதலிக்கிறாள் மாலதி. நிஜமோகன் குப்பத்தில் நண்பன் ராஜாவுடன் வசிக்கும்போது, பூக்காரி மீனா அவனைக் காதலிக்கி றாள். சேகரைப் போலவே தோற்ற மளிக்கும் மூக்கன் என்ற ரிக்ஷாக் காரன் சந்தர்ப்ப வசத்தால் மாலதி யின் வீட்டில் மாட்டிக் கொள்கி றான். அதேபோல் சேகரும் அந்த ரிக்ஷாக்காரன் மனைவியிடம் அகப் பட்டுக் கொள்கிறான்.

இதற்கிடையில் ரங்கநாதம் என்பவரிடம் மானேஜராக வேலை செய்யும் சங்கர், பொய்க்கணக் கெழுதி, தனக்கு உடந்தையாக இருந்த குமாஸ்தா ஒருவனைக் கொன்று, அந்தக் குற்றத்தை மோகன்மீது சுமத்துகிறான். இதனால் போலீஸார் உண்மை மோகனை யும் சேகரையும், மூக்கனையும் பிடித்து ஸ்டேஷனில் அடைக்கிறார் கள். அப்போது மோகனின் பெற் றோர்கள் அங்கு வரவே நிஜமான மோகன் யார் என்பது தெளி வாகிறது. ராஜா மோகனை விடு விக்க மீனாவின் உதவியுடன் உண் மைக் குற்றவாளியைக்கண்டு பிடிக் கிறான். சங்கரைப் போலீஸார் கைது செய்யவே மற்றவர்கள்

விடுதலையாகின்றனர். மோகன்—மீனாவையும் சேகர் மாலதியையும் மணக்கின்றனர்.

விமர்சனம்

இப்படத்தின் கதையமைப்பில் எதுவும் சிறப்பாகச் சொல்ல முடியாது. மோகன்-மீனா முதலாவது சந்திப்பு, அவர்களது அடைமழைக் காதல் முதலிய சில காட்சிகள் இயற்கைக்குப் புறம்பானவை. ஆனால்— இப்படியும் நடக்குமா என்று கேட்காமல்-இப்படத்திலுள்ள ஹாஸ்யச் சம்பவங்களை நன்கு ரசிக்க முடிகிறது. இரட்டை வேஷத்தில் சந்திரபாபு சக்கை போடு போட்டு, இப்படத்தின் நடிப்பில் முதற் பரிசு பெறுகிறார். சபாஷ் மீனா ஒரு நல்ல பொழுது போக்குப் படம்.

வீட்டில் சினிமா புரொஜக்டர்



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி. அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினால் இயக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், வித வித வர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனாம். ஸ்பெஷல் (டிலக்ஸ்) மாடல் விலை ரூ. 14. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 4. தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரூ. 3.

ANAND INDUSTRIES
GOPALPURI, ALIGARH.

நீலாவுக்கு நெறஞ்ச மனசு

தயாரிப்பு : ராயல் பிலிம்ஸ்
டைரக்ஷன் : கே. சோமு
நீளம் : 15,336 அடி
வெளியிட்ட தேதி : 26-10-58
வசனம் : ஏ. பி. நாகராஜன்
நடிகர்கள் : ஸ்ரீராம், தங்கவேலு, பண்டரிபாய், ராஜம், ராகினி.

பொறுமையே உருவான, நிறைந்த மனதுள்ள நீலா, வாத்தியாரம்மாவாக வேலை செய்யும் மாலா, நடன ஆசிரியையான பாலா, வீட்டிலே செல்லமாக வளர்ந்து வரும் கலா ஆகிய நான்கு பெண்களையும் தாயில்லாக் குறை தெரியாமல் வளர்த்து வந்தார் முத்துகுமாரசாமி முதலியார். அவருடைய கடை முதலாளி மோகன் என்ற ஜாலி மைனரின் பார்வை மாலாவின் மீது விழவே அந்தக் குடும்பம் சீரழிய ஆரம்பிக்கிறது. திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட முதலியார் சிறைக்குச் செல்கிறார். மாலாவை மோகன் தூக்கிச் செல்கிறான்.

சரஸாவின் மூலம் செய்தியறிந்த யாவரும் மாலாவைக் காப்பாற்றக் கிளம்புகிறார்கள்.

குடும்பத்தோடு அத்தனை பேரும் மோகனிடம் அகப்பட்ட பிறகு, சரசுவின் சாகஸத்தால் போலீஸார் வந்து எல்லோரையும் காப்பாற்றுகின்றனர். மோகன் கைதாகிறான். மாலா - மணி, பாலா - பரமசிவம், கலா-திவாகர், நீலா-சேகர் ஆகியோர் தம்பதிகளாகின்றனர்.

விமர்சனம்

நம்பத்தகாத பல சம்பவங்களைத் தொகுத்து ஹாஸ்யத்துக்கெனவே தயாரிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது இப்படம். அருமையாக வளர்த்த பெண்களை உதவாக்கரை மாப்பிள்ளைகளுக்குத் தருகிறார் தகப்பனார். வி. கே. ராமசாமியைத் தவிர மற்ற நடிகர்கள் யாருக்குமே வேலை தரப்படவில்லை. ஹெலனின் கலர் நாட்டியம் உட்படப் பல அனாவசியக் காட்சிகள் இருக்கின்றன. நடிப்பு, வசனம் முதலிய இதர துறைகளில் கூடச் சுமாரான இப்படத்தில் சில அருமையான கர்னாடக மெட்டுப் பாடல்கள் மட்டும் இனிமையான அம்சம்.

நவரச நாடகம்

தயாரிப்பு: "பேசும் படம்"
ஸ்டுடியோ: பரணி
நடிகை: பி. பானுமதி
புகைப்படம்: ஆனந்தன்
ஆர்ட்: வரன்
அமைப்பு:
எஸ். வி. சம்பத்குமார்

நவரசங்களைப் பிரதி பலிக்கக் கூடியவர்கள் நம்மிடையே சில கலைஞர்கள்தான் இருக்கிறார்கள். சிலர் குறிப்பிட்ட சில பாத்திரங்களில் புகழ்பெற்று விட்டால் அதையே அவர் படவுலகில் இருக்குமட்டும் ஏற்று நடித்தாக வேண்டும் என்ற துரதிருஷ்ட வசமான நிலை நம் படவுலகில் இருந்து வருகிறது. ஒரு பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டபின் அதற்கு உயிர் கொடுப்பது கலைஞரின் நடிப்புத் திறன்தான். இந்த வகையில் தான் ஏற்று நடித்திருக்கும் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்திருக்கும் சிலரில் பி. பானுமதி மிக முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர். பானுமதி ஒரு பிறவி மேதை. அவர் அறியாதது படவுலகில் ஒன்றுமில்லை. ஸ்டூடியோ முதலாளி, டைரக்டர், தயாரிப்பாளர், நடிகை, பாடகி, சங்கீத டைரக்டர், கதாசிரியை என்று பல பொறுப்புக்களையும் வகித்துத் திறம்படப் பணியாற்றி வரும் பானுமதி அற்புதாரசத்தை சிறப்பாகப் பிரதிபலித்துக் காட்டிய படம், ஜெமினியின் "அபூர்வ சகோதரர்கள்" தான். தன் முன்னே தோன்றிய இருவரில் காதலன் யார் என்றே புரியாமல், இருவரது முகமும் ஒரேமாதிரி இருப்பதைக்கண்டு அதிசயப்படும் கட்டத்தில் பானுமதியின் நடிப்பு அற்புதமாக இருந்தது. இந்த அற்புத ரசத்தை அவர் பிரதிபலிப்பது சில வினாடிகள்தான். ஆனால் அதை இன்னும்கூட நம்மால் மறக்க முடியவில்லையல்லவா? வீட்டில் அவர் சைனா பொம்மைகளைக் கண்டு அதிசயப் படுவதைப் பாருங்கள்! அவர் பார்க்காத அதிசயமல்ல வென்றாலும் அதிலுள்ள பாவத்தைப் பாருங்களேன்!

பானுமதியிடம் நான் பேசிக் கொண்டிருக்கும் போது சாந்த ரச பாவத்தை வெளிப்படுத்தும்படிக் கேட்டேன், புகைப்படம் எடுப்பதற்காக. "அதுதான் எனக்கு வராது. எனக்கு அடிக்கடி வரக்கூடிய பாவம் கோபம்தான் என்றார். அவர் சொன்னது போல் கோபமாகப் பார்த்தார். புகைப்படக் கலைஞர் ஆனந்தனிடமிருந்து ஜோதி யெழுந்தது. அவர் கையிலிருந்த பிளாஷ் விளக்கு பல்பு எரிய, கோபத்தீ எரிய பார்த்த பானுமதியின் பாவம் படமாக்கப்பட்டு விட்டது! தலைகாணிகளை, உட்காரும் சோபாவில் கண்டபடி போட்டிருக்கும் பணியாட்களின் மீதுதான் அவருக்கு அவ்வளவு கோபமோ? பானுமதி யாரிடத்திலும் அன்புடனும் பண்புடனும் பழகுகிறார்.

பானுமதி நடித்த "சண்டிராணி"யில் அவருக்குக் கோபம் வந்த ஒரு காட்சி நம்மை நடுக்குறச் செய்து விட்டது. சண்டி, அவள் தங்கை சம்பா இரண்டு பாத்திரங்களிலும் பானுமதி நடித்தார். காட்டிலே சுதந்திரப் பறவையாக காட்டு மக்களுடன் வளர்ந்த வீரமங்கை சண்டி. தன் சகோதரி சம்பா அரண்மனையில் பிரசண்டனிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதை கிஷோர் மூலம் அறிந்து, உடனே பழிவாங்கக் கிளம்புகிறாள். அவள் முகத்திலே தோன்றும் கடுமை நம்மைக் கதிகலங்கச் செய்கிறது. சண்டியாக வந்த பானுமதி கோப ரசத்தைச் சிறப்பாக அதில் பிரதிபலித்தது நினைவிற்கு வருகிறதல்லவா?



கருணையின் உருவம் புத்தர்பிரான். பானுமதி புத்தரின் பாதத்தருகே அமர்ந்து கருணா ரசத்தை எவ்வளவு அருமையாகப் பிரதிபலிக்கிறார் பார்த்தீர்களா? சாந்த ரசத்தைப்போலவே கருணா ரசபாத்திரத்திலும் பானுமதி அதிகம் நடித்ததில்லை. தமிழ்ப் படங்களில் அவர் நடித்ததைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த வரிசையில் 'விப்ரநாராயணா' தமிழ் டப்பிங் படமும் இடம் பெறுகிறது.

விப்ரநாராயணா படத்தில் தேவதேவி விப்ரநாராயணரை எப்படியும் வசப்படுத்துவதாகச் சபதம் செய்கிறாள். அவள் விருப்பம் இலகுவில் ஈடேறவில்லை. ஆனால் போகப்போக விப்ரநாராயணரை அடிமைப்படுத்த நினைக்கும் அவளுக்கு அவரிடம் அவளை அறியாமலேயே அனபு ஏற்படுகிறது. இரவு பகல் எனப்பாராது பக்தி வசப்பட்டு இவ்வுலக சிந்தனையே இல்லாமலிருக்கும் விப்ரநாராயணரிடம் அவளுக்குக் கருணை பிறக்கிறது. அடிமைப்படுத்தும் மனோபாவம் போய். அவருக்கு அடிமையாகும் விருப்பம் குடிகொள்ளுகிறது. கடைசியில் அவரிடம் கருணை கொண்ட அவள் அவர் விடுதலை கோரி யாவரிடமும் யாசிக்கிறாள். இந்தக் கட்டங்களிலெல்லாம் பானுமதி கருணா ரசத்தை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திக் காட்டி யிருக்கிறார். இந்தப் படத்திலே பானுமதியின் எல்லா பாவங்களுமே பிரமாதம்.



பானுமதி எந்தவித பாவங்களையும் உடனுக்குடன் பிரதிபலித்துக்காட்டும் இயல்புள்ளவர். 'மக்களைப்பெற்ற மகராசி' தமிழ்ப் படம். அதில் நடித்த எல்லோருடைய நடிப்புத் திறனும் மக்களிடையே புகழ் பெற்றதாகும். பானுமதி அதில் குறும்புக்காரியாகவும் காதலியாகவும் தீரமிக்கவளாகவும் பலவித பாவங்களில் நடிக்கிறார். என்றாலும் வெறுப்புதான் அதில் அவரிடம் மிகச் சிறப்பாக இருந்தது.

ரங்கம்மாளின் அத்தை மகன் மாயாண்டி. அவன் ஒரு படுபாவி. இதனால், முறைப்பையனான அவனை மணக்க அவள் விரும்பாததுடன் அவனை அடியோடு வெறுக்கவும் செய்கிறாள். மாயாண்டி நயத்தாலும் பயத்தாலும் அவளை இணங்கச் செய்யும் முயற்சிகள் எல்லாம் தோற்று விடுகின்றன. அவனைப் பார்க்கும் போதெல்லாம் வேப்பெண்ணையை அருந்தியது போலிருக்கிறது அவளுக்கு. மாயாண்டி அவளைத் தனியிடத்திலே கொண்டுபோய்க் கொஞ்ச வரும்போது, "நீ இந்த உலகத்தைவிட்டே ஓடிடேன்" என்கிறாள். இந்தப் படத்தில் மாயாண்டி என்ற பாத்திரதாரியைப் பார்க்கும் போதெல்லாம் வெறுப்பு ரசத்தைபானுமதி மிகச்சிறப்பாகச் சித்தரித்திருந்தார்.

பானுமதியைப்பற்றி நினைக்கும்போதே நமக்கு ஒரு குறும்புக்காரியின் நினைவுதான் வரும். ஆனால் இந்தப் படத்தைப் பாருங்கள். சாந்த மஹாத்மாவான காந்தி மஹாத்மாவின் அருகே அமர்ந்து சாந்தமே உருவாக இருக்கிறார். இவரை நான் கேட்டபோது "சாந்த பாவம் நமக்குவராதே ஸார்" என்றார். ஆனால் படத்தில் எவ்வளவு சிறப்பாக சாந்த பாவத்தைப் பிரதிபலித்திருக்கிறார் பார்த்தீர்களா ?

பானுமதி இந்த மாதிரி பாத்திரங்களில் எப்போதாவது தான் நடிக்கிறார். அவரை ஒப்பந்தம் செய்யும் படாதிபதிகளும் அவரை ஒரு துடுக்குக்காரியின் பாத்திரத்திற்கே ஒப்பந்தம் செய்கிறார்கள். இதனால் அவர் சாந்த ரசபாவத்தைப் பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் கிடைத்ததில்லை. பானுமதி 'சதாரம்' படத்திலே சாந்த ரசத்தை நன்றாகச் சித்தரித்திருந்தார். படம் துரதிருஷ்ட வசமாகத் தோல்வியுற்ற போதிலும் பானுமதி வரையில் நடிப்பு தரமாகவே இருந்தது. சாந்தமே உருவான சதாரம், தான் காதலித்தவனையே சேர்ந்து பலவிதக் கஷ்டங்களை அனுபவிக்கிறாள். அவள் சாந்த குணம் அவளுக்குக் கடைசியில் நல்வாழ்வைத் தருகின்றது.

சமீப காலமாக வெளிவந்த படங்களிலேயே, காதல் காட்சிகள் கருத்தைக் கவரும் விதத்தில் அமைந்தது, "கள்வனின் காதலி" யில்தான். பானுமதி அந்தப் படத்தில் காதல் காட்சிகளில் ரொம்பவும் சகஜமாக நடித்து அமரர் கல்கியின் கல்யாணிக்கு உயிரூட்டி விட்டார்.

கல்யாணி முத்தய்யனிடம் உயிரையே வைத்திருக்கிறாள். அவன் அவளுக்கு மணமாலை போடவேண்டும் என்பது அவளுடைய தீராத ஆசை. ஆனால் தனக்கு வேறொருவருடன் திருமணம் நடத்த வீட்டார் முயற்சிக்கும்போது, ஏராளமான நகைகளுடன் முத்தய்யனோடு பூங்குளத்தை விட்டே கிளம்பிப் போய்விட வேண்டுமென்ற உறுதியோடு வெளியேறி விடுகிறாள் கல்யாணி. அவள் ஒரு கிழவனை மணந்து விதவையானதும் அவளை இருட்டிலே சந்திக்கிறான் முத்தய்யன். கல்யாணி அழுதபடியே. 'மறுபடியும் போய் விடாதீங்க அத்தான்' என்கிறாள். கடைசியிலே அவள் முத்தய்யன் குண்டுபட்டுக் கிடக்கும்போது, தானும் சுட்டுக்கொண்டு அவன்மேல் விழுகிறாள். காதல் தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்பதை விவரித்த படம் கள்வனின் காதலிதான்: காரண கர்த்தாக்கள் பானுமதியும். சிவாஜி கணேசனும்.

பானுமதி பெரும்புலி ஒன்றுடன் துளிக்கூட பயமின்றி சண்டிராணி படத்தில் நடித்ததை நாம் பார்த்தோம். ஆனல் இங்கே படத்தில் புலியுருவம் வரையப்பட்ட தலைகாணியைப் பார்த்துவிட்டு அவர் பயப்படுகிருர்! ஆமாம், நவரசங்களில் பயம் ஒன்றல்லவா? பானுமதியின் நடிப்புத்திறனைப் பார்த்தீர்களா? 'ரங்கோன் ராதா'வில் ரங்கமாகத்தோன்றி பயம் *பாவ*த்தை அற்புதமாகப் பிரதிபலித்து நடித்தார் பானுமதி. கோட்டையூர் கோமான் தர்மலிங்க முதலியார். தன் மனைவி ரங்கத்தை பேய் பிடித்தவள் என்கிருர். அவளை எப்படியும் தன்னை வீட்டு வீரட்டி யடிக்கும் நோக்கத்தோடு. மனைவியைக் கொடுமைப்படுத்துகிருர். விளுடிக்கு விளுடி. நிமிடத்திற்கு நிமிடம் தன் செய்கைகளில் நம்பிக்கை யிழந்து பார்ப்பதை யெல்லாம் கண்டு பீதியுறுகிருள் ரங்கம். இனந்தெரியாத பீதிக்கு உள்ளாகி, ரங்கம் தன் செயலிழந்து பயங்கொள்ளியாகி விடுகிருள். கணவனைக் கண்டு, தன் தோழியைக்கண்டு, ஏன் தன் நிழலைக் கண்டேகூடக் கதிகலங்கும் ரங்கத்தை கண்டு நாம் பரிதாபப் பட்டோமல்லவா? பானுமதி இந்த பயரசத்தை எவ்வளவு அழகாகச் சித்தரித்து விட்டார்!

பானுமதி தோன்றும் படங்களில், அவர் ஹாஸ்யக் காட்சிகளில் எப்போதுமே அநுயாசமாக நடிப்பார். அவர் குறும்புக்காரியாகத் தோன்றும் படங்களிலெல்லாம் இரண்டொரு ஹாஸ்யக் காட்சிகள் அவருக்காக என்று நிச்சயம் இருக்கும். பானுமதி நடித்த அபூர்வ சகோதரர்கள், ராணி, கள்வனின் காதலி, மக்களைப் பெற்ற மகராசி போன்ற பல படங்களில், அவர் ஹாஸ்யக் காட்சிகளில் திறம்பட நடித்திருக்கிருர்.

பரணியின் முழு நீள ஹாஸ்யப் படமான 'மணமகன் தேவை' தமிழ்ப் படத்தில், பானுமதி என்ற தனது இயற்பெயரிலேயே தோன்றி மிகச் சிறப்பாக நடித்து ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்தார் பானுமதி. தங்கையின் காதலை நிறைவேற்றி வைக்க அக்காள் பலரை ஏமாற்றி எல்லோரையும் ஒரேயடியாகக் குழப்பி விடுகிருள். கடைசியில் இத்தனை கலாட்டாக்களுக்கும் காரணமாயிருந்த பானுமதியை கல்லூரி பேராசிரியர் மணக்கிருர். 'பேபுலஸ் சினோரிடா' என்ற ஆங்கிலப் படத்தைத் தழுவி தயாரிக்கப்பட்ட 'மணமகன் தேவை'யில் பானுமதி ஹாஸ்ய ரசத்தை ரசிகர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தார் என்பதில் சந்தேகமில்லை.

பானுமதி எதற்கும் அஞ்சாத நெஞ்சமுடையவர். நடிப்பதில் மட்டுமல்லாது, தன்னுடைய குடும்ப வாழ்க்கையிலும் அவர் நெஞ்சுறுதி கொண்டவர். அவர் நடித்திருக்கும் படங்களில் பெரும்பாலானவற்றில் அவர் துணிவுள்ள ஒரு யுவதியாகவே நடித்திருக்கிருர். இவற்றில், தமிழ்நாட்டில் முதன் முதலாக முழுதும் கேவா கலரில் தயாரான "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" படத்தில்தான் பானுமதி வீரிய பாவத்தில் சிறப்பாக நடித்தார். ராணி, சண்டிராணி போன்ற பல படங்களில் அவரது வீரிய பாவம் அப்பழுக்கின்றி இருந்த போதிலும் அலிபாபாவில்தான் இது சிறந்ததாக இருந்தது.

மார்ஜியாளு நன்ருக வாழ்ந்து கெட்ட குடும்பத்துப் பெண். அக்கிரமக்கார அபுஹுஸேனல் அவள் குடும்பம் சிதறியது. தன்னிடம் சகோதரனுகப் பழகிய தௌலத்கானுடன். தன் வாழ்க்கையைத் தானே உறுதியுடன் அமைத்துக் கொள்வதோடு. அபுஹுஸேனே பழிவாங்கியும் விடுகிருள். வீரமிக்க அவளது உதவியால் தான் எல்லாவற்றையுமே வெற்றியோடு முடிக்கிருன் அலிபாபா. இந்தப் படத்தின் நெடுகிலும் பானுமதியின் வீரிய ரசம், மார்ஜியாளுவின் பாத்திரத்திற்கு உயிரூட்டியதை நாம் பார்த்தோமல்லவா?



கொண்டை வகைகள்–1.

சங்குக் கொண்டை

அலை போல் நெளிந்து வரும் அழகான கூந்தலை விதம் விதமாகச் சிங்காரித்துக் கொள்வதன் மூலம் பெண்கள் தனிக் கவர்ச்சியுடன் விளங்க முடிகிறது.

இங்கே-நமது வாசக சகோதரிகளுக்காகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இப்புதுப் பகுதியில் பிரதி மாதமும் ஒரு நூதன கொண்டை வகையைப்பற்றியும், அதைப் போட்டுக் கொள்ளும் முறை பற்றியும் படங்களின் மூலம் விளக்கப்படும். இதில் முதலாவதாக இடம் பெறுவது சங்குக் கொண்டை: இதைப் போட்டுக் காட்டுபவர் நடிகை தனம்.



தேவையான சாமான்
கள் இவ்வளவுதான்

தேவையான சாமான்கள் :

கர்லிங் பின்கள் சில. சாதாரண 'ஸ்லைடு' எனப்படும் வளைவான பின்கள் ஒரு டஜன். அரை முழம் நீளமுள்ள கருப்பு நூல். ஒரு முழம் பூ. ஒரு பிரபை. ஒரு கிராப் சீப்பு. ஒரு குவளை நீர்.

போடும் முறை

முதலில் கூந்தலை நன்றாகப் பிரித்து விட்டு, எண்ணெய் தேவையான அளவுக்குத் தடவிக் கொண்டு, நன்றாகச் சீவி

முதல் கட்டமாக கூந்தல்
நன்றாகச் சீவப்படுகிறது

இரு விரல்களுக் கிடை
யில் ஒரு வளைவு

'கர்லிங் பின்' வளைவில்
பொருத்தப்படுகிறது

விடவேண்டும். பின்னர் சீப்பை தண்ணீரில் நனைத்து வாரி, இரு விரல்களுக்கிடையில் வளைவாகத் தூக்கி (படம்-3), கர்லிங் பின்னைப் போட வேண்டும். இம் மாதிரி கூந்தலுக்கேற்ப - வளைவுகளை ஏற்படுத்தி, கர்லிங் பின்களைப் போட்டு, சில நிமிஷங்கள் இருக்க வேண்டும். இம்மாதிரி வளைவுகள் ஆரம்பத்தில் வருவது கடினமாக இருக்கும். ஆனால் தண்ணீரில் சீப்பை நனைத்து, அடிக்கடி வாரி வந்தால் வளைவு வந்து விடும்.

கர்லிங் பின்கள்' கூந்த
லில் வைத்த பின்

பின்னர் கூந்தலை நேர் வகிடேடுத்து வாரி, பின்புறம் கொண்டு வந்து, மூன்று சம அளவுகளாகப் பிரிக்க வேண்டும். நடுவிலுள்ளதை மெல்லிய கருப்பு நூலைக் கொண்டு, அழுத்தமாகக் கட்டிவிட வேண்டும் (படம்-6) மீதமுள்ள இரு பகுதிகளையும் ஒன்றுடன் ஒன்று முடிச்சுப் போடவும் பின் நடுவிலுள்ள கூந்தலின் நுனியில் ஆள் காட்டி விரலை (படம் - 9) கொடுத்து, பாயைப் போல் சுருட்டி வரவும். பிறகு ஆள்

நூலைக் கொண்டு முடிச்சு போடப்படுகிறது

கூந்தலின் இரு பிரிவுகள் இரு கைகளில்

ஒன்றுக்கொன்று முடிச்சு போடப்படுகின்றன

பாயைப் போல் கூந்தல் சுருட்டப்படுகிறது

காட்டி விரலை வெளியே இழுக்க, கூந்தலும் நீளமாக வெளியே வரும், குழாயைப் போல. இதை அப்படியே வளைவாகச் சுற்றி (படம் - i.) வைத்து, ஸ்லைடுகளைக்கொண்டு பிணைத்து விடவும்.

பின் இடதுபுறமுள்ள கூந்தலை மேலே சொன்னது போலவே சுருட்டி ஏற்கனவே வளைவாக வைத்துள்ள கூந்தலின் மேற்புறமாக சுற்றி வைத்து விடவும்.

கூந்தல் இழுக்கப்படுகிறது விரலால்.

இப்பொழுது கடைசியாக கூந்தலின் மூன்ருவது பகுதிக்கு வரவேண்டும். மேலே விவரித்ததைப் போலவே, இதையும் பாயைப்போல் சுருட்டி, வெளியே இழுக்க வேண்டும். அடுத்து ஏற்கனவே போடப்பட்டுள்ள வளைவின் அடிப்பாகத்தில் (படம் 11 — 12) சங்கின் அடிநுனியைப் போல நீட்டமாக வளைத்துக் கட்டி. பின்களைக் கொண்டு பிணைத்துவிட வேண்டும்.

பின்னர் பிரபையை கொண்டையின் மேல்புறத்தில் (படம் 14 — 15) வைத்து பின்களால் பொருத்திவிட வேண்டும். இதேபோல் கொண்டையின் இடதுபுறமாக. வாங்கியிருக்கும் பூவை இரண்டாக மடித்துச் செருகிவிட வேண்டும்.

இப்போது உங்கள் கொண்டை பூர்த்தியாகி விட்டது. நீங்கள் வெளியே புறப்பட்டுப் போகலாம்.

பிரபை கொண்டையில்
பொருத்தப்பட்டு விட்டது.

சங்குக்•கொண்டை போட்டுக் கொள்பவர்கள் சில முக்கியமான விஷயங்களையும் கவனிக்க வேண்டும். கழுத்தில் மெல்லிய சங்கிலியோ அல்லது முத்து மாலையோ அணிந்து கொண்டால் சிறப்பாக எடுத்துக் காட்டும். காதில் நான் அணிந்துள்ளது போல நூதனமான பம்பாய் வகை லோலாக்குகள் அணியலாம். அல்லது வெறும் கம்மலுடன்கூட இருக்கலாம்.



கொண்டையில் பூ இரண்டாக
மடித்து வைக்கப்படுகிறது

நிற்க, கொண்டை போட்டுக் கொள்வதற்கான கர்லிங் பின்கள் எங்கு கிடைக்கும் என்று சில சகோதரிகள் யோசிக்கலாம். சாதாரணமாக எல்லா வளையல் கடைகளிலும் இவை கிடைக்கும்.

கொண்டை போட்டு முடிந்ததும் இவற்றை பிரஷ்ஷினால் நன்கு துடைத்து வைக்கவும். இப்படிச் செய்வதனால் இவை நீண்ட நாட்களுக்கு வரும்.

ஆரம்பத்தில் கூந்தலை சீப்பைக் கொண்டு சீவுவதற்கு முன்னதாக பிரஷ்ஷினால் கூந்தலை நன்கு சீவி விட்டுக் கொள்ள வேண்டும்.

பூவுடனும் பிரபையுடனும்
கொண்டையின் தோற்றம்

இதனால் கூந்தலிலுள்ள சிக்குகள் நீங்கி, சீப்பைக் கொண்டு சீவுவதற்கும் எளிதாக இருக்கும்.

இதேபோல் வளைவுகளும் ஆரம்பத்திலேயே வந்து விடாது. சீப்பை அடிக்கடி தண்ணீரில் நனைத்து, சீவுவதன் மூலம், இந்த வளைவுகள் உண்டாகி விடும். தவிர, இரு விரல்களுக்கிடையே கூந்தலை அணைத்தால் கூந்தல் மேலெழும்பி வளைவாக நின்றுவிடும். கர்லிங் பின்களை எவ்வளவுக் கெவ்வளவு அதிக நேரம் வைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வளைவுகள் நீடித்து நிற்கும். கர்லிங் பின்களை எடுத்த பின் கூந்தலை மீண்டும் நன்றாக சீவி விடுவது நல்லது.

இந்தக் கட்டுரையைப் படித்து முடித்த பின் உங்களில் சிலருக்கு சில புதிய சந்தேகங்கள் முளைக்கலாம்.

அதாவது "நீளமான கூந்தலை உடையவர்கள் இம்மாதிரி சங்குக் கொண்டையைப் போட்டுக் கொண்டால், கொண்டை மிகவும் பெரிதாக-சற்று விகாரமாக இருக்காதா?" என்று உங்களில் சிலர் கேட்கலாம். மற்றும் சிலர், "கூந்தல் மிகவும் குட்டையாக இருந்தால் என்ன செய்வது?" என்றும் கேட்கலாம்.

நீளமான கூந்தல் கொண்டவர்கள், கூந்தலை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, இம்மாதிரி கொண்டை போட்டுக் கொள்ளலாம். இதனால் கொண்டை விகாரமாகத் தோற்றமளிக்காது.

குட்டையான கூந்தல் உள்ளவர்கள், சவுரியை வைத்து இணைத்துப் போட்டுக் கொள்ளலாம். ஆனால், சவுரியை இணைக்கும் இடத்தில் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பாயைப் போல் கூந்தலைச் சுருட்டிக் கொண்டு வரும் போது, சவுரி இணைக்கப்பட்டுள்ள இடம் நழுவி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து சிலர், "பூவை இடது புறம் தான் வைத்துக் கொள்ள வேண்டுமா? வலது புறம் வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்கலாம்.

கொண்டையில் சற்று வலது புறம் தள்ளித்தான் பிரபை வைக்கப்படுகிறது. எனவே வலது புறத்திலேயே பூவை வைத்துக் கொள்ளக் கூடாது.

"பிரபையைச் சுற்றி, பூவை வட்டமாக வைத்துக் கொள்ளலாமா?" என்றும் கேள்விகள் பிறக்கலாம்.

இம்மாதிரி வைத்துக் கொள்வதனால் கொண்டையின் அழகு நிச்சயம் கெடாது. ஆனல் பூவை இரண்டாக மடித்துத் தொங்க விடுவதில் இருக்கும் அழகு இதில் இருக்காது.

வாழ்க்கைச் சித்திரம்

'அல்லிமுத்து'

எஸ். ஜி. ஈஸ்வர்

புதுக்கோட்டை பாலய்யா எலிமெண்டரி பள்ளிக்கூடத்தில் தமிழ் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஐந்தாம் வகுப்பில் தமிழாசிரியர் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் பாடம் சொல்லிக் கொடுத்து முடிந்ததும், பள்ளியின் வருடாந்திரக் கொண்டாட்டம் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

"ஈஸ்வரா! ஆண்டு விழாவில் நந்தனார் நாடகம் நடத்தவிருக்கிறோம். நீதான் வேதியர் வேடத்தை ஏற்கவேண்டும்" என்றார். ஈஸ்வரன் என்ற அந்த மாணவன் எழுந்து நின்றான். வகுப்பில் ஆசிரியரிடம் பேசுவதற்கே கூச்சமாக இருந்தது அவனுக்கு. எப்படியோ மென்று விழுங்கி, "வேறு யாரையாவது போடுங்கள் சார்" என்றான். ஆனால் ஆசிரியர் அதைப்பற்றிக் கவலைப்படாமல் வேதியர் பாடத்தை அவனிடம் கொடுத்து விட்டுப் போய் விட்டார். குறிப்பிட்ட தினத்தன்று நந்தனார் நாடகம் நடைபெற்றது. பாட்டு, வசன உச்சரிப்பு, நடிப்பு இவற்றுக்காக ஈஸ்வரனுக்கு பிரமாதமான பாராட்டு கிடைத்தது. பள்ளி நாடகத்தில் கிடைத்த பாராட்டுதல் ஈஸ்வரனுக்கு நடிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டது. இந்த இதழில் ரசிகர்களுக்கு அறிமுகமாகும் 'ஆரவல்லி' புகழ் எஸ். ஜி. ஈஸ்வர்தான் நான் மேலே குறிப்பிட்ட மாணவன்.

எஸ். வி. சம்பத்குமார்

நாடக உலகில் பபூன் சங்கரய்யர் என்ற பெயரை அறியாதவர்களே இருக்க முடியாது. அவரது வாழ்த்து கிடைத்தது ஈஸ்வருக்கு. புதுக்கோட்டைக்கு ஏதோ காரியமாகச் சென்றிருந்த பபூன் சங்கரய்யர், ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொஞ்சம் இளைப்பாறினார். சுற்றியலைந்துவிட்டு வந்திருந்த அவருக்குத் தாகமாக இருந்தது போலும். வீட்டு வாயிலில் நின்றிருந்த ஈஸ்வரிடம் குளிர்ந்த நீர் கேட்டார். தன் முன் குளிர்ந்த நீருடன் நின்ற சிறுவன் ஈஸ்வரை ஒரு கணம் ஏற இறங்க பார்த்தார். "தம்பி! நீ நாடகங்களில் நடிக்க விரும்புகிறாயா? அப்படியானால் நீ என்னுடன் வரலாம்" என்றார். தன்னை ஒரு பெரிய ஹாஸ்ய நடிகரான சங்கரய்யர் அழைத்ததில் ஈஸ்வருக்கு சந்தோஷமும் பெருமையும் ஏற்பட்டன. ஆனால் அப்போது ஈஸ்வரின் தகப்பனார் உடல் நலிவுற்றிருந்தார். ஆகவே அவரது தாயாரை அழைத்தார். ஈஸ்வரின் தாயார் சங்கரய்யரிடம், "எங்களுக்கிருப்பது ஒரே மகன்தான். அவனை எப்படி அனுப்புவது?" என்றார். சங்கரய்யர், புதுக்கோட்டை வட்டாரத்தில் தான் நாடகங்கள் நடத்தும்போது ஈஸ்வருக்கு சந்தர்ப்பம் தருவதாகவும், எப்படியும் ஈஸ்வர் நடிப்புத்திறன் மிக்கவர் என்று தனக்குப் படுவதாகவும் கூறிவிட்டு, ஈஸ்வரை மனமார வாழ்த்திவிட்டுப் போனார். அந்த ஹாஸ்ய மேதையின் வாக்கு பொய்யாக முடியுமா?

சக்தி நாடக சபையினர் புதுக்கோட்டை சாந்தநாதபுரத்தில் நாடக ஒத்திகை நடந்தி வந்தனர். ஈஸ்வர் பள்ளிக்குப் போகும் வழியில் அது இருந்ததால் நடிப்பில் ஆர்வம் கொண்ட அவர் சிறிது நேரம் ஒத்திகையைப் பார்த்து விட்டுப் போவார். ராஜகுருவாக நடித்த நம்பியாரின் நடிப்பில் அவர் மனம் வெகுவாக லயித்து விட்டது. தானும் அவரைப் போலவே அதே பாத்திரத்தில் நடிக்க வேண்டுமென்று ஆசைப் பட்டார். இதனால் அவர் அடிக்கடி பள்ளி நாடகங்களில் கலந்து கொண்டு நடித்து வந்தார்.

எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் தேறிய பின் ஈஸ்வர் மேல் படிப்புக்காகச் சென்னை வந்தார். சென்னையில் 1944-ல் அவர் சானிடரி என்ஜினியரிங் வகுப்பில் படித்துத் தேறினார். தேறியவுடன் அவருக்கு பெரம்பூரில் வேலையும் கிடைத்து விட்டது. சென்னை கார்ப்பொரேஷன் சானிடரி என்ஜினியர் வேலை பார்த்து வந்த ஈஸ்வர், பெரம்பூர் நண்பர்களுடன் வில்லன் என்ற நாடகத்தில் நடித்தார். சென்னை சௌந்தரிய மகாலில் நடைபெற்ற அந்த நாடகத்திற்கு 'ஜாவர்' சீதாராமன் தலைமை தாங்கி, ஈஸ்வரின் நடிப்பை மேடையில் பாராட்டிப் பேசியதோடு தனியாக அழைத்தும் பாராட்டினார். பிரபல டைரக்டர் பி. என். ரெட்டியும் அந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு ஈஸ்வரை பாராட்டி ஆசி கூறினார். நடிப்புத் துறையில் ஈஸ்வருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்றும் முழுமூச்சுடன் அதில் ஈடுபடுமாறும் கூறினார்.

சென்னை கார்ப்பொரேஷன் கோஆபரேடிவ் சொசைடியினர் 1953-ல் 'மலர்ந்த வாழ்வு' என்ற நாடகத்தை நடத்தினர். ஈஸ்வர் கதாநாயகன் பாத்திரமேற்று நடித்த அந்த நாடகத்திற்கு அமரர் கல்கி தலைமை தாங்கினார். நாடகத்தில் சிறப்பாக நடித்த இரு நடிகர்களுக்கான வெள்ளிக்கோப்பைகளில் ஒன்றை ஈஸ்வரிடம் கொடுத்து, திறமைசாலியான ஈஸ்வரை பாராட்டிப் பேசவும் செய்தார். அத்துடனின்றி

கல்கி பத்திரிகையிலும் பாராட்டி எழுதினார். இதற்கிடையில் 1952-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி மயிலை ரசிக ரஞ்சனி சபையில் நடைபெற்ற "சுபீட்சம்" என்ற நாடகத்தில் நவமணி தேவியுடன் கதாநாயகனாக நடித்தார் ஈஸ்வர்.

இதன் பிறகு மயிலை அமெச்சூர்ஸ் நாடக குழுவில் ஒருவராகச் சேர்ந்தார் அவர். அங்கே சேர்ந்தபின் 1954-ல் மயிலை ரசிக ரஞ்சனி சபையில் நடைபெற்ற "இளவரசன் ஜூடா" என்ற நாடகத்தில் ஜூடாவாக நடித்தார். இந்த நாடகம் மீண்டும் செயிண்ட் மேரீஸ் ஹாலில் நடைபெற்ற போது, கதாசிரியர், வசனகர்த்தா, டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி ஈஸ்வரின் நடிப்பைப் பாராட்டிப் புகழ்ந்ததுடன், நடிப்பை தொழிலாகக் கொண்டால் நல்ல எதிர்காலம் இருக்கும் என்று கூறினார்.

இந்த ஜூடா நாடகத்திற்கு முன் ஈஸ்வருக்கு சினிமாவிலும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஜெமினியில் காஸ்டிங் அசிஸ்டெண்டாக வேலை பார்த்து வந்த ஜெமினி கணேசன்,

ஈஸ்வரின் உறவினர். ஆகவே கணேசனை பார்ப்பதற்காக ஒரு நாள் ஜெமினி ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தார் ஈஸ்வர். அப்போது 'ஔவையார்' படம் மும்முரமாகச் சுடப்பட்டு வந்தது. கணேசன் ஈஸ்வரிடம், ''ஔவையாரில் ஒரு சிறு வேடம் இருக்கிறது. ஒரே ஒரு வார்த்தைதான் பேச வேண்டும். நீ ஏற்கிறாயா?'' என்றார். கணேசன், ஈஸ்வர் நடித்த மலர்ந்த வாழ்வு, சுபீட்சம் இரண்டு நாடகங்களையும் பார்த்திருந்ததால் அவர் ஔவையாரில் நடிப்பதற்குத் தகுதியுள்ளவர் என்பதை அறிந்திருந்தார். 'நான் தயார்' என்றார் ஈஸ்வர்.

குறிப்பிட்ட தினத்தன்று - வெள்ளிக்கிழமை சரஸ்வதி பூஜையன்று படப்பிடிப்பின்போது, ஜெமினி அதிபர் வாசன் கிரேனில் இருந்தபடி, ஜெமினி கணேசனிடம், ''அந்த தூதுவன் வேஷத்துக்கு யாரைப் போட்டிருக்கிறாய்?'' என்றார். கணேசன் ஈஸ்வரைப் பற்றிக் கூறினார். கொத்தமங்கலம் சுப்புவும் ஈஸ்வரை விசாரித்து வசனமும் பேசச் சொன்னார். வாசனும் வசனத்தைக் கேட்டுவிட்டு, 'வசன உச்சரிப்பு நன்றாக இருக்கிறது. ஆரம்பிக்கலாம்' என்றார். தெய்வீகன் திருமணம் ஔவையார் முன் நடக்கும்போது ஒரு தூதுவன் வந்து, ''அன்னையே ஆபத்து......ஆபத்து! மூவேந்தர்களும் படையெடுத்து வந்து விட்டனர்!'' என்று சொல்ல வேண்டும். ஈஸ்வர் அந்தத் தூதுவன் வேடத்தில் நன்கு நடித்துப் பேசினார்.

ஒரே 'டேக்'கில் அவர் நடிப்பு திருப்திகரமாக இருந்ததைக் குறித்து, ''சிறு வேஷ மேற்பவர் முதல் 'டேக்'கிலேயே 'ஓகே' ஆவது ரொம்ப அபூர்வம்'' என்று வாசனும் ஈஸ்வரைப்

பாராட்டினார். இந்த நிலை ஏற்பட்டதால் தான், படவுலகிலும் நிரந்தர நடிகராக இடம் பெற நல்ல நாடகப் பயிற்சி பெறுவது நல்லது என்று தீர்மானித்து, மயிலை அமெச்சூர்ஸ் குழுவில் சேர்ந்தார் ஈஸ்வர். ஔவையாரை தொடர்ந்து ஜெமினியின் மிஸ்டர் சம்பத், மூன்று பிள்ளைகள் முதலிய படங்களில் ஈஸ்வர் சிறு பாத்திரங்களில் அவ்வப்போது நடித்தார்.

நாராயணன் கம்பெனியார் "கணவனே கண்கண்ட தெய்வம்" படத்தயாரிப்பில் ஈடுபட்டபோது ஜெமினி கணேசன் உதவியால் ஈஸ்வர் சத்யசீலன் என்ற உப தளபதியாக நடிக்கும் சந்தர்ப்பம் பெற்றார். இதனிடையே அவர் 'முருகன் ஓர் உழவன்' நாடகத்தில் ஏழெட்டு முறை நடித்தார். கலாதரின் 'நாமொன்று நினைத்தால்' ஹாஸ்ய நாடகத்தில் அசட்டுப் பையனாக அருமையாக நடித்தார். இது தவிர, விஞ்ஞானி, தி கன்பெஸ் முதலிய நாடகங்களிலும் ஈஸ்வர் முக்கிய பாத்திரங்களில் நடித்தார். அதே சமயம்—அதாவது 1956-ல் ஏ. டி. கே. யின் 'கவர்னர்ஸ் கப்' நாடகம் ஆர். ஆர். சபா, அண்ணாமலை மன்றம் ஆகிய இடங்களில் நடைபெற்றபோது ஈஸ்வரும் அதில் இரண்டாவது கதாநாயகனாக நடித்தார். தியாகராயநகர் கிருஷ்ண கான சபாவில் 'ராமாயணம்' நாடகம் நடந்தபோது ஈஸ்வர் அதில் ராமராக நடித்தார். அப்போது கணேசன் அவரிடம் வந்தார். "ஈஸ்வர்! ஆற்றிலே ஒரு காலும் சேற்றிலே ஒருகாலும் வைத்தால் ஒன்றும் ஆகாது. ஆகவே வேலையா நடிப்புத் தொழிலா, என்பதைத் தீர்மானித்து முடிவு செய்து விட வேண்டும்" என்றார். ஈஸ்வர் சிறிது அவகாசம் கேட்டு ஒரு முடிவுக்கு வந்தார். வேலையை ராஜினாமா செய்து விட்டார்!

கணவனே கண்கண்ட தெய்வம் காமிராமேன் பி. எஸ். ரங்கா, ஈஸ்வரின் நடிப்பைப் பாராட்டியவர்களில் ஒருவர். அவர் சொந்தத் தயாரிப்பில் ஈடுபட்டதும் 'தெனாலி ராமன்' படத்தில் ஈஸ்வர் பாமினி சுல்தான்களில் ஒருவராக நடிக்கும் சந்தர்ப்பம் பெற்றார்.

இதன் பிறகு மாமன் மகள், பத்தினி தெய்வம், பெண்ணின் பெருமை, காலம் மாறிப் போச்சு முதலிய படங்களில் கணேசனின் உதவியால் ஈஸ்வர் நடித்தார். 'மாயா பஜார்' படத்தில்தான் ஈஸ்வர் முதன் முதலாக நிறைய சந்தர்ப்பம் பெற்றார். இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களுள், விஜயா புரொடக்ஷன்ஸ் டெலிபோன் ஆபரேட்டர்களான பத்மனாபன் - ரங்கநாதன் சகோதரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களிடம், யாராவது தயாரிப்பாளர்கள் கேட்டால், தன்னைப்பற்றிக் கூறும்படிக் கேட்டிருந்தார் ஈஸ்வர். கே. வி. ரெட்டி அவர்கள் சாத்யஹி பாத்திரத்திற்கு ஆள் தேடும்போது, சகோதரர்கள் ஈஸ்வரைப் பற்றிக் கூறி, அறிமுகப்படுத்தவும் செய்தனர். கே. வி. ரெட்டி ஈஸ்வரின் திறனை எடை போட்டு ஒப்பந்தமும் செய்து விட்டார்.

சாத்யஹி பாத்திரத்தில் ஈஸ்வர் நடிக்கும் போது, டி. ஆர். சுந்தரம் ஒரு தினம் 'மாயா பஜார்' செட்டுக்கு வந்திருந்தார்.

சுந்தரத்திடம் கே. வி. ரெட்டி ஈஸ்வர், இளம் நடி மோகனா இருவரையும் அறிமுகப் படுத்தியதுடன், "திறமையும் ஆர்வமும் கொண்ட இவர்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று சிபாரிசும் செய்தார். உட்லண்ட்ஸில் தன்னை வந்து சந்திக்கும்படிக் கூறிவிட்டுப் போய்விட்டார் சுந்தரம். ஈஸ்வர் டி. ஆர். எஸ். அவர்களை உட்லண்ட்ஸில் சந்தித்தபோது அவருடைய விலாசத்தை வாங்கிக் கொண்டு, "நான் பிறகு தெரிவிக்கிறேன்" என்று கூறி அனுப்பி விட்டார் சுந்தரம்.

இதனிடையே ஒய். ஜீ. பி. யின் எமன் ஏமாந்தால், நள்ளிரவில் நடந்தது, டயல் மிஸ்டர் சஞ்சீவி, பிரபல முட்டாள் முதலிய நாடகங்களிலும், ரஸ்புடீன் நாடகத்திலும் ஈஸ்வர் நடித்தார். பிரபல முட்டாள் நாடகத்தை எம். ஜீ. ராமச்சந்திரன் பார்க்க நேர்ந்தது. ஈஸ்வரின் திறமையைப் பாராட்டிய எம். ஜீ. ஆர்., "அடிக்கடி என்னை வந்து பாருங்கள். என்னால் இயன்ற வரை சந்தர்ப்பம் பெற்றுத் தருகிறேன்" என்றார். அதன்படி 'குமார



தேவன்' படத்தில் சந்தர்ப்பம் பெற்றுத் தரவும் செய்தார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸி லிருந்து தந்தி வந்தது ஈஸ்வருக்கு. அங்கே சென்ற அவர் ஆரவல்லியில் அபிமன்யு வேடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடைசியில் டி. ஆர். சுந்தரம் அவரை கதாநாயகன் அல்லிமுத்து பாத்திரத்தில் நடிக்கச்செய்து விட்டார். மோகனாவும் சகோதரிகளில் ஒருத்தியாக—சூரவல்லியாக—நடித்தார். ஈஸ்வர் அப்படத்திலே அதி இயற்கையாக நடித்து ரசிகர்களால் பாராட்டப் பட்டதுடன். 'பேசும்படம்' தேர்வுக் குழுவாலும் 1957-ன் சிறந்த புது முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்போது ஈஸ்வர் லலிதா பிலிம்ஸ் லவகுச (வர்ணப்படம்). கெம்பராஜின் பாளையங்கோட்டைத் தேவன், எம். ஜி. ஆர். மூலம் நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ் படம் முதலியவற்றில் நல்ல பாத்திரங்களில் நடித்து வருகிறார். படங்களுடன் கண்ணப்பாவின், 'பரோபகாரி', கோபாலகிருஷ்ணனின் 'சொன்ன சொல்' மற்றும் பல நாடகங்களிலும் நடித்து வருகிறார். 'அனார்கலி' நாடகத்திலும் அவர் கதாநாயகனாக நடித்து வந்தார்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த நிலச்சுவான்தார் ஆர். சுப்பய்யர் - சரஸ்வதி அம்மாள் தம்பதிகளின் ஒரே மகனாக 1928-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி பிறந்தார் ஈஸ்வர். அவருடன் பிறந்தவர் பிரகதாம்பாள் என்ற ஒரு சகோதரி. அவருக்குத் திருமணமாகி விட்டது. ஈஸ்வர் பள்ளி நாட்களில் கால் பந்து விளையாடுவார். படங்கள் பார்ப்பதும் புத்தகங்கள் படிப்பதும் அவரது பொழுது போக்குகளாகும்.

உணர்ச்சி வசப்படுத்தும் பாத்திரங்களிலும், நயவஞ்சக வில்லனின் பாத்திரத்திலும் நடிப்பதில் ஈஸ்வருக்கு மிகுந்த விருப்பமுண்டு. படவுலகில் புகழ்பெற்ற பின்பே மணம் செய்து கொள்ள அவர் தீர்மானித்திருக்கிறார்.

அன்பும், பண்பும், செய்யும் தொழிலில் மனம் பூராவும் ஈடுபடுத்தும் ஆர்வமும் கொண்ட ஈஸ்வருக்கு திரைக்கேற்ற நல்ல முகவெட்டும், தகுந்த உடற்கட்டும் இருக்கின்றன. தவிர, நடிப்பிலே ஓரளவுக்கு நல்ல அனுபவமும் இருக்கிறது. தயாரிப்பாளர்கள் துணிந்து இவருக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கொடுத்து ஊக்குவிக்கலாம்.

ஜெமினி கணேசன் ஈஸ்வரின் உறவினர் என்று குறிப்பிட்டேன். இன்றைய நிலைக்கு ஈஸ்வர் உயர முக்கிய காரணமாக இருந்தவர் கணேசன்தான். எம். ஜி. ஆரும் ஈஸ்வரின் எதிர்காலத்திற்காக உதவி வருகிறார். கலைஞர்களின் ஒத்துழைப்பும் திறமையும் இருக்கும்போது ஈஸ்வர் மிக விரைவில் நக்ஷத்திர பதவி யடைவார் என்பதில் சந்தேகமில்லை யல்லவா?





தீபாவளிக்கு
எமது
வாழ்த்துக்கள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம், லிமிடெட்
பாலசுந்தரம் மாளிகை
34-A/1, பாந்தியன் சாலை :: மதராஸ் - 8.
SISTAS

மோகனின் பட்டணப் பிரவேசம்

சதாசிவம்-அம்புஜம் தம்பதிகள் திருச்சியிலே வசிக்கிறார்கள். செல்வந்தரான சதாசிவத்தின் ஒரே மகன் மோகன். அவன் ஒரு நாடகப் பைத்தியம். சேகர் என்ற நண்பனுடன் அவன் நாடகம் நடத்துவதில் தீவிர கவனம் செலுத்துகிறான். தன் பிள்ளை கூத்தாடியாவதை விரும்பாத சதாசிவம், மோகனை, சென்னையிலுள்ள தன் நண்பர் அப்பாதுரை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையில் கண்டிப்பான பேர் வழியான அப்பாதுரை மூலம் தன் மகன் திருந்தி விடுவான் என்று நம்புகிறார் சதாசிவம். மோகன் தன் நண்பன் சேகரையும் அழைத்துக்கொண்டு சென்னை செல்கிறான். மோகனும் சேகரும் ஒரு ஓட்டலில் தங்குகிறார்கள் மோகன் சேகரிடம் தன்னைப்போல் நடிக்கும்படி கூறி ஒரு கடிதமும் கொடுத்து அப்பாதுரையிடம் அனுப்பி விடுகிறான். சேகர் அப்பாதுரையின் வீட்டில் ராஜ



வசனம் : ப.நீலகண்டன்

போகத்துடனிருக்கிறான். அவர் மகள் மால திக்கும் அவன் மீது அடங்காக்காதல்!

ஓட்டலில் தங்கி யிருக்கும் மோகன் பிடில் வாசிக்கும்போது, அவன் உடமைகளை யெல்லாம் தன் வீட்டுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்கிறார் அப்பாதுரை. அதனால் அவனை ஓட்டல்காரர் பணம் கேட்க, அதைக் கொடுக்க வழியில்லாத மோகன், ஓட்டல்காரனுக்குப் பயந்து ஓடும் போது பஸ்ஸில் ஒரு பெண்ணைச் சந்திக்கிறான். மீனா என்ற அந்தப் பூக்காரப்பெண், தன்னை ஒரு யுவன் முறைத்துப் பார்ப்பது கண்டு,பயந்து இறங்கிப் போய் விடுகிறாள். அவள் தவறிவிட்டுப் போன பணப் பையை அவளறியாமல் ஒரு கடிதத்துடன் அவளைத் தொடர்ந்து போய் அவள் வீட்டிலேயே வைத்து விட்டுத் திரும்பு மோகன்.

காட்சி 2

ராஜாவின் எச்சரிக்கை

மோகனிடம் துப்பாக்கியைக் காட்டி பணம் கேட்கிறான் ராஜா என்ற வாலிபன். அவனுக்குப் புத்திமதி கூறி, அவனுடன் அவன் வசிக்கும் குப்பத்திற்குச் செல்கிறான் மோகன். ராஜாவின் இருப்பிடத்தில் தூக்கம் பிடிக்காமல் மோகன் தவிக்கும்போது, எதிர்பாராத விதமாக மீனாவை அங்கே பார்க்கிறான். மீனா ஒரு தேசபக்தரின் மகள் என்று கூறுகிறான் ராஜா. மோகனுக்கு அவள் மீது காதல்!

(109-ம் பக்கம் பார்க்க)

உங்களுக்கு எங்கள்

தீபாவளி

வாழ்த்துக்கள்

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

துஷார் வனஸ்பதி, நிராலா சோப் தயாரிப்பவர்கள்.



பூவைப் போல . . .
உங்கள் மேனியை மலரச் செய்வது
ரெக்ஸோனு
Rexona
BLENDED WITH CADYL
ரெக்ஸோனு சோப்பில் இருப்பது கேடில்
—பற்பல எண்ணெய்கள் கலந்த விசேஷத்
தைலமாகிய கேடில், சருமத்திற்கு
ஊட்டமளித்து உங்கள் இயற்கை
அழகை வெளிக்கொணரத் துணைபுரியும்.
கேடில் கலந்த டாய்லெட் சோப் இது ஒன்றே
RP. 152-50-55 TM

நரசு ஸ்டூடியோஸ்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

காட்சிகள்



நரசு ஸ்டுடியோ
ஸாரின் "கூடி வாழ்ந்
தால் கோடி நன்மை"
தமிழ்ப் படத்தில்
எஸ். எஸ். ராஜேந்
திரனும் பி. சரோஜா
தேவியும் பிரதம நடி
கர்கள்.



பிரேம் நசீர், கிரிஜா, டி. பாலசுப்பிரமணியம், எஸ். வி. சுப்பய்யா, வி. கே. ராமசாமி, சி. கே. சரஸ்வதி, கணபதிபட் முதலியோரும் இப்படத்தில் நடித்து வருகின்றனர்.

'இரு சகோதரிக'ளுக்குப் பின் நரசு விலிருந்து வெளிவரும் இந்தச் சமூகப் படம் ஜனரஞ்சகமான முறையில் தயாராகி யிருக்கிறது. இன்னும் சில தினங்கள்தானே, பொறுத்திருங்களேன் !

ஸ்டுடியோ விஜயம்

"அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும்" என்று விளம்பரம் செய்து, மழைக் காலத்தில் நாடகக் கம்பெனிகள் நாடகத்தை ஆரம்பிப்பது வழக்கம். அதைப் போலவே சென்ற மாத மத்தியில் சென்னை நகரில் பருவக் காற்று காரணமாக இரண்டு மூன்று நாள் சூரியனையே காணமுடியாமல் அடை மழை பிடித்துக் கொண்டும், ஸ்டுடியோக்களில் மட்டும் படப்பிடிப்புகள் நடந்து கொண்டிருந்தன.

எப்போதும்போல வாஹினி - விஜயா ஸ்டுடியோக்களும் பாரமவுண்டும் சுறுசுறுப்பாகவே இருந்தன. பாரமவுண்டில் மின்னல் வீரன், ஆர். ஏ. பிக்சர்ஸ் படம், அல்லி பெற்ற பிள்ளை ஆகிய படங்களுக்கும், வாஹினியில்பவானி, கல்யாணப் பரிசு ஆகிய படங்களுக்கும்,கோல்டனில் கெம்பராஜ் படத்துக்கும் அந்த வாரத்தில் ஷூட்டிங்குகள் நடந்தன.

கெம்பராஜ் டைரக்ஷனில் அவரே தயாரிக்கும் 'தயாரிப்புநெம்பர் ஏழு' என்ற படத்தின் கதை ஒரு மர்ம சம்பவத்தைக் கேந்திரமாகக் கொண்டது. நான் பார்த்தபோது ஒரு ஜமீன்தாரை ஒரு கொள்ளைக்காரன் கொல்ல முயற்சித்துக்

ஆர். ஏ. பிக்சர்ஸ் புரொடக்ஷன் நெ. 1. படத்தின் நடிகர், தயாரிப்பாளர், கலைஞர்கள்



'பவானி' படத்தில் காஸ்ட்யூம் நடராஜனுடன் 'புரட்சி நடிகர்' எம். ஜி. ஆர்.



கெம்பராஜின் புரொடக்ஷன் ஏழு சமூகப் படத்தில் எஸ். ஜி. ஈஸ்வர்.

கொண்டிருந்தான். அப்போது திடீரென்று அங்கே ஒரு குடியானவன் தோன்றி அந்தக் கொள்ளைக்காரனிடம் ஏதோ சொல்லி அந்தக் கொலையைத் தடுத்தான். இந்தப் படப்பிடிப்பில் கெம்பராஜ், பாலாஜி, கிட்டான் ஆகியோர் நடித்தனர். 'சபாஷ் மீனு' மாலினி. 'குலதெய்வம்' விஜயகுமாரி, காகா ராதாகிருஷ்ணன், அங்கமுத்து, மனோரமா, நாகய்யா, கோபாலகிருஷ்ணன் எஸ். ஜி. ஈஸ்வர் முதலியவர்கள் நடிக்கும் இப்படத்தின் கதை,வசனத்தை புரட்சிதாசன் எழுதியிருக்கிறார்.

* * *

சாதாரணமாக வெளிவரும் எல்லா தமிழ்ப் படங்களிலும்

ரங்கா பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' படத்திற்கான பாடல் பதிவாக்கப்படுகிறது.

நல்ல பாம்பு வருவதுண்டல்லவா? ஆனால் அல்லி பெற்ற பிள்ளையில் அசல் தேள்களின் கூட்டம் நடிக்க வந்திருந்தது. ஒரு பெருங்காய டப்பா நிறைய தேள்களை வைத்துக்கொண்டு ஏ. கருணாநிதியும் முத்துலக்ஷ்மியும் 'விளையாடி'க் கொண்டிருந்தனர்,

லாடக்காரனாக நடிக்கும் சாயிராமின் மகன் பல வேஷமாகப் பாத்

'பவானி' நடிகர் எம். ஜி. ஆரும் அதன் டைரக்டர் மஸ்தானும்.

கே. எம். டி. வி. என். ''மனைவியே மனிதனின் மாணிக்கம்'' படத்தின் சம்பந்தப்பட்டவர்கள்.

பொன்னலூரியின் ''தெய்வ பலம்'' படக் கதாநாயகி ஜெயஸ்ரீ.

திரமேற்றிருக்கிருர் ஏ. கருணுநிதி. யாரோ ஒருவர் லாடம் அடித்ததற்குக் காசு கொடுக்கவில்லையென்று அந்த வீட்டிற்கு பலவேஷம் போனுன். அங்கே ஆண்பிள்ளை—அதாவது தகப்பனுர் வீட்டிலில்லை. மகள் பாவாயிதான் இருந்தாள். பலவேஷமும் பாவாயியும்...சும்மா...அப்படியே...அறிமுகமாயினர்! பிறகு பலவேஷம் விடை பெற்றுக் கொண்டு வெளியே திரும்பினதும் உள்ளே பாவாயி தேளிடம் மாட்டிக் கொண்டு கூச்சல் போட்டாள். உடனே உள்ளே வந்து அவளைக் காப்பாற்றினுன் பலவேஷம். இந்தச் சம்பவத்தால் அவர்கள் நட்பு வளர்ந்திருக்குமல்லவா? ஏறக்குறைய அதே சமயம் அப்பாவும் வந்து விட்டார். விஷயத்தைக் கேட்டதும் அவர் மூர்ச்சையாகி விட்டார். 'தேள்' என்ற வார்த்தை அவர் காதில் விழுந்தால் அவருக்கு அப்படி வருவது வழக்கமாம்!

ஏ. டி. கே. புரொடக்ஷன்ஸ் ''அறிவாளி'' படத்தின் செட்டில் நடிகர்களுடன் ஸ்ரீ பாபு பிலிம்ஸ் அதிபர்களான என். எம். ஆர். வி. மஹாதேவனும், ஆர். எம். ராமாசாரியும் டைரக்டர் ஏ. டி. கே.யும்.

மனக்குழப்பம்

உங்களுக்கு

ஏற்படும்

பொழுது.

தேநீர்

அதைப்

போக்குகிறது

TEA BOARD INDIA



நான்தான் டீ

மோசமான நிலையிலும், உயர்ந்த நிலையிலும் உங்களுக்கு நான் நண்பன்.

PST 204

வீனஸ் பிக்சர்ஸ் 'கல்யாணப்பரிசு' செட்டில் விஜயகுமாரிக்கு 'வெட்கப்பட'ச் சொல்லித் தருகிறார் படத்தின் டைரக்டர் ஸ்ரீதர்.

இந்தத் தமாஷான காட்சியிலே முத்துலக்ஷ்மிதான் பாவாயியாக நடித்தார் என்று சொல்லியா தெரியவேண்டும்? எஸ். வி. ராஜ கோபால் என்பவர் அப்பாவாக நடித்தார். மற்றும் இப்படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சஹஸ்ரநாமம், சம்பந்தம், ஏழுமலை, சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, பண்டரிபாய், எம். என். ராஜம் முதலியோர் நடிக்கின்றனர். முக்ராம் ஷர்மா எழுதிய இக் கதைக்கு ஏ.பி. நாகராஜன் தமிழ் வசனங்களை எழுதுகிறார். தயாரிப்பாளர்களான மகாதேவன் சங்கீதத்துக்கும் மருதகாசி பாடல்களுக்கும் பொறுப்பேற்றுள்ளனர். கே. சோமு டைரக்ட் செய்யும் படம் இது.

* * *

முகமூடி வீரனிடம் மகாவீரனான தானும் ஏமாந்து போன சோகக் கதையை மயக்கமூகி மனோரமாவிடம் அழமாட்டாத குறையாகச் சொல்லிக் கொண்டிருந்தான் சுந்தரம். தன்னையே ஏமாற்றி விட்டானே என்ற அவமானம் அவனைப் பொசுக்கியது. அவன் நிலையைக் கண்டு ஏளனம் செய்தாள் மனோரமா. தான் போய் அவனை ஏமாற்றி ஜெயித்து வருவதாகக் கூறினாள். "ஆண்களால் முடியாததை நீயா சாதிக்க முடியும்?" என்று கேட்டான் சுந்தரம். "நிச்சயமாகப் பெண்களால்தான் இது சாத்தியம்" என்றாள் அந்த சாகஸக்காரி மனோரமா.

டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ் 'மின்னல் வீர'னில் இப்படியொரு காட்சி வருகிறது. இதில் பி. எஸ். வீரப்பா சுந்தரமாகவும் வனஜா மனோரமாவாகவும் நடித்தனர். ஏ. எல். நாராயணன் கதை-வசனம் எழுதியுள்ள இப்படத்தை ஜம்பனா டைரக்ட் செய்து வருகிறார்.

* * *

மன்னர் மன்னன் - அதாவது சக்ரவர்த்தி ஒருவரின் மாபெரும் அரண்மனை. அதன் தர்பார் மண்ட



கோபி பிரதர்ஸ் தயாரிக்கும் 'ஓடாதே நில்' செட்டில் நடிகர்களும் கலைஞர்களும்.

பத்தில் மந்திரி பிரதானிகள், தள பதிகள், சேனுவீரர்கள், சேவகர் கள் ஆகியவர்கள் புடைசூழ மன்னுதி மன்னன் சிங்காதனத்திலே வீற்றிருந்தார். பி. எஸ். வீரப்பா எதிரிலே யாரையோ சுட்டிக் காட்டித் தனக்கே உரித்தான தோரணையில் கர்ஜித்துக் கொண்டிருந்தார்.

''குற்றங்களை மறுக்கவில்லை, காரணம் கூறுகிருன். அவமானப் படுத்தினதோடு நிற்கவில்லை, திட்டமிட்டுத் தீங்குமிழைத்திருக்கிருன். ஒற்றர்களை அனுப்பியிருக்கிருன் குமரியின் படைபலம் அறிய. பிடிபட்டால், காம்போஜத்தைச் சேர்ந்தவன் என்று சுச்சிதமாகக் கூறும்படிப் புத்திமதியும் உரைத்து!''

இந்த வசனத்தை வீரப்பா சொல்லும்போது அவர் குமரிநாட்டில் இருந்தார் என்று தெரிந்தது. ஆனுல் அவர் யார், யாரைக் குற்றம் சாட்டுகிருர் என்பதெல்லாம் கதாசிரியர் ஏ. கே. வேலனையாவது வசன கர்த்தா கண்ணதாசனையாவது கேட்டுத்தான் சொல்லவேண்டும். ஸ்வஸ்திக் பிலிம்ஸார் தயாரிக்கும் மாபெரும் படமான 'பவானி'யில் இப்படியொரு காட்சி வருகிறது. எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்திரன் இருவரும் நடிக்கும் இப்படத்தை மஸ்தான் டைரக்ட் செய்து வருகிருர்.

*   *   *

பொழுதுபோகவில்லை யென்ருே, அல்லது பந்தயத்துக்காகவோ ஜெமினி கணேசனும், தங்கவேலுவும் 'காரம்' விளையாடிக் கொண்டிருந்தனர். தப்பும் தவறுமாக வெளுத்துக் கட்டினுர் தங்கவேலு. இதைப் பார்த்து எம். சரோஜா 'உங்களுக்கு ஆடத் தெரியாதா?' என்று கேட்டார். 'யார் சொன்னது? பள்ளிக்கூடத்திலே நான் படிக்கிறபோது நான்தான் சாம்பியன்' என்று புளுகினுர் தங்கவேலு. இதைக் கேட்டு கணேசனுக்கு சிரிப்பும் கோபமும் வந்தது. ஆனுல்...?

வீனஸ் பிக்சர்ஸார், வசனகர்த்தா ஸ்ரீதர் டைரக்ஷனில் தயாரிக்கும் 'கல்யாணப் பரி'சில் வருகிறது இந்த ஹாஸ்யக் காட்சி. பாஸ்கர், சம்பத் என்ற நண்பர்களாக முறையே ஜெமினி கணேசனும் தங்கவேலுவும் இதில் நடிக்கின்றனர். சம்பத்தின் மனைவி மாலினியாக வருகிருர் எம். சரோஜா. சரோஜாதேவி, விஜயகுமாரி முதலியவர்களும் இப்படத்தில் நடித்து வருகிருர்கள்.

சரவணபவா-யூனிடி நான் வளர்த்த தங்கை

சரவணபவா—யூனிடியின் "நான் வளர்த்த தங்கை" தமிழ்ப்படம் தீபாவளித் திருநாளன்று திரைக்கு வரவிருக்கிறது. ஸியெச். நாராயண மூர்த்தியின் டைரக்ஷனில் தயாராகியிருக்கும் இப்படத்தின் வசனங்களை ரா. வே. எழுதியிருக்கிருர். ராமசாமி ஒளிப்பதிவாளர்—சேகர் இதன் ஒலிப்பதிவாளர்—ராமராவ் கலையமைப்பாளர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் தஞ்சை ராமய்யா தாசும் பாடல்களை இயற்றியிருக்கிருர்கள். சங்கீத டைரக்டர் பெண்டியாலா நாகேஸ்வரராவ். இப்படத்தின் உதவி டைரக்டர் டி. கே. ராமு. ஒரு அருமையான குடும்பக் கதையைக்கொண்ட இந்தப் படத்தில் ஹெலனின் நடனமும் சிறப்பாக இருக்கும். சுந்தரிபாய், சூர்யகலா, பண்டரிபாய், மைனுவதி, 'குலதெய்வம்' ராஜகோபால், பிரேம்நசீர், டி. கே. ராமச்சந்திரன், டெய்சி இரானி ஹனி இரானி முதலியோர் நடித்திருக்கிருர்கள்.



திரை உலகம் திரண்டு எழுந்தது

தென்னகம் கண்டிராத வகையில், சென்னை நகரில் சென்ற மாதம் ஒரு மாபெரும் ஊர்வலம் நடை பெற்றது. என் தெரியுமா?

வர்ணம்

சென்னை – மவுண்ட் ரோடு ரேவதி ஸவுண்டு ஸர்வீஸி லிருந்து தெ. இ. நடிகர் சங்கம். ஊர்வலம் கிளம்புகிறது.

கஸ்தூரி பிலிம்ஸ் சுப்புராமனை, சாரங்கபாணி தமாஷ் செய்வதை டைரக்டர் பி. புல்லய்யா கவனிக்கிறார்.

சினிமாத் தொழிலுக்கு அத்தியாவசியமான மூலப் பொருள் கச்சா பிலிம்தான். இது நம் நாட்டில் தயாராவதில்லை. முழுக்க முழுக்க அந்நிய நாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கிறது.

இந்திய சர்க்கார் இந்த கச்சா பிலிம் இறக்குமதியை நாற்பது சதவீதம் வெட்டியிருக்கிறார்கள். நமது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள், மற்றும் இதர பொருள்களை அயல் நாடுகளிலிருந்து வாங்க, அந்நியச் செலவாணியைப் பெருக்குவதற்காக, சில இறக்குமதி பண்டங்களின் மீது கட்டுப்பாடு விதித்திருக்கிறார்கள். இந்தப் பண்டங்களின் வரிசையில் கச்சா பிலிமும் இடம் பெற்றிருக்கிறது.

கச்சா பிலிம் இறக்குமதியில் நாற்பது சதவீதம் வெட்டப்பட்டதால் சர்க்காருக்குக் கிடைக்கும் அந்நியச் செலவாணி இரண்டு கோடி ரூபாய்கள். ஆனால், நமது படங்கள் அயல் நாட்டிற்கு அனுப்பப் படுவதன் மூலம் இந்தத் தொகையையும் படவுலகம் மீட்டுத் தந்து விடுகிறது.

இன்று இந்த வெட்டினால் படவுலகம் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. கச்சா பிலிம் பற்றுக்குறை பல புதிய பிரச்னைகளை உண்டாக்கி யிருப்பதுடன், படப்பிடிப்பில் கால தாமதத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கி யிருக்கின்றது. இதனால் ஏராள

தெ. இ. சி. தொழிலாளர் சங்கத்தினருடன் வி. ஆர். ராஜகோபால்



ஜன சமுத்திரத்திடையே, 'லட்சிய நடிகர்' எஸ். எஸ். ராஜேந்திரன்

விஜயா-வாஹினி ஊழியர்களும் கலந்து கொண்டனர் ஊர்வலத்தில்

1. வந்தனோபசாரம் கூறிய புரட்சி நடிகர், ஆவேசத்துடன் பேசினார். 2. 'உள்நாட்டில் உற்பத்தியாகாத பொருளுக்கு இறக்குமதி வெட்டு செய்வது வித்தை!' என்றார் சிவாஜி. 3. "கச்சா பிலிம் வெட்டினால் பாதிக்கப்படுவது நடிகர்களல்ல; தொழிலாளர்கள்தான்!" என்றார் ஜெமினி. 4. என். டி. ராமராவ் தெலுங்கில் பேசினார். 5. இலட்சிய நடிகர் 'கச்சா பிலிம் இறக்குமதி வெட்டு உடனடியாக நீக்கப்பட வேண்டும்' போன்ற சில தீர்மானங்களைக் கொண்டுவந்தார். 6. ஔவை ஷண்முகம் பேசுகிறார். 7. ஏ. நாகேஸ்வரராவ் குரலெழுப்புகிறார். 8. சிரிக்கப் பேசி சிந்தனையைக் கிளறிவிட்டார் தங்கவேலு.





மான தொழிலாளர்கள் வேலையை இழக்கும்படியான சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் நன்கு ஆலோசித்து கச்சா பிலிமுக்கு விதித்திருக்கும் இறக்குமதி வெட்டை அறவே நீக்கி விடுமாறு மத்திய சர்க்காருக்கு வேண்டுகோள்கள் பல படவுலகின் சார்பில் விடுவிக்கப்பட்டுள்ளன. தவிர, சென்னை அரசாங்கமும் இதை டெல்லி சர்க்காருக்கு அறிவித்து, படவுலகின் தற்போதைய மோசமான நிலையை உணர்த்தியிருக்கிறது.

ஆனால் மத்தியசர்க்காரிடமிருந்து இதற்கு யாதொரு விதமான பரிகாரமும் தெரிவிக்கப்படவில்லை. நாளுக்கு நாள் படவுலகை நசிக்கச் செய்து வரும் இந்த அபாய நிலையை வளரவிடுவதால் நேரக்கூடிய விபரீதங்களை விளக்கவும், பொது மக்களுக்கு இதைத் தெரியப்படுத்தி, அவர்களது கவனத்தை ஈர்ப்பதற்காகவும் இந்த 'கண்டன ஊர்வலம்' ஏற்பாடு செய்யப்பட்டது.

நடிகர்கள், நடிகைகள், ஒளிப்பதிவாளர்கள், ஒலிப்பதிவாளர்கள், டைரக்டர்கள், கதை - வசனகர்த்தாக்கள், தயாரிப்பாளர்கள், துணை நடிகர்கள் இப்படியாக திரைப்பட உலகமே திரண்டு எழுந்து வந்து இந்த மாபெரும் ஊர்வலத்தை நடத்தியது.

தெ. இ. நடிகர் சங்கம், தெ. இ. சி. டெக்னீஷியன்கள் சங்கம் தெ. இ. சி. ஊழியர்கள் சங்கம், துணை நடிகர்கள் சங்கம், தெ. இ. சி. பத்திரிகையாளர் சங்கம் மற்றும் பல சங்கங்களின் ஒத்துழைப்புடன் இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னை மவுண்ட்ரோடு, வாலாஜா ரோடு, பெல்ஸ் ரோடு ஆகியவற்றின் வழியாக சுமார் நான்கு மைல்கள் நடந்து ஊர்வலம் திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது.

ஊர்வலத்தில் 'கச்சா பிலிம் வெட்டை ரத்து செய்', 'கலைஞர்களைப் பிழைக்க விடு', 'படவுலகில் வேலையில்லா திண்டாட்டத்தை ஏற்படுத்தாதீர்கள்', 'டில்லி சர்க்காரே! சென்னை அரசாங்கம் சொல்வதை செவி கொடுத்து கேளுங்கள்' என்பன போன்ற பல அட்டைகளை - பல மொழிகளில் - பிடித்தபடி நடிகர்களும், இதர கலைஞர்களும் வந்தனர். சிலர் 'கலைவாழ்க - சினிமா வாழ்க - கச்சா பிலிம் வெட்டு ஒழிக' என்று உற்சாகமாக, உரக்கக் கூவி வந்தனர். எம். ஜி. ஆர்., சிவாஜி, தங்கவேலு, நம்பியார் முதலியோரும் தங்கள் குரலை பலக்க எதிரொலித்தனர்.

கடற்கரையில் டைரக்டர் கே. சுப்ரமணியம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தை அமைக்க நிறுவப்பட்ட கமிட்டியின் சார்பில் நிமாய் கோஷ் பேசினார். கச்சா பிலிம் வெட்டினால் ஏற்படக்கூடிய பாதகங்களை அவர் விளக்கினார். அடுத்து என். டி. ராமராவ், ஜெமினி கணேசன், ஏ. நாகேஸ்வர ராவ், டி. கே. ஷண்முகம், சிவாஜி கணேசன் மற்றும் பலர் பேசினார்கள். எஸ். எஸ். ராஜேந்திரனால் கச்சா பிலிம் வெட்டை உடனடியாக ரத்து செய்யக்கோரி கொண்டு வரப்பட்ட தீர்மானமும், மற்றும் சிலவும் நிறைவேற்றப்பட்டன.

எம். ஜி. ஆர். வந்தனோபசாரம் கூற விழா முடிந்தது.

திரண்டெழுந்திருக்கும் படவுலகினருக்கு மக்களின் பேராதரவு இருக்கிறது. சென்னை சர்க்காரும் நிலையை விளக்கியிருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார் உடனடியாக கச்சா பிலிம் வெட்டை ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

'பவானி'யில் பி. எஸ். சரோஜா – எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆர். கதாநாயகனுக ஒரு படத்தில் நடிக்கிருர் என்ருல் பகட்டான உடை, அணிகளோடு, கையில் வாளுடன்தான் அவர் வருவார் என்று பெரும்பாலான ரஸிகர்கள் எதிர்பார்க்கிருர்கள். அது தவருன யூகமல்ல என்பதை 'பவானி' படத்திலும் ஊர்ஜிதம் செய்கிருர் 'புரட்சி நடிகர்' எம். ஜி. ராமச்சந்திரன்.

ஸ்வஸ்திக் பிலிம்ஸ் தயாரிப்பான இப்படத்தில் அவருடன் கதாநாயகியாக பி. எஸ். சரோஜா நடித்து வருகிருர்.

★★ என். டி. ராமராவ்

'ரே சுக்கா பகடி சுக்கா' என்ற படத்தை ஸ்வஸ்திஸ்ரீ தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரித்து வருகிறது. இதில் கதாநாயகனாக வருகிறார் இவர்.

கேள்வி ? பதில்

ராகவன், திருச்சி

அன்பின் வயது என்ன ?

பொறுமையைவிட இளமை வாய்ந்தது.

நீங்களும் நடிப்பதாகக் கேள்விப் பட்டேன். உண்மைதானா?

உண்மைதான். 'வாழ்க்கை' எனும் நீண்ட நாடகத்தில் நானும் ஒரு நடிகன்தானே?

செல்வராஜ், ஊத்துக்குடி

ஒரு குறிப்பிட்ட சோப்பு பற்றியே எல்லா நடிகைகளும் அபிப்பிராயம் தெரிவித்து வருகிறார்களே, ஏன்?

அந்த சோப்பைத்தான் அவர்களது வருமானத்தைக் கொண்டு வாங்க முடிகிறது போலும்! விலை மலிவாகவும் இருக்கலாமல்லவா?

உண்மையான சமுதாயத்தை நமது திரைப்படங்கள் எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன ?

நமது பார்வையிலிருந்தே மறைத்து விட்டன !

ராஜாமணி, திருவனந்தபுரம்

நடிகை......யை சந்திரனுடன் என் மனம் ஒப்பிடுகிறது. சரியானதா ?

சரியானதுதான். அதனால்தானோ என்னவோ 'தேய்பிறை' சந்திரனைப் போல் அவரது திறமையும் சில படங்களில் குறைந்து விட்டிருக்கிறது.

சினிமா நடிகைகளுக்கு ஏற்படும் புகழ் அவர்களைப் பொறுத்ததா அல்லது டைரக்டரைப் பொறுத்ததா ?

அவர்கள் ஏற்கும் பாத்திரங்களைப் பொறுத்தது. சில திறமை மிக்க நடிகர்கள் அனுபவக் குறைவான டைரக்டர்களிடம் சிக்கி தங்கள் புகழைக் குறைத்துக் கொண்டிருப்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

திருமலை, வியாசர்பாடி

திரைப்படம் பொழுது போக்க உதவுவதா அல்லது அறிவூட்டும் சாதனமா?

தற்போது வெளிவரும் பெரும்பாலான படங்கள் இரண்டையுமே செய்வதில்லை !

என்னுடைய வயதான பாட்டி நான் சினிமாவுக்குப் போகக் கூடாது என்று தடுக்கிறாள். ஏன்?

அவரும் உங்களுடன் வந்து படத்தைப் பார்க்க முடியாதே என்ற வருத்தத்தினால் இருக்கலாம்!

ராஜாராம், வாணியம்பாடி

உண்மையைப் படம் பிடிக்க முடியுமா?

இல்லாவிடில் நடிகைகளின் முகத்தில் உள்ள பருக்களை திரைப் படத்தில் நீங்கள் எப்படிப் பார்க்க முடியும்?

நம்பிராஜன், சிவகங்கை

'சபாஷ் மீனா'வில் கொட்டும் மழையில் நனைந்து வரும் காதலர்களைப் பார்த்ததும் உங்களுக்கு என்ன தோன்றியது?

காதலுக்கு கண்ணில்லை என்று சொன்னது போக, 'உணர்ச்சி' கூட இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்!

'நாடோடி மன்னன்'னில் கோழிக் குஞ்சை வாயிலிருந்து பறக்க விட்டார்; 'சபாஷ் மீனா'வில் கற்பூரத்தை வாயில் போட்டுக் கொண்டார். இதை யெல்லாம் சந்திரபாபு எதற்காகச் செய்கிறார்?

அவரது சட்டைப் பையில் பணத்தைப் போட!

கமலாதேவி, வேலூர்

எந்த நடிகையின் வீடு நவீன மோஸ்தரில் இருக்கிறது?

ராஜசுலோசனவினுடையது.

ஜேசுதாஸ், தாம்பரம்

பயம் என்பது என்ன?

படம் திரையிடப்பட்ட முதல் நாள், முதல் காட்சியின்போது 'ஜனங்கள் படத்தைப்பற்றி என்ன பேசிக்கொண்டு வருவார்களோ' என்று, கொட்டகையின் வாயிலில் உள்ள தயாரிப்பாளர் நினைப்பது!

வே. ராஜாராமன், வேலூர்

பெண்கள் ஒரே சமயத்தில் இரண்டு காரியங்களைச் செய்யலாமா?

கூடாது! உதாரணமாக உடலையும் பருக்கவிட்டு அதே சமயம் நடனமும் ஆடும் நடிகைகளைப் பார்த்தால் தெரிகிறதல்லவா?

ஜெமினி தற்போது தயாரித்து வரும் சமூகப்படம் 'தில்லானா மோகனம்பா'ளை தழுவியதா?

அல்ல. ஆனல் எதிர்காலத்தில் 'தில்லானா மோகனம்பா'ளை வர்ணப் படமாகத் தயாரிக்கும் எண்ணம் தனக்கிருப்பதாக ஜெமினி அதிபர் கூறுகிருர்.

ஜூபிடரின் 'தங்கப்பதுமை' கண்ணகி கதைதானமே; உண்மையா?

சரித்திரம் இங்கு கதை உருவில் கிராமியமாக வந்திருக்கிறது.

பாண்டியன், ஒலவக்கோடு

பாரதி விழாவுக்கு புரட்சி நடிகரை நடிகர் திலகம் அழைக்கவில்லை என்பது உண்மையா?

நடிகர் திலகம் அவரை அழைத்தார் என்பதுமட்டும் தெரியும்.

சிவாஜி கணேசனுக்கும் பாரதி கணேசனுக்கும் உள்ள மிக முக்கிய வித்தியாசம் என்ன?

"—தாடி+பேனு"

ந. ராமசாமி, ஒலிபுரம்

'நாடோடி மன்ன'னில் எம். ஜி. ஆரும் வீரப்பாவும் சண்டை செய்யும் பாலம் எங்கிருக்கிறது?

எங்குமில்லை. படத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டது அது.

எம். ஜி. ஆர். பற்றி உங்கள் மேலான கருத்து என்ன?

சில நற்பண்புகளின் உறைவிடம் அவர்.

ராது, பம்பாய்

எம். கே. ராதாவை எங்கே காணேமே?

உடல் நலம் சரியில்லாமல் படுத்திருக்கிருர் அவர்.

ஏவி. எம். 'பூம்புகார்' படத்தில் கண்ணகியாக நடிப்பது யார்?

சாவித்திரி அந்தப் பாத்திரத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர்.

சாவித்திரியுடன் சிவாஜி கணேசன் நடித்துள்ள 'அன்னையின் ஆணை' படத்தை ஜெமினி கணேசன் பார்த்தாரா? எங்கே?

பத்திரிகைக் காட்சியின்போது எங்களுடன் பார்த்தார்.

தாயார் வேஷத்திற்கு மாதுரி தேவி ஏற்றவரா?

அவர் வரையில் இன்னும் வயது வரவில்லை இதற்கு!

எம். ஏ. வி. பிக்சர்ஸ் 'மாதவி' கோவலன் கதையா?

அல்ல; இது ஒரு சமூகப்படம்.

பச்சோந்தி என்று எதற்குப் பொருள்?

'அடிக்கடி கொள்கையை மாற்றிக் கொள்பவர்கள்' என்று பொருள்!

நீங்கள் லாபத்தைக் கொண்டு என்ன செய்கிறீர்கள்?

அது ஒளியும் இடத்தைத் தேடுகிறேன்.

'பர்தேசி' படம் பார்க்கும்போது எனக்கு தலைவலி வந்து விட்டது. உங்களுக்கு?

கண்ணீர் வந்தது!

க. நாகராஜன், கான்பூர்

'ஜிம்போ' படத்தில் லீலாவாகவும், ராணியாகவும் நடிப்பவர்களுடைய பெயர்கள் என்ன?

முறையே சித்ரா, கிருஷ்ண குமாரி. ஹிந்தி படவுலகைச் சேர்ந்தவர்கள் அவர்கள்.

ஏ. சமத், ஈரோடு

பெண்களின் சிரிப்பை எந்தச் சந்தர்ப்பத்தில் நம்பக்கூடாது?

விஷமப் பார்வையுடன் கலந்து வரும்போது.

காதலின் சக்தி என்ன?

ஒரு 'தாஜ்மஹாலை'யே எழுப்பக் கூடியது!

எஸ். சரஸ்வதி, தஞ்சை

'ராஜராஜசோழ'னில் குந்தவையாக நடிப்பவர் யார்?

பத்மினி அதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார்.

'நாடோடி மன்ன'னில் நம்பியாரைக் கட்டிப் போட்டிருக்கும் இடத்தில் சந்திரபாபுவுடன் ஆடும் நடிகை யார்?

சந்திரா என்பவர். ஒரு 'மேக்-அப்'காரரின் மனைவி இவர்.

ஆர். ஜி. ராஜ், மலாயா

பியாஸா, சி. ஐ. டி., முதலிய ஹிந்திப் படங்களை உருவாக்கிய டைரக்டர் குருதத் ஒரு தென்னிந்தியராமே, உண்மையா?

பெங்களூரைச்சேர்ந்த பார்ப்பனர் அவர்.

ஏ. எம். ராஜா, சங்கீத டைரக்டராகப் பணியாற்றி வரும் படம் எது?

வீனஸின் 'கல்யாணப் பரிசு'.

ம. ப. சுப்பிரமணியன், கருவூர்

ஜெமினி சந்திரலேகாவை விட நாடோடி மன்னனுக்கு அதிகமாக பணம் செலவாகியிருப்பது உண்மையா?

சந்திரலேகாவுக்கு செல்வானதில் பாதிதான் 'நாடோடி மன்ன'னுக்கு ஆகியிருக்கிறது.



'மாலா ஒரு மங்கல விளக்கு' படத்தில் காமெடியன் ராமதாஸ் இப்படி வருகிருர்.

கி. ரா. திருமலையப்பன், தென்காசி

உங்களைக் கண்டால் நடிகர்கள் ஓடி வருவதுண்டா?

அப்படி யாரையும் நான் பயமுறுத்தி வைக்கவில்லையே!

ஏ. ஆர். ஆர். சாந்தா, தர்மபுரி

சாவின் இருப்பிடம் எங்கே இருக்கிறது?

வாழ்க்கைப் பாதையின் கோடியில்.

அ. சந்திரசேகரன், இருமத்தூர்

சினிமா நடிகைகள் மக்களிடத்தில் எப்படிப் புகழ் பெற்று விடுகிருர்கள்?

பாத்திரதாரியாகவே மாறி சிறப்பாக நடிப்பதால்!

'வஞ்சிக் கோட்டை'யில் வைஜயந்திமாலாவின் நடிப்பு எப்படி இருக்கிறது?

கொஞ்சம் முன்னேறியிருக்கிறது.

லெ. நடராசன், நாங்குநேரி

ரஞ்சனைப்பற்றி சில வரிகள்?

திறமை மிக்கவர்; அதிருஷ்டம் குறைந்தவர்!

எம். ஆர். எம். அஷ்ரப், கப்புவத்தை

'நாடோடி மன்னன்'னுக்குப் பிறகு எம். ஜி. ஆர்., பானுமதி நடித்து வெளிவரப்போகும் படம் எது?

'கலை அரசி'யாக இருக்கலாம். அதன் படப்பிடிப்புதான் இப்போது மும்முரமாக நடை பெறுகிறது.

மு. தன்னுசியப்பன், தாராபுரம்

சாவித்திரி கணேஷுக்குப் பிறக்கும் குழந்தை ஆண் என்று நான் சொல்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

நான் ஜோசியன் அல்ல!

நடிகை அங்கமுத்துவின் எடைக்கும், சாயிராமின் எடைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஒரு சாதாரண நடிகரின் எடை!

கனக. சுப்பிரமணியன், சென்னை

'பேசும்-பட'த்தில் ஆங்கிலப் படங்களைப் பற்றிய செய்திகள் ஏன் வெளி வருவதில்லை?

அவை தேவையில்லை என்பதால்.

பி. எஸ். ராமசாமி, பனங்காட்டூர்

நான் சிவாஜிக்கு சிகரெட் அனுப்பலாமென்றிருக்கிறேன். அவர் என்ன சிகரேட் பிடிப்பார்?

ஸ்டேட் எக்ஸ்பிரஸ்-555!

சந்திரபாபு-தங்கவேலு இருவரும் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டால் வெற்றி அடைவது யார்?

சந்திரபாபுவாகத்தான் இருக்க முடியும். தங்கவேலு இப்போது கொஞ்சம் பருத்து விட்டார்.

லாபிர். ஏ. மஜீத், மாத்தறை

'கன்னியின் சபத'த்தில் அஞ்சலி தேவியின் வாட் சண்டையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பள்ளி மாணவியின் 'கோலாட்டம்' போல் இருந்தது.

பி. ராமசாமி, சிகந்தராபாத்

நான் எம். ஜி. ஆரை உடலாகவும் பத்மினியை உயிராகவும் சிவாஜியை ரத்தமாகவும் கருதுகிறேன். நீங்கள்?

என் சகோதர, சகோதரியராக!

ஏ. சேக், வத்தலகுண்டு

பழைய 'உத்தமபுத்திரன்' டைரக்டர் யார்? அதில் கதாநாயகியாக நடித்திருப்பவர் யார்?

முறையே டி. ஆர். சுந்தரம்; எம். வி. ராஜம்மா.

பி. ஸ்ரீதரன், சென்னை

ராமன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்புகளான 'இலங்கேஸ்வரன்', 'கொஞ்சும் சலங்கை', 'அதிசயப் பெண்' இவற்றில் எது முதலில் வரும்?

இறுதியில் இருக்கும் 'பெண்' தான்.

டி. பாஸ்கரன், சென்னை

ஒரு படத்திற்கு வேண்டிய பிரதிகளை அதன் தயாரிப்பாளர்கள் தணிக்கை செய்யப்பட்ட பின் தானே எடுக்கிறார்கள்?

அப்படித்தான் செய்கிறார்கள்.

கே. எஸ். பெருவெம்பு

வஞ்சிக்கோட்டை வாலிபன் நாடோடி மன்னன் இவற்றில் அதிக வசூல் தந்த படம் எது?

இரண்டும் முதலில் ஓடி ஓயட்டும்.

எஸ். மனோகரன், கண்டி

சிவாஜி கணேசன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

அவரது 'அம்மா'வின் கட்சியை! அம்மா சொல்வதை தட்டுவதே கிடையாது சிவாஜி.

நாவலர்தாசன்,
அரகண்டநல்லூர்

திரைப்படவுலகில் தென்றலின் சுகமடையாதவர் யார்?

பரிதாபத்திற்குரிய 'எக்ஸ்ட்ராக்கள்'.

சுவரொட்டிகளில் சாணி அடிக்கும் 'பிஸினஸ்' இப்போது எப்படி இருக்கிறது?

சென்னையில் கொஞ்சம் குறைந்திருக்கிறது.

டூயட் பாடி முடிந்து,'மேக்-அப்' கலைத்து விட்டு வீட்டுக்கு செல்லும் நடிகரும் நடிகையும் என்ன நினைப்பர்?

உறக்கத்தைப் பற்றி.

காஷ்மீர்-குஸும்

சேவல்

ஸான்டலக்ஸ்

நஞ்சன்கூடு பல்பொடி

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு: **யுனைடெட் கன்ஸர்ன்,**

54, பந்தர் தெரு, சென்னை-1.

தபால் பெட்டி

நல்ல படம் வருமா?*

இப்போது வரும் படங்களில் பெரும்பாலானவை தரங் குறைந்தவையாக இருக்கின்றன. அனுபவமற்ற தயாரிப்பாளர்கள், திறமையற்ற டைரக்டர்கள், தான் செய்வதே சரி என நினைக்கும் கதாசிரியர்-வசனகர்த்தாக்கள், படத்தையே தன் இஷ்டப்படி தயாரிக்கும் அளவுக்கு உரிமை (!) பெற்றுவிடும் நடிகர்கள் ஆகியோர் ஈடுபடும் படங்கள் வெளிவருவதே இதற்குக் காரணம். அறிவு, அனுபவம், திறமை, ஆர்வம், செயலாற்றும் திறன் இத்தனையும் கொண்ட தயாரிப்புகள் சமீபமாகக் காணோமே; உள்ள சரக்கை நல்ல சரக்காக்கும் திறமை பெற்றவர்களுக்குச் சந்தர்ப்பத்தைக் காணோமே! தேவதாஸ், மங்கையர் திலகம், குலதெய்வம் போன்ற நல்ல படைப்புகள் தயாரிப்பாளர் முதல் நடிகர் வரை யாவருக்கும் புகழ் தேடித் தரவில்லையா? இனியாவது தகுந்தவர்கள் தகுந்தபடி தயாரிக்கும் படங்கள் வெளிவர படவுலகினர் ஆவன செய்வார்களாக.

எஸ். ஸ்டேன்லி துரைராஜ்,
கோவை.

படமும் விமரிசனமும்*

நாடோடி மன்னன் படம் பற்றிய விமரிசனங்களைப் பல பத்திரிகைகளிலும் பார்த்தேன். பெரும்பாலான விமரிசகர்களின் அபிப்பிராயம் படம் நன்றாக இருக்கிறது என்பதுதான். ஆனால் ஓரிருவர் மட்டும் அளவு கடந்த வேகத்தில் கண்டபடி எழுதியிருக்கிறார்கள். இதைக் கண்டு ரசிகர்கள் பெரிதும் வருந்துகிறார்கள். மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகையானாலும் மணம் வீசத்தான் செய்யும். திறமை எங்கிருந்தாலும் பாராட்ட வேண்டியதே பண்புள்ளவனின் கடமை. இதை விட்டுவிட்டு அனாவசியமாக சொந்த விருப்பு வெறுப்புக்களை துலாக்கோலான விமர்சனத்தில் பிரதிபலிப்பது வெறிச் செயலாகும்.

யாழ். எஸ். சண்முக ராஜா,
இலங்கை.

விட்டுக்கொடுப்பாரா?

'நாடோடி மன்னனை' வெளியிட்டு வெற்றி கண்ட எம். ஜி. ராமச்சந்திரன், தனது அடுத்த படமாக எம்ஜியார் பிக்சர்ஸ் சார்பில் கல்கியின் ''பொன்னியின் செல்வன்'' கதையைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். அதே சமயம் எனக்கொரு விஷயம் கவலையைத் தருவதாகவும் இருக்கிறது. பொன்னியின் செல்வனை காதலையும் போரையும் அடிப்படையாகக் கொண்டு அமரர் கல்கி சிருஷ்டிக்கவில்லை. கடவுள் வழிபாடு, மதம், சமயம் இவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். பொன்னியின் செல்வனான ராஜராஜசோழன் சிவபக்தி மிகுந்தவன்; புத்த மதத்தில் அபார பற்றுள்ளவன். இந்த அடிப்படை மாற்றப்படாமலிருந்தால் தான் படமும் வெற்றி பெறும்; கல்கி வாசகர்கள் மனமும் மகிழ்ச்சியடையும். இதை விட்டு கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, கதைப் போக்கில் மாறுதல்கள் செய்யப்பட்டால் பாத்திரங்களின் குண விசேஷம் சிதைக்கப்படும். ஆகவே எம். ஜி. ராமச்சந்திரன் தன் சொந்தக் கொள்கையை விட்டுக் கொடுத்து, கதையை அப்படியே பிரதிபலிக்கும் விதத்தில் படமாக்குவாரா?

வி. ராஜாமணி,
குத்தாலம்.

[இதைப் போன்ற கருத்தைப் பிரதிபலிக்கும் கடிதங்கள் பல நமக்கு வந்திருக்கின்றன. சரித்

---

* இக்குறியிட்ட இரண்டு கடிதங்களுக்கு தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

திரக் கற்பனைக் கதையான 'பொன்னியின் செல்வ'னை எம். ஜி. ராமச்சந்திரன் நல்ல முறையில் சிரத்தையுடன் படமாக்குவார் என்றே நம்பலாம். தனது முயற்சி எதையும் மிகுந்த சிரத்தையுடன் செய்யும் பண்புள்ளவர் எம். ஜி. ஆர். ஆகவே 'பொன்னியின் செல்வன்' கதையை மக்களுக்குப் பிடித்த முறையிலேயே படமாக்குவார் என்பது நிச்சயம். — ஆ-ர்.]

செய்வீர்களா?

எல்லா ரசிகர்களும் விரும்பும் சினிமாப் பத்திரிகை "பேசும் படம்". நான் "பேசும் படம்" பத்திரிகையை நீண்ட காலமாகப் பார்த்து வருகிறேன். பத்மினி இல்லாத "பேசும் படம்" இதழ்கள் காண்பதரிது! 57-மலரில் 'பார்வதி'யில் பத்மினி-ராகினி கட்டுரை வந்தது. 58 மலரில் 'ஹலோ ஹலோ என்றழைத்தால்' கட்டுரை பத்மினியினுடையது. செப்டம்பர் இதழில் பாபநாசத்தில் பத்து நாட்கள் கணேசன்-பத்மினி பற்றிய கட்டுரை. நவரச நாடகம் பகுதியிலும் பத்மினி, கணேசன் இடம் பெற்று விட்டனர். இதனால் பத்மினியும் கணேசனும் 'பேசும் பட' அபிமானம் பெற்றவர்கள் என்றுதானே அர்த்தம்? ஒவ்வொரு நடிக நடிகையருக்கும் பேசும் படத்தில் இடமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குமாரி வி. கோமளா,
கும்பகோணம்.

['பேசும் பட' ரசிகையான உங்களது சந்தேகத்தைத் தீர்க்க வேண்டியது எனது கடமை. இன்றுள்ள பெரும்பாலான நக்ஷத்திரங்கள் 'பேசும் பட'த்தின் மூலமே ரசிகர்களுக்கு அறிமுகமானவர்கள். தக்க சமயத்தில் தகுந்தவர்களை தக்கபடி அறிமுகம் செய்ய 'பேசும் படம்' பின் வாங்

"எங்கே, நமது இணைந்த உள்ளத்திற்கு ஒரு உவமை சொல்லுங்கள்?" என்கிறாரா இந்த ஆரணங்கு? டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான 'மின்னல் வீர'னில் சந்தியா, ரஞ்சன்.



வில்லன், வில்லி வேஷத்தில் இரண்டு 'எமன்'கள் (எம். என்.) நடிக்கும் ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் 'திருடாதே'யில் இப்படி ஒரு கட்டம் வருகிறது.

கியதில்லை. ஆங்கிலத்தில் "பேப்பர் பப்ளிஸிடி வேல்யூ" என்று குறிப்பிடப்படும், பத்திரிகை மூலம் கிடைக்கும் விளம்பரத்தின் சக்தியை அறிந்தவர்கள் சிவாஜி கணேசனும் பத்மினியும். ஆகவே எந்த நேரத்திலும் ஒத்துழைக்க அவர்கள் தயங்குவதில்லை. ரசிகர்களுடன் தொடர்பு கொள்ள அவர்கள் மிகவும் விருப்பம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நடிக்கும் படங்களும் நிறைய வருகின்றன. இதனால் அவர்களுடையது அதிகமாக இடம் பெறுகிறது. மற்றவர்களும் நம் அன்பணைப்பில் வளர வேண்டியவர்கள்தான். அவர்களைப்பற்றியும் ஒத்துழைப்பு கிடைக்கும்போதெல்லாம் குறிப்பிட்டுத்தான் வருகிறோம்.

— ஆ-ர்.]

ஏன் இந்த வெட்டு?

சென்ற 7-ம் தேதி சென்னை மாநகரிலே மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. சர்க்காரின் கச்சா பிலிம் வெட்டு கொள்கையால் படவுலகிற்கு ஏற்பட்டிருக்கும் பயங்கரமான விளைவுகளைப் பிரதிபலித்து சர்க்காரின் கொள்கையைக் கண்டிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அந்த ஊர்வலத்தில் தென்னாட்டின் தலைசிறந்த நடிகர்களெல்லோரும் கலந்து கொண்டனர். கொட்டும் மழையிலும் லக்ஷக்கணக்கான மக்கள் வழிநெடுகிலும் கூடியிருந்தனர். இதுவரை தென்னகத்திலே நடந்திராத மகத்தான இந்தப் புரட்சிக்கு மக்களின் அமோகமான ஆதரவிருந்தது. சர்க்கார் - மக்கள் ஆட்சி நடப்பதாகக் கூறும் மத்திய சர்க்கார் - இந்தக் கண்டன ஊர்வலம்பற்றியும் மக்களின் ஆதரவு பற்றியும் இதற்குள் அறிந்திருப்பார்கள். சென்னை சர்க்காரும் கச்சா பிலிம் வெட்டை ரத்து செய்யக் கோரியிருக்கின்றனராம். இன்னும் ஏன் இந்த வெட்டு?

கீழையூர் சீனு,
சென்னை.

கவனிப்பார்களா?

இப்போது கச்சா பிலிம் கிடைப்பது மிகவும் சிரமமாயிருக்கிறது. இதனால் படங்கள் குறிப்பிட்ட தேதிகளில் திரைக்கு வருவதில்லை. அப்படியே வந்தாலும் எல்லா ஊர்களிலும் ஒரே நாளில் திரையிடப்படுவதில்லை. இந்தக் கொடுமைக்கிடையே திரைக்குவரும் படங்களில் ஒன்றிரண்டாவது நன்றாக இருக்கிறதா என்றால், 'இல்லை' என்ற பதிலே கிடைக்கும். ஹாஸ்ய நடிகர்கள் இருந்து விட்டால் படம் வெற்றிபெறும் என்ற பத்தாம் பசலிக் கொள்கையால் கதை அம்சமில்லாத அசட்டு ஹாஸ்யப் படங்கள் திரைக்கு வருகின்றன. "நீலாவுக்கு நெறஞ்ச மனசு" படம் இத்தகையவற்றில் ஒன்று. முன்பு 'ஆனந்த விகடன்' பத்திரிகையில்

வெளியிடப்பட்ட துணுக்குகளும், பழைய படங்களில் வந்த சிறு ஹாஸ்யக் காட்சிகளும் சேர்ந்தது தான் இந்தப்படம். ரசிகர்களின் தேவையைப்பற்றிக் கவலைப்படாத வகையில் தயாராகும் இதைப் போன்ற படங்களால் நல்ல படங்களுக்கு கச்சா பிலிம் கிடைப்பதில்லை எனலாம்.

கே. ரகுபதி,
கும்பகோணம்.

நிறுத்துவார்களா?

நடிகர்களிடையே அபிப்பிராய பேதத்தை வளர்க்கும் சில ரசிகர்கள் இன்னும் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. எம். ஜி. ராமச்சந்திரன் 'பேசும் பட'த்தின் மூலம் ஓர் அருமையான விளக்கம் தந்தார். இதைப் போல உள்ளம் நெகிழும் விதத்திலே அருமையாகப் பேசியிருக்கிறார் பாரதி விழாவிலே, சிவாஜி கணேசன். "கலைஞர்களில் இவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று வேறுபாடு காட்டாதீர்கள். கலைஞர்கள் யாவரும் ஒரு குடும்பத்தினர்" என்று குறிப்பிட்டுள்ளார். கலைஞர்களிடையேயுள்ள இந்த ஒற்றுமை மனேபாவத்தைப் புரிந்து கொண்டு, ரசிக கோஷ்டிகள் நடக்கும் என்று நம்பலாமா?

மு. வ. கிருட்டினன்,
மதுரை.

பின்பற்ற வேண்டும்

'கல்கி' பத்திரிகையில் கல்கி அவர்கள் எழுதிய 'பொன்னியின் செல்வன்' கதையை எம். ஜி. ராமச்சந்திரன் படமாக்கப்போவதாக விளம்பரங்கள் கூறின. ஏற்கனவே வெளிவந்த படங்களைத் திரும்பத் திரும்பப் படமாக்கி வரும் படமுதலாளிகள் இத்தகைய நல்ல முயற்சிகளில் ஏன் ஈடுபடக்கூடாது? எம். ஜி. ஆர். அவர்களைப் பின்பற்றி சிறந்தவை என்று ரசிகர்களால் பாராட்டப்பட்ட கதைகளைப் படமாக்க படமுதலாளிகள் முன் வர வேண்டும்.

வி. நாராயணசாமி,
திருச்சி.

புலியும் பூனையும்...

இப்போது சில புது முகங்கள் படங்களில் நடித்து வருகிறார்கள். இவர்களுக்குத் திறமை இல்லை என்று கூறிவிட முடியாது. ஆனல் இவர்களெல்லோரும் தங்கள் திறமையை வெளிப்படுத்துவதை விட புகழ்பெற்ற நடிகர்களைப்போல் பேசி நடிப்பதில்தான் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொள்வதைப் போன்ற இந்த மனேபாவத்தை விட்டு, தமக்கென்று தனி நடை வகுத்துக்கொண்டு நடிக்க இந்தப் புது முகங்கள் முனைந்தால் மட்டுமே இவர்களது எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்று கூறுவேன்.

கே. கணேஷ்,
தூத்துக்குடி.

[இதைப்போன்ற கடிதங்கள் பல வந்திருக்கின்றன. புது முகங்கள் இதைக் கவனித்து தங்களுக்கென்று தனிப் பாணியை அமைத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். — ஆ-ர்.]

இதோ ஒரு சஞ்சீவி!

காலாணிக்கு

மேல் பூச்சு மருந்து

குதிகாலிலும், பாதத்திலும் பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணிகளைப்போல் ஏற்பட்டு, நடக்கும்போது பாதத்தைத் தரையில் வைக்க முடியாமல் துடிதுடிக்கும் நிலையை இம்மருந்து ஆச்சரியகரமாய் கண்டித்து, ஆணிகளை அறவே நீக்குகிறது. ஆணிகளுக்குமேல் இம்மருந்தைப் பூச வேண்டும்.

புட்டி விலை
(தபால் செலவுடன்) ரூ. 4.25

ஜகன்னாத் அண்டு கோ
தபால் பெட்டி எண் 1859
சென்னை - 1

கணேசனும் மாணவரும்

சென்றமாதம் 9-ம் தேதி எட்டயபுரம் செல்லும் கார் ஊர்வலம் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி வழியாக வந்தது. சிவாஜி கணேசனை பார்க்கவேண்டும் என்ற ஆவலில் கடுமையான பசியையும் பொறுத்துக் கொண்டு நாங்கள் ஏராளமானவர் கல்லூரி மாடியில் கூடியிருந்தோம். ஊர்வலம்வந்தது. கணேசனை கண்டு பாராட்டு முகமாக கைதட்டி ஆர்ப்பரித்தோம். ஆனால் கணேசன் சிலையைப்போல எந்தப் புறமும் பாராது சென்று விட்டார். பிறகு சென்ற சாரங்கபாணி, சாயிராம் முதலியோர் வணங்கி, கையாட்டி மகிழ்ச்சி தந்தார்கள். கணேசன் மாணவருலகை இவ்வளவு கீழ்த்தரமாக எடைபோட்டிருக்க வேண்டாம்.

பா. மௌனகுருநாதன்,
திருச்சி.

[தாங்கள் உணர்ச்சி வசப்பட்டு எழுதியுள்ள கடிதம் கணேசனிடம் தங்களுக்குள்ள ஆழ்ந்த அன்பை எடுத்துக் காட்டுகிறது. இது விஷயமாக அவரை விசாரித்தேன். காலையில் கிளம்பியது முதல் வழி நெடுகிலும் ரசிகர்களின் பாராட்டுதலுக்குத் தலை வணங்கிவந்த கணேசன் ரொம்பவும் அலுப்புற்றிருந்தார். உள்ளம் பூரித்தாலும் உடலுக்கு அசதி நேருவது சகஜமல்லவா? உண்மையிலேயே தங்களையெல்லாம் அவர் சரியாகக் கவனிக்கவில்லை. தங்களை சரிவர கவனிக்காமல் போய் விட்டதற்காக மிகவும் வருந்தினார். அவரது அசதிதான் தங்களைத் தவறாக எண்ணச் செய்துவிட்டது, அவ்வளவுதான். —ஆ-ர்.]

போலீஸின் வெறிச்செயல்

பாரதி விழாவில் 9-ம் தேதியன்று விழாப்பந்தலுக்கு மேல்புறத்தில் சுமார் நூறு கெஜ தூரத்தில் அருப்புக்கோட்டை ரசிகர்களில் சிலர் அலங்காரமான கொட்டகையை அமைத்து, அதற்கு 'சிவாஜி கணேசன் மன்றம்' எனப் பெயரிட்டிருந்தார்கள். வர்ணத் தாள்களால் தோரணம் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது இந்த மன்றம். இதைப் பார்க்க ஒரு பெருங்கூட்டம் கூடி நின்றது. அப்போது சில போலீஸ்காரர்கள் வந்து, மன்ற அமைப்பாளர்களிடம் அதைப் பிரிக்கும்படிக் கூறினர். 'இவ்வளவு நன்றாக அலங்கரித்த பிறகு எப்படிப் பிரிக்க முடியும்?' என்றார் ஒரு ரசிகர். 'ஏன் நாங்களே பிரித்து விடுகிறோம் ஒரு நொடியில்' என்று கூறியபடி போலீஸார் அதைப் பிரித்து விட்டனர். அப்படிச் செய்ய வேண்டாம் என்று ரசிகர்கள் வேண்டியும்கூட போலீஸார் லட்சியம் செய்யவில்லை. விழாவை தம் சொந்த செலவில் நடத்தியவரின் பெயரில் உள்ள மன்றத்தை போலீஸார் வெறிச்செயல் காரணமாக கலைத்தனர். போலீஸார் வெறிச்செயலில் ஈடுபடாமல் அரசாங்கத்துக்கும் புகழ்தேடித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கே. எம். செல்வன்,
மலைப்பட்டி.

[இந்த விஷயம் விழா சம்பந்தப்பட்டவர்களிடம் அறிவிக்கப்படாதது அதிசயமாக இருக்கிறது! அங்கே மன்றம் அமைக்க அனுமதி பெறவேண்டும். போலீஸாருக்கு அங்கே கூடியிருந்த ஏராளமான மக்களை அமைதியாக இருக்கச் செய்யும் பொறுப்பு உண்டு. அவர்கள் கடமையைச் செய்வதில் இடைஞ்சலாக இருந்தாலும் ஆவன செய்யும் உரிமை அவர்களுக்குண்டு. ஆகவே உங்களுக்கு இது சம்பந்தப்பட்ட எல்லா விவரமும் தெரிந்திருக்க நியாயமில்லை. போலீஸார் தங்கள் கடமையைச் செய்வது கூடச் சிலருக்கு வெறிச்செயலாகத் தோன்றலாம். காலங்கடந்து எனக்குத் தெரிவிக்கப்பட்ட இந்தச் செய்தியை அங்கேயே உடனடியாக விழா அமைப்பாளர்களிடம் கூறியிருந்தால் எந்த விதச் சந்தேகத்துக்கோ, தகராறுக்கோ இடமிருந்திருக்காது. எப்படியும் சுலபமாக போலீஸார் மீது குற்றங்கூறி விடக்கூடாது. ஆ-ர்.]

நான் ரசித்த காட்சி

சபாஷ் மீனு

மோகனும் சேகரும் நண்பர்கள்; நாடகப் பிரியர்கள். மோகனின் தந்தை தன் மகன் நல்லபடி இருக்கட்டுமென்பதற்காக, நண்பர் அப்பாதுரையிடம் அனுப்புகிறார். அங்கே சேகரை அனுப்பி விடுகிறான் மோகன். சேகரை மோகன் என்றே எண்ணி விடுகிறார் அப்பாதுரை. சேகர், மோகன் இருவரும் காரியாலயத்திலிருக்கின்றனர். தனித்தனியே மோகனின் தந்தையும் அப்பாதுரையும் வரும்போது இருவரும் சமாளிக்கின்றனர். ஆனால் அப்பாதுரையும் மோகனின் தந்தையும் சேர்ந்து வந்துவிடவே இருவரும் திடுக்கிடுகின்றனர். ஆனால் அவர்கள் இருவரும் பொதுவாக மோகனை நன்றாக வேலை செய்யுமாறு கூறிவிட்டுப் போய் விடுகிறார்கள். சபாஷ் மீனு படத்தில் வரும் இந்த அருமையான ஹாஸ்யக் காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

எஸ். ஆர். கிருஷ்ணன்,
கிச்சிபாளையம்,

போலீஸாரைக் கண்டு பயந்து ஓடி வந்த சேகரின் உருவம் தன் கணவன் மூக்கனுடையதைப் போலிருந்ததால் தன் கணவன் தான் என்று நினைத்து அவனிடம் சண்டை போடுகிறாள், ரிக்ஷாக்கார மூக்கனின் மனைவி. ஆனால் தான் ரிக்ஷாக்காரன் அல்ல என்று சேகர் சொன்னவுடன் ஊரார் அவனை நையப் புடைக்கிறார்கள். அடிபடுவது தன் கணவன் மூக்கனே என்று நினைக்கும் அவன் மனைவி, அவனை அடிக்க வேண்டாம் என்று மன்றாடுகிறாள். 'தான் சண்டை போட்டாலும் தனக்குரியவனை மற்றவர் அடிப்பதை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள் என்பதைச் சித்தரிக்கும் இச் சிறந்த காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

பி. துரை,
நாசரேத்.

மோகன் ஒரு பணக்கார வாலிபன். அவன் சந்தர்ப்ப விசேஷத்தால் ராஜா என்ற நண்பனுடன் அவனிருப்பிடம் போகிறான். அப்போது மோகன் வயிறு எரிகிறது என்று கூறுகிறான். ராஜா ஒரு ஏழை. அவனுக்கு உலகம் தெரியும். ராஜா மோகனைப் பார்த்து, "காது அடைக்கிறதா, மயக்கம் வருகிறதா?" என்று கேட்க மோகன் ஆமோதிக்கிறான். "அதுதானப்பா பசி" என்கிறான் ராஜா. பணக்காரனுக்கு பசி என்பதே இன்னதென்று தெரியாது என்பதையும் ஏழைகளுக்கு அதில் நல்ல அனுபவம் உண்டு என்பதையும் விளக்கும் இந்தக் காட்சி எனக்குப் பிடித்திருந்தது.

ராம. நல்லகருப்பன்,
வலம்புரி.

வேலை நிறுத்தம், வாழ்க...ஒழிக கூச்சல் எல்லாம் நடக்கிறது. புது மானேஜர் மோகன் வருகிறான். வேலை நிறுத்தம் இப்போது நியாயமானதல்ல. விஷமிகளின் தூண்டுதலால் தவறான முறையில் சென்றால் ஆதாயம் முதலாளிக்கே என்பதை விளக்கி தொழிலாளிகளைக் காப்பாற்றுகிறான். வேலை நிறுத்தம் என்பதைக் கிளறிவிட்டு, தொழிலாளிகள் அவதிப்படுவதை தங்கள் சுய நலத்திற்கு உபயோகிக்கும் அரசியல் கட்சிகளுக்குச் சவுக்கடி தரும் காட்சி இது. தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட யாவரும் பாராட்டவே செய்வர்.

அருணு நமசிவாயம்,
திருச்சி.

நீலாவுக்கு நெறஞ்ச மனசு

பால்கனி வழியே தாவிக்குதித்து உள்ளே வந்த திவாகர், கலாவை தேடுகிறான். பாலா அங்கே இருக்கிறாள். கலாவை தேடி அவன் வந்ததை நம்பாததுடன், அவனைக்-

கண்டிக்கிருள் பாலா. அதே சமயம் அங்குவரும் நீலா, பாலாவையே சந்தேகித்துக் கடுமையாகக் கோபிக்கிருள். திவாகர் ஓடி விடுகிருன். அதே சமயம் அங்குவரும் அவர்கள் தகப்பனர், என்று மில்லாமல் பாலாவை நீலா கோபிப்பதன் காரணம் கேட்கிருர். "ஒண்ணுமில்லேப்பா. வேளா வேளைக்குச் சாப்பிடக்கூப்பிட்டால் பசிக்கலே பசிக்கலேன்னு சொல்ரு. உடம்பு என்னத்துக்கு ஆகும்னு கேட்டேன்" என்று தந்தையிடம் மழுப்புகிருள் நீலா. குடும்பத்தில் ஆயிரம் குறைகளிருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் அனுசரித்து நடக்கும் கண்ணியம் கொண்ட நீலாவின் நெறஞ்ச மனசை இந்தக் காட்சி நன்கு எடுத்துக் காட்டுகிறது.

கே. ரகுபதி,
கும்பகோணம்.

நீலாவின் வீட்டில் எல்லோரும் கூடியிருக்கிருர்கள். குடும்பம் முழுவதும் குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும்போது, சரசுவும் அவள் அண்ணுவும் வருகிருர்கள். அவனுக்கு பார்வை போய் விட்டது. தன் சகோதரியைக் காக்கும் பணியில் தான் அவனுக்கு அந்த நிலை ஏற்பட்டது என்பதறிந்த நீலா மாபெரும் தியாகத்திற்குத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ளுகிருள். "அப்பா! நான் ஒன்று சொல்லப் போகிறேன். கோபித்துக் கொள்ளக் கூடாது. மறுத்துச்சொல்லவும் கூடாது. நான் சரசுவின் அண்ணுவைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். பல காரணங்களை உத்தேசித்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்" என்கிருள். குடும்பத்தின் மூத்தபெண் அவள். இளையவர்கள் மூவருக்கும் மண முடிக்க ஏற்பாடுசெய்த அவள் தகப்பனர் அவளுக்கும் மணமுடிக்க முடியவில்லையே என்று வருந்தினர். தன் சகோதரிக்காக தியாகம் செய்தவன் சகோதரி அனுதையாகி விடக் கூடாது. இப்படி பல தியாகங்கள் புரிய தீர்மானிக்கும் நீலா, பெண்கள் எப்படி யிருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிருள். பெண்களின் பெருமையை விளக்கும் அரிய காட்சி இது.

டி. கி. ரா. கோவிந்தன்,
திருச்சி.

சரசு நீலாவை தேடி வரும்போது கொழந்தை என்ற வேலைக்காரன் அரிசியுடன் போகிருன் பிச்சையிட. அவள் குள்ளமாக அரை நிஜாருடன் காட்சி யளிப்பதால் சரசு, "தம்பி, தம்பி! நான் பிச்சை கேக்க வந்தேன்னு நெனச்சுட்டியா? நான் நீலாம்மாவை பாக்க வந்திருக்கேன்" என்கிருள் சிறுமி சரசு. தன்னை அவள் தம்பி என்றழைப்பதாலும், தான் தவறு செய்துவிட்டதாலும், "அக்கா! அக்கா! நீலாம்மாகிட்ட இதை சொல்லிடாதே" என்கிருன் கொழந்தை. மனதை மயக்கும் சிறு ஹாஸ்யக் காட்சி இது.

ஓ. கே. ரங்கசாமி,
புலிப்பாக்கம்.

சின்னப்பையன் என்பவன் ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை. அவன் ஓரிடத்தில் வேடிக்கை பார்க்கும் போது, பிக்பாக்கெட் அடிக்கும் மணியுடன் ஏற்பட்ட விவாதத்தால் இரண்டணு போடுகிருன். உடனே பிக்பாக்கெட்கார மணி அவன் பர்ஸை அடித்துப் போய் விடுகிருன். யாவரும் அவனைப் பிடிக்க ஓடும்போது சின்னபையன் தடுத்து, பர்ஸில் இரண்டணுதான் இருந்ததாகவும் அதையும் வேடிக்கை பார்த்த இடத்தில் போட்டு விட்டதாகவும் கூறுகிருன். காரியப் பைத்தியக்காரர்கள் எப்போதும் உஷாராகவே இருப்பார்கள் என்பதை வெளிப்படுத்தும் ரசமான காட்சி இது.

சம்பத்,
சென்னை.

மனமுள்ள மறுதாரம்

சேகரை மணந்த உஷாவுக்கு, அவன் ஏற்கெனவே மணமானவன் என்று தெரிந்ததும் அவள் தன் தாய் வீட்டுக்கு ஓடி வந்து விடுகிருள். தாய் அவளைக் கோபித்துக் கொள்ளுகிருள். சோபன அறை

லக்மே

டால்கம் பௌடர்

லக்மே டால்கம் பௌடரின் நீடித்து நிற்கும் நறுமணத்தை அனுபவியுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்க—பாரிஸில் உண்டாக்கப்பட்ட மூன்று பிரத்தியேகமான வாசனைகள் கலந்து இருக்கும் டால்கம் பௌடர். இந்த ஆடம்பர டால்கத்தின், பட்டைவிட மிருதுவான உணர்ச்சியை அனுபவியுங்கள். அலங்காரம் லக்மேயுடன் ஆரம்பமாகிறது..

Lakmé

லக்மே - ஒரு டாடா தயாரிப்பு.

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ்
வில்லைகளை
உட்கொண்
டால், உங்கள்
இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும்கூட அபாயமின்றி கொடுக்கலாம்.

பிராங்கைடிஸ், தொண்டைப் புண், மண்டை நீர், அடைப்பு, ஜலதோஷம் மற்றும் இருமலுக்கு உடனேயே நிவாரணமளிக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-55-TAM

சோல் ஏஜெண்டுகள் :

தாதா & கோ.,

86, நைனியப்ப நாயக்கன் தெரு,

சென்னை-3.

யில்தான் தன் கணவன் உடல் நல மற்றவன் என்பதைத் தெரிந்து கொண்ட பெண்கள் நம் நாட்டில் நிறைய உண்டு என்பதை எடுத்துக் கூறுகிறாள். தமிழகப் பெண்கள் மிக்க பண்புடனும் பொறுமையுடனும் நடக்க தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறாமல் கூறுகிறது இக் காட்சி. எதற்கெடுத்தாலும் தாய் வீட்டிற்கு ஓடி வந்துவிடும் பெண்களுக்குப் பாடம் போதிக்கும் சிறந்த காட்சி இது.

ஆறுமுகம் - சிகாமணி,
சென்னை.

பெரிய கோயில்

தமிழ்ப் புலவரிடம் பெண் கேட்க வருகிறான் மைனர் மோகன். தன் இளைய சகோதரியை மணக்க விரும்பிய அவனை அலக்ஷியமாகப் பேசி விடுகிறாள் செல்லம். பட்டிக்காட்டு வாலிபன் ஒருவன் அவளுக்குக் கணவனாக வந்து வாய்த்ததால் அவளுக்கு தன் சகோதரிக்கு நல்ல இடம் கிடைப்பதை ஒப்புக்கொள்ள மனமில்லை என்று கிண்டல் செய்கிறான் மோகன். ஆனால் செல்லம் விடவில்லை. "ஆமாம், என் கணவர் பட்டிக்காடுதான். தெருவில் போகும் பெண்களைப் பார்த்துக் கண்ணடிக்கத் தெரியாது அவருக்கு. கண்ட பெண்களின் போட்டோக்களையும் வைத்துக் கொண்டு கொஞ்சத் தெரியாது" என்று சரமாரியாகப் பொழிகிறாள். நாகரீக மோகத்தால் அநாகரீகமாக நடக்கும் பல ஆடவர்களுக்குச் சவுக்கடி தரும் காட்சி இது.

ரமா ராஜன்,
பம்பாய்.

திருமணம்

நடராஜன் மூலம் அவன் குடும்ப நிலையறிந்த தாமோதரம் சிதம்பரத்திற்கு பணம் அனுப்புகிறார். பிறரிடம் யாசகம் வாங்கக்கூடாது என்ற கொள்கையுடைய சிதம்பரம் அதைத் திருப்பி அனுப்பி விடுகிறார். தன் மானம், நல்ல மாட்டுக்கு ஒரு அடி என்பதை விளக்கும் சீரிய காட்சி இது.

அ. சா. நாகராஜன்,
செங்கற்பட்டு.

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!

மனமுள்ள மறுதாரம்

சேகரின் குழந்தையான வாசுகி தன் தந்தைக்குக் கடிதம் போட, தன் தாத்தாவுடன் தபால் பெட்டி அருகில் வருவதாகக் காட்டுகிறார்கள். வாசுகியின் கையிலுள்ள கடிதத்தில் தபால் முத்திரை இருக்கிறது! தபாலில் போடுமுன் கார்டில் முத்திரை இருக்காது என்பதை அறியாததாலோ, கார்டு வாங்கி 'வீண் செலவு' செய்ய மனமில்லாததாலோ முத்திரையிட்ட கடிதம் காட்டுகிறார்கள். ரசிகர்களை ஏமாளிகள் என நினைத்து படமாக்கப்பட்டிருக்கும் இந்த அசட்டுக் காட்சி வெட்டப்பட வேண்டும்.

பி. என். கோவிந்தராஜன்,
சென்னை.

சபாஷ் மீனா

தன்னைத் துரத்திக் கொண்டு வரும் முரடனுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ஓடி வரும் மோகன் ஒரு பஸ்ஸில் ஏறி விடுகிறான். ஒரு பெண் அங்கே உட்கார்ந்திருக்கிறாள். அவள் பக்கத்திலே உட்காருவதுடன் அவளை முறைத்துப் பார்க்கவும் செய்கிறான். அவள் அழுக்குப் பையை விட்டுப் போனவுடன் தொடர்ந்து சென்று அவளிடம் கொடுக்கிறான். இது ஆண்களை அலக்ஷியம் செய்யும் காட்சி. பெண்கள் பஸ்ஸில் ஏறினால் எழுந்து இடம் தருகிறார்கள் ஆண்கள். ஆகவே தவறான கருத்தைக் கூறும் இக்காட்சியை வெட்டிவிட வேண்டும்.

கே. எஸ். சுப்பிரமணியன்,
சென்னை.

மனமுள்ள மறுதாரம்

குபேரம்பிள்ளை பழைய பேப்பரா லேயே பணம் சேர்த்தவன். ஒரு நாள் குபேரம்பிள்ளை தான் பொறுக்கி வந்த தாள்களை அடுக்குகிறான். அவைகள் யாவும் கிழியாதபுதுத் தாள்களாக உள்ளன. ரஸ்தாவில் யாரும் அவ்வளவு நல்ல பேப்பர்களைப் போடமாட்டார்கள். ஆகவே ரஸ்தாவில் குபேரம்பிள்ளை நல்ல தாள் பொறுக்கும் காட்சியை வெட்டி விடலாம்.

வீராசாமி,
காஞ்சிபுரம்.

பெரிய கோயில்

சோமசுந்தரம் கொடியவன். அவன் செல்லத்தின் சகோதரி குமரியைச் சிறை செய்கிறான். அவளுக்கு ஒரு ஊமை வேலைக்காரியை அமர்த்த விரும்பி ஒரு ஆளை அனுப்புகிறான். செல்லத்தின் மாமியார் அழைத்து வரப்படுகிறாள். அவள் ஊமையாக நடிக்கிறாள். அவளை நம்பி விடுகிறான் சோமசுந்தரம். அவன் எதையும் நம்பி விடக்கூடிய நல்லவனல்ல. செல்லத்தின் வீட்டில் கஞ்சா பெட்டியைப் பதுக்கிவைத்து அவள் கணவனை போலீஸில் பிடித்துக் கொடுக்கிறான்; அவர்கள் எங்கே எப்போது செல்லுகிறார்கள் என்பதை யெல்லாம் கண்காணிக்கிறான். அப்படிப்பட்ட சோமசுந்தரம் செல்லத்தின் மாமியார்தான் தன்னிடம் வந்துள்ள ஊமை என்பதை அறியமாட்டானா? இந்தக் காட்சி வெட்டப்பட வேண்டும்.

எம். எஸ். வள்ளிமயில்
சுப்பிரமணியம்,
கூனியூர்.

நாடோடி மன்னன்

இளவரசி ரத்னாவும் வீராங்கனும் இரவு ஓரிடத்தில் தங்க நேரிடுகிறது. அவன் அருகிலே படுத்துக்கொள்ள விரும்புகிறாள் ரத்னா. அவள் பிறப்பில் ஒரு ராஜகுமாரி. வளர்வதும்

சந்தியா இப்படி ஒயிலாகப்படுத்திருப்பது டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான 'மின்னல் வீர'னுக்காக.

ஒரு தலைவனின் மகளாக. அவள் இப்படி வலுவில் ஒரு ஆடவனிடம் அசட்டுப் பிசட்டென்று நடந்து கொள்ள முடியுமா? இந்த ஆபாசக் காட்சி வெட்டப்பட வேண்டும்.

டி. எஸ். விஸ்வநாதன்,

ஜபல்பூர்.

[கன்னித்தீவு மக்கள் மாக்களாகவே-ஆறுவது அறிவை உபயோகிக்காமலேயே வளருகிறார்கள். அந்தத் தீவில் ஆடவர் எண்ணிக்கை மிகக் குறைவு. படத்தில் பார்த்தபடி பெண்களுக்கு மணமாவதில் அதிக ஆசை உண்டு. 'புருசன் புருசன்' என்று ஒருத்தி தவம் செய்வதைக்கூடப் பார்த்தோமே! அதே முறையில் வளர்க்கப்பட்டவள்தான் இளவரசி ரத்னாவும். ஆனால் வீராங்கன் நல்லவனல்லவா! அதுபோதும் நமக்கு!

—ஆ-ர்.]

நீலாவுக்கு நெறஞ்ச மனசு

சின்ன பையன் வீட்டிற்குப் போகிறாள் பாலா. அங்கே தன்னிடம் சங்கீதம் பயில வரும் சின்ன பையன் என்பவன் சின்னஞ்சிறு வயது பையன் என்று நினைத்திருந்த அவள், தன்னெதிரே நிற்கும் யுவனைக்கண்டு திடுக்கிடுகிறாள். இரண்டு நிமிடங்களில் அவள் அந்த வீட்டிலிருந்தே ஓடி விடுகிறாள், கொழந்தையோடு. இருவரும் சிறிது தூரம் ஓடி மீண்டும் எகிறி குதித்து ஓடுகிறார்கள். இந்தக் காட்சி வெட்டப்பட வேண்டும். அவள் அப்படி ஓடிவிட அவளுக்குப் பைத்தியமுமில்லை, பயமுமில்லை. அந்த வீட்டாரும் அவள் ஓடும்படி எந்த ஆபத்தையும் ஏற்படுத்தவில்லை. ஹாஸ்யம் என்ற பெயரில் செய்யப்படும் இந்த அசட்டுக் காட்சியை வெட்டிவிட வேண்டும்.

வேதா வாத்தியார்,

சென்னை.

M211,N42:P
N58.17.3

ஜெகத் ஜோதி
பிலிம்ஸ்
ஓடி விளையாடு
பாப்பா
...காட்சிகள்...
VARAN

ஜெகத்ஜோதி பிலிம்ஸாரின் "ஓடி விளையாடு பாப்பா" விரைவில் திரைக்கு வரவிருக்கும் படங்களில் ஒன்றாகும். இளம் நடிக, நடிகையரும் புதுமுகங்களும் நடிக்கும் இந்தப் படத்தை வி. ஸ்ரீனிவாஸன் டைரக்ட் செய்கிறார்.

கோபி பிரதர்ஸ்
ஓடாதே!..நில்!!
...காட்சிகள்...
VARAN









தென்னிந்தியத் திரைப் படச் சரித்திரத்தில் முதன் முறையாக மேக்-அப் இல்லாமலேயே தயாரிக்கப்படும் துப்பறியும் சம்பவங்கள் கொண்ட இப் புதுமையான தமிழ்ச் சித்திரத்தை எஸ். பாலசந்தர் டைரக்ட் செய்கிறார்.

சபாஷ் மீனா

தொடர்ச்சி

காட்சி 3

மோகனின் சபதம்!

மீனாவின் உருவத்தை சுவரில் வரைந்துவிட்டுப் பேச ஆரம்பிக்கிறான் மோகன். மீனா வந்து பார்த்துவிட்டு மறைவில் நின்று கவனிக்கிறாள்.

மோக: மீனா! என் அருமை மீனா. மல்லிகையிலே மணமும், மதியிலே ஒளியும், மாம்பழத்திலே இனிப்பும், மாருதத்திலே குளிர்ச்சியும் இருப்பதைப்போல் உன் இதயத்திலே நான் என்று ஆவது, எப்போது?

மீனா: உரிய காலம் வரும் போது!

மோகன் திடுக்கிட்டுத் திரும்புகிறான். மீனாவின் கால்கள் தெரிகின்றன.

மோக: ஆகா, என் குரல் உன் செவிக்கு எட்டி விட்டதா? அன்பே! இன்று காலையில் எடுத்துச் சென்றாயே கூடை, அதில் புஷ்பங்கள் மட்டுமா இருந்தன? என் இருதயமும் அல்லவா அதில் இருந்தது!

மீனா: ஆமாம், அதனால்தான் கூடையும் கனமாக இருந்தது. பிரித்துப் பார்த்ததும் அங்கே 'உங்கள் இதயம் இருப்பதைக் கண்டேன்.

மோக: ஆகா அதைக் கூடையிலே போட்டு விட்டாயா, அல்லது உன் இதயத்தோடு இதயமாக சேர்த்துக் கொண்டாயா?

மீனா: இல்லை, திருப்பிக் கொடுக்க எடுத்து வந்திருக்கிறேன்.

மோக: ஐயையோ, கொடுமை, கொடுமை, அப்படியானால் நீ என்னைக் காதலிக்க வில்லையா?

மீனா: இல்லை, இல்லை, இருதயம் இல்லாதவரை நான் எப்படி காதலிப்பது?

மோக: இல்லை, எனக்கு இதயம் இருக்கிறது. என் இதயத்தை நான் கூடையில் போடவில்லை. நான் சொன்னதெல்லாம் பொய்யம்மா.

மீனா: ஐயையோ, எல்லாமே பொய்யா? என்னைக் காதலிப்பதாகச் சொன்னதும் பொய்யா? பொய் சொல்லும் மனிதரை நான் காதலிக்கவே மாட்டேன்.

மோக: ஐயோ, மயக்கம், மயக்கம்.

மீனா: ஐயையோ, உண்மையாகவே மயக்கம் வந்திடுச்சி போல இருக்கே?

மோக: ஆமாம், உண்மையாகவே மயக்கம்தான்.

மீனா: ஐயோ, இந்த மயக்கத்துக்கு சூடு போடணுமே. ராஜா, சூட்டுக் கோலை அடுப்பிலே போட்டு எடுத்துக்கிட்டு ஓடியாயேன்.

மோக: ஆ.....சூட்டுக்கோலா? வேண்டாம், வேண்டாம்!

எழுந்திருக்கிறான். மாஸ்டர், மாஸ்டர் என்று ராஜா ஓடி வருகிறான் இருவரும் திடுக்கிடுகின்றனர்.

பாத்திரங்கள்

சிவாஜி கணேசன்	மோகன்
சந்திரபாபு	சேகர்-மூக்கன்
எஸ். வி. ரங்கராவ்	அப்பாதுரை
வி. ஆர். ராஜகோபால்	ராஜா
கள்ள பார்ட் நடராஜன்	சங்கர்
டி. பாலசுப்ரமணியம்	சதாசிவம்
மாலினி	மீனா
சரோஜாதேவி	மாலதி

வசனம்:
ப. நீலகண்டன்

டைரக்ஷன்:
பி. ஆர். பந்துலு

ராஜா: ஏன் மாஸ்டர், இந்த வேலையே செஞ்சிகிட்டிருந்திங்கன்னு பூவாவுக்கு என்னு பண்றது?

மீனு: அப்ப நீங்க இண்ணைக்கு பூரா வேலைக்கே போகலியா?

ராஜா: இத்தனை நாளும் வேலைக்குப் போருன்னுதான் நெனைச்சிக்கிட்டிருந்தியா?

மீனு: அப்ப, சாப்பாட்டுக்கு?

ராஜா வயிற்றிலடித்துக் கொள்ளுகிருன்.

மோக: நான் ஏண்டா ததிங்கிணத்தோம் போடணும்? அப்பாவுக்கு லெட்டர் போட்டா பணம் அனுப்புருங்க.

மீனு: அவமானம். உடல் வலுவுள்ள ஒருத்தர் உழைக்காமே சாப்பிட்றது நியாயமா? நாம வேறொருத்தருக்கு பாரமா இருக்கிறது மன்னிக்க முடியாத குற்றம்....நாளைக்கு இந்தியாவிலே உழைக்கிறவங்களுக்குத்தான் சாப்பாடுங்கற நிலைமை ஏற்பட்டா நீங்கள்ளாம் என்ன பண்ணுவீங்க?

ராஜா: சங்கரா சிவ சங்கரா சிவா!

மோக: அடச்சீ, சும்மா இருடா!

மீனு: இன்னொருத்தர் உழைப்பிலே வயிறு வளர்க்க விரும்புறீங்களே, உங்களுக்கு வெட்கமா இல்லே?

ராஜா: ஐயோ, அவமானம், அடங்கப்பா.

மீனு: ஒரு சோம்பேறி என்னுடைய சினேகிதர்னு சொல்லிக்க எனக்கு வெட்கமா இருக்கு. நான் வர்றேன்.

மோக: மீனு

மீனு திரும்புகிருள்.

மோக: மீனு! இந்த உலகத்திலே என்னுடைய பெற்ருேர் உற்ருேர் யாருமே பேசத் துணியாத வார்த்தைகளை என்னிடம் பேசிவிட்டாய். ஒரு மானமுள்ள டமிலன்.

ராஜா: யாரவன்?

மோக: இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது,

ராஜா: மொள்ள. மொள்ள...!

மோக: மீனு! இன்று முதல், இல்லை இந்த மணி முதல், ஏன் இந்த விநாடி முதல் வேலை செய்வதாகத் தீர்மானித்து விட்டேன். இனி என் உழைப்பினுல் ஏற்படும் ஊதியத்தைக் கொண்டே உண்பேன். இந்த மோகினியின் முன் மோகன் எடுத்துக் கொள்ளும் சபதம் இது. உச்சிமீது வானிடிந்து வீழ்ந்த போதிலும் இந்த உறுதி மாருது.

ராஜா: சபாஷ் மீனு! பெற்ருேரும் உற்ருரும் சாதிக்க முடியாத காரியத்தை நீ சாதித்து விட்டாய்.

பரண்மேலிருந்து ஒரு பானை மோகனின் தலையில் விழுந்து உடைகிறது.

ராஜா: என்னடா இது, வானத்துக்கு பதிலாக பானை விழுது? ஏன் மாஸ்டர், என்னுவேலை செய்யப் போகிறீங்க?

மோக: யாரு சொன்னு?

ராஜா: பிரமாதமா போஸ் குடுத்துக்கிட்டு பேசினிங்களே!

மோக: நானுடா பேசினேன்? மீனு வந்து நின்னு டைலாக்கு தன்னுலே வருதுடா.

மீனு சிரித்து விட்டு ஓடுகிருள். மோகன் அவளையே பார்த்துக் கொண்டு நிற்கிருன். ராஜா அவனைத்தட்டி எழுப்புகிருன்.

ராஜா: வேலை, வேலை,

மோக: அடச்சீ, ஆராய்ச்சி பண்ணி சொல்லுடா.

காட்சி 4

யாருக்குப் பைத்தியம்?

மோகன் ராஜாவுடன் சேர்ந்து பலவிதத்திலும் பிழைக்கவழி தேடுகிருன். ஆனுல் அவன் ஸ்தானத்தில் அப்பாதுரை வீட்டிலே அவதிப்படுகிருன் சேகர். அவன் தன் அறையில் டைப் அடித்துக் கொண்டிருக்கும்போது மாலதி வருகிருள்.

“நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்”

என்று சொல்கிறுர் அசோக்குமார்

போட்டி

அறிவிக்கப்படுகிறது

“ஹாஸலேன்' ஸ்னே”வைத் தயாரிப்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட “நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்” என்ற போட்டி பில்மாலேயாவின் சொந்தக்காரரான எஸ். முக்கர்ஜீ மற்றும் நார்கிஸ், சுனில் தத் இவர்களால் தேர்ந்தெடுக்கப்படும்.

நீங்கள் சினிமா நக்ஷத்திரமாக விளங்க விரும்புகிறீர்களா? உங்களுக்கு இஷ்டமான பிரபல சினிமா நக்ஷத்திரங்களுடன் சினிமாவில் நடிக்க உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா?

உங்களுக்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம்— இதை மேலும் படியுங்கள்

இதில் என்ன விசேஷம்

இந்திய சினிமா தொழிலில் நன்ருக நடிக்கக் கூடிய நக்ஷத்திரங்களுக்குத் தற்போது தேவை முக்கியமாக இருக்கிறது. எனவே புதிய நடிகர்களைக் கண்டு பிடிப்பதற்காக “ஹாஸலேன் ஸ்னே” தயாரிப்பாளர்கள் “நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்” என்ற போட்டியை ஏற்படுத்தி இருக்கிறுர்கள் இப்போட்டியை பெயர்போன சினிமா நக்ஷத்திரங்களான நார்கிஸ், சுனில்தத் மற்றும் பில்மாலேயா என்ற பெரிய பிலிம் கம்பெனியை ஆரம்பித்திருப்பவரான எஸ் முக்கர்ஜீ அவர்களும் தேர்ந்தெடுக்க அனுமதித்து இருக்கிறுர்கள்.

இப்போட்டியில் 16 வயது முதல் 30 வயது வரை யாவரும் கலந்துகொள்ளலாம். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் தலைமுதல் தோள்வரை அல்லது தலை முதல் கால் வரையோ ஒரு போட்டோ எடுத்து அதன் பின்புறம் :-

1. பெயர் மற்றும் விலாசம்.
2. வயது
3. உயரம் மற்றும் எடை
4. எழுதப் படிக்கத் தெரிந்த பாஷைகள்
5. இவைகளை எழுதி அத்துடன் “ஹாஸலேன் ஸ்னே”வின் காலி அட்டைப்பெட்டிகளில் இரண்டும் சேர்த்து வைக்க வேண்டும்.

பிறகு அதை ஒரு கவரில் வைத்து அதன்மேல் “YOU TOO CAN BE A STAR” COMPETITION — என்று எழுதி அதை நீங்கள் “ஹாஸலேன் ஸ்னே” வாங்கிய கடைக்காரரிடம் கொடுத்தால் அவர் எங்களுக்கு அனுப்பி வைப்பார்.

நார்கிஸ், சுனில் தத் மற்றும் எஸ். முக்கர்ஜீ ஆகிய மூவரும் அவைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது. 4 சிறுவர்களும் 4 சிறுமிகளும் இதில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் இவர்கள் 8 பேர்களும் “ஹாஸலேன் ஸ்னே” தயாரிப்பாளர்களின் விருந்தினர்களாக பம்பாய்க்கு அழைக்கப்படுவார்கள்.

பிறகு பம்பாய் பில்மாலேயா ஸ்டுடியோவில் ஒவ்வொருவருக்கும் சினிமாவில் நடிப்பதற்கான பரீக்ஷைகள் நடத்தப்படும். மூன்று தினங்கள் பம்பாயில் ஓய்வு. எல்லாம் இலவசமாக.

நடிப்பதற்கான பரீக்ஷை முடிந்தவுடன் ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்விருவர்களுக்கும் சினிமா உலகில் முக்கியமான எதிர்கால வாழ்வு காத்திருக்கும்.

ஞாபகமிருக்கட்டும்
நீங்களும் சினிமா நக்ஷத்திரமாவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம்
இதை நழுவ விடாதீர்கள்
உங்களை சினிமா தொழில் எதிர்பார்க்கிறது

உங்கள் என்டிரியை இப்பொழுதே அனுப்புங்கள்

மாலதி: எப்பப் பார்த்தாலும் என்ன வேலே? உங்கப்பா உப தேசம் உடம்பிலே ஊறுதோ? உங்கப்பா சம்பாதித்த பணமே கணக்கு வழக்கில்லாமே கெடக்குது. எங்கப்பா சம்பாதிச்சது வேறே ஏராளமா இருக்குது. நீங்க வேறே கோட்டை கட்டப் போறீங்களாக்கும்.

சேகர்: அப்படின்னு உன்னுடைய அபிப்பிராயத்திலே வேலே செய்யறதுங்கறது ஒரு மகத்தான தப்பா? வாழ்க நீ. இது ஒரு தினுசான அட்வைஸ் ஆல் ரைட், இப்ப என்ன செய்யணும் சொல்லு.

மால: நம்ம நாடகத்திலே ரிக்ஷாக்காரனுடை பாடத்தை ஒப்பிங்க. நான் கேக்கறேன்.

சேக: அதை நான் எத்தனே தடவைதான் ஒப்பிக்கிறது. சும்மா சும்மா ஒப்பிச்சா அப்புறம் மறந்து போகும். அதிலே சுவையே இருக்காது,

மால: அம்ப சரி. பிக்சருக்குப் போகலாம் வாங்க.

சேக: எந்த பிக்சர்?.

மால: காதலோ காதல்.

சேக: ஐயையோ, ஐயையோ, நான் அதை ஏற்கனவே பாத்திட்டேனே.

மால: ஐயையோ, ஏன் இப்படிப் பொய் சொல்றீங்க? அந்தப் படம் இன்னேக்குத்தான் ரிலீஸ் ஆகப்போகுது. என் பேர்லே உங்களுக்கு காதலே இல்லே. நான் மட்டும் உங்களே எவ்வளவு பாஸ்டா லவ் பண்றேன்!

சேக: அதுதான் உன் முதல் தவறு.

மால: தவரு?

சேக: ஆமாம், நான் யார் தெரியுமா?

மால: சதாசிவம் பிள்ளே திருக்குமாரர் மிஸ்டர் மோகன்!

சேக: அது தான் உன்னுடைய இரண்டாவது தவறு.

மால: ஐயையோ, உங்களுக்கு மூளே கிளே சரியில்லேயா?

சேக: இது உன் மூன்ருவது தவறு. மாலதி! நான் உண்மையைச் சொல்லிடுகிறேன். நீ நினேக்கிற மாதிரி நான் மோகன் இல்லே. நான் ஒரு அனுதை, ஏழை. என் பேரு சேகர். இப்ப உடனடியா எனக்கு நீ மூணு உதவி செய்யணும். முதலாவது என்னே நீ காதலிக்கக்கூடாது. ரெண்டாவது என்னே நீ மறந்துணும். மூணுவது நான் இந்த வீட்டை விட்டு ஓடிப் போறதுக்கு நீ உதவி செய்யணும்.

அவள் காலடியில் உட்கார்ந்து போஸ் கொடுக்கிருன்.

மால: ஐயையோ, நான் நெனேச்சது சரிதான். மூளேதான் குழம்பிப் போச்சு. அப்பா அப்பா!

ஓடுகிருள்.

மால: அப்பா!

அப்: என்னம்மா?

மால: மோகன் என்னென்னமோ உளர்ருரப்பா, பைத்தியம் மாதிரி.

அப்: நீ ஒரு பைத்தியம்மா.

மால: நீங்க ஒரு பைத்தியம்ப்பா,

அப்: கரெக்ட்!

மால: நெஜமாவே ஒளர்ருரப்பா. அவர் மோகன் இல்லேயாம். ஏழையாம். அனுதையாம். என்னென்னமோ சொல்ருரப்பா.

அப்: திருட்டுப்பய. நம்ம கிட்டயே கரடி விடுகிருன்.

மால: என்னப்பா சொல்றீங்க?

அப்: பயப்படாதேம்மா. அவன் உன்னே பரீட்சை பண்ணிப்பாக்குருன், அவனேக் காதலிக்கிறியா அவனுடைய பணத்தைக் காதலிக்கிறியான்னு. அதனுலே நான் ஏழை கீழைன்னு டூப் அடிக்கிருன். நீ அதையெல்லாம் நம்பாதே.

மால: சரிப்பா, இனிமே அவர் சொல்றது எதையுமே நம்பப் போறதில்லே.

திருப்தியுடன் போகிருள்.

உங்கள் கேசத்திற்கு உரிய பராமரிப்பை அளிக்கிறீர்களா ?

இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்றுடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மிளிரும். சுத்தமான தேங்காயெண்ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத்துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

இராஸ்மிக்

பர்ப்யூம்ட்

கோகனட் ஹேர் ஆயில்

ECH. 3·50 TM

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!



மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1,94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**

(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

காட்சி 5

கிழவரின் வாழ்த்து

மோகன் கோயிலருகே மீனாவை சந்தித்து அவளது புஷ்பத்தையெல்லாம் விற்றுத் தருகிறான். மீனாவை மணக்க விரும்பிய சங்கர், அவள் தந்தையிடம் மோகன்-மீனா பற்றிக் கதைகட்டிப் பேசுகிறான்.

சங் : குட் மார்னிங் மாமா!

தந் : வாப்பா.

சங் : மாமா! உங்க பொண்ணுடைய உழைப்புக்கும் முயற்சிக்கும் நீங்க இந்த மண் குடிசையிலேயா இருக்கிறது? ஒரு மாளிகையிலேல்ல இருக்கணும்.

தந் : என்னப்பா கேலி செய்யிறே. மல்லிகைப் பூ வித்தா மாடி வீடு கட்ட முடியும்?

சங் : என்ன மாமா, நீங்க நெனைச்சா மாடி வீடு மட்டுந்தானா, மாட மாளிகை கூட கோபுரம் எல்லாம் கட்ட முடியுமே. உங்க பொண்ணுடைய இளமை, அழகு, சாகஸம்...

தந் : சங்கர், என்னப்பா சொல்றே?

சங் : உங்களுக்குத் தெரியாதா என்ன? உங்க பொண்ணு கதம்பம் விக்கறதுக்கா போறா? காதலனோடே சரச சல்லாபம் செய்யிறதுக்கில்ல போறா!

தந் : அடப்பாவி, இன்னொரு தரம் சொல்லாதேடா. உன் நாக்கு அழுகிப் போயிடும்.

சங் : இது ரொம்பப் பழைய சாபம் மாமா!

தந் : ஏண்டா, ஏதாவது குடிச்சிட்டு வந்திருக்கியா?

சங் : மடத்தனமா உளருதிங்க மாமா. இப்ப எங்கூட வந்தீங்கன்னா உங்க அருமைக் குமாரி கோவில் வாசல்லே கும்மாளம் அடிச்சிக்கிட்டிருக்கிறதை நேர்லேயே பாக்கலாம். ஓ, உங்களுக்குக் கண்ணு தெரியாதோ! இதையெல்லாம் பாக்க வேண்டாம்னுதான் நீங்க ஏற்கனவே குருடாயிட்டிங்களா? இல்லே... நீங்க குருடாயிட்டதனாலேதான் இந்தக் காட்சிகள்ளாம் நடக்குதா?

தந் : ஐயோ, என்னாலே இதை நம்ப முடியாது. எதையோ மனசிலே வச்சிக்கிட்டு நீ இப்படி சூழ்ச்சியா பேசறே!

சங் : உங்களுக்கு கண்ணு மாத்திரமில்லே மாமா, கருத்தும் குருடாப் போச்சு!

தந் : எம்பொண்ணைப்பத்தி எனக்குத் தெரியும். அவ உத்தமிடா, தெய்வப்பிறவி.

சங் : இப்பத்தான் தெரியுது மாமா, உங்க பொண்ணோடே நடத்தைக்கு நீங்களும் உடந்தைன்னு.

தந் : ஐயோ!...

சங் : என்னய்யா நாடகம் ஆடுறே? பணத்தை சேக்குற வரைக்கும் சேத்துக்கிட்டு அப்புறம் அவளை என் தலையிலே கட்டிடலாங்கிறது தானே உன் எண்ணம்?

தந் : டேய் சங்கர்! உன்னை என் கையாலேயே கொன்னுடுவேன். ஓடிப்போ, இந்த இடத்தை விட்டு.

தந்தை தடியால் பானை சட்டியெல்லாம் உடைக்கிறார்; சங்கர் சிரிக்கிறான்.

சங் : கொலை பண்ண வேண்டியது என்னை இல்லைய்யா, உம் பொண்ணை. கொஞ்சமாவது மான ரோஷமிருந்தா அதை செய். நான் வர்ரேன்.

சங்கர் போகிறான். கிழவன் பதறி ஓடி கீழே விழுகிறார். மீனா வருகிறாள். 'அப்பா, அப்பா' என்று அவரைத் தூக்கி விடுகிறாள். தந்தை அவள் கையைப் பிடித்துக் கொள்கிறார்.

தந் : மீனா! உன்னைப் பூ விக்க அனுப்பிச்சேனா. இல்லே, நம்ம மானத்தை விக்க அனுப்பிச்சேனா.

மீனா : ஐயோ, அப்பா!

தன் காதுகளை மூடிக்கொண்டு அழுகிறாள்.

மீனா : அப்பா, உங்க பொண்ணைப் பாத்து நீங்களா இப்படிப் பேசுறீங்க? வயிறு வளர்க்க முடியல்லேன்னா செத்துப் போவேனே தவிர, மானத்தை இழக்க மாட்டேம்ப்பா, மானத்தை இழக்க மாட்டேன். இறைவன் சாட்சியாக நான் நிரபராதியப்பா. என்னை நம்புங்கள்.

காலைப்பிடித்துக் கொள்கிறாள்.

தந் : அது போகட்டும். நெஜம்மா சொல். கோயில் வாசல்லே என்ன நடந்தது?

ரூபாய் 6/-க்கு ஒரு கடிகாரம்



சங்கிலித் தொடர்பு முறையில் ரூ. 6/-க்கு ஒரு கடிகாரத்தைப் பெறுங்கள். 15 ஜுவெல்கள் கொண்ட இக் கடிகாரம் 5 வருஷ உத்திரவாதமுள்ளது. தபால் செலவு ரூ. 1-25 நயா பைசே தனி. எங்களுடைய பாரடைஸ் சென்டைப் பிரபலப் படுத்தவே இதை ஆரம்பித்திருக்கிறோம். நீங்கள் விரும்பாவிட்டால் பணம் வாபஸ்.

American Trading Company,

(Watch Suppliers)

(PPM) JULLUNDER CITY.

மோகன் வந்து கொண்டே பேசுகிறுன்.

மோக: நான் சொல்றேன் சார்!

தங்: யாரப்பா நீ?

மோக: நான்தான் மோகன். கோயில் வாசல்லே நானும் மீனு வும்தான் பேசிக்கிட்டிருந்தோம். இதைப்பத்தி சந்தேகப்புத்தி கொண்ட யாரோ உங்கக்கிட்ட தவரு சொல்லியிருக்காங்க.

தங்: சொன்னதிலே தவறு ஒண்ணுமில்லேப்பா!

மோக: அப்படின்னு?

தங்: மீனு உங்கிட்டேயும் பேசியிருக்கக்கூடாது. அது ஒரு கன்னிப்பொண்ணேட வாழ்க்கையிலே எவ்வளவு பெரிய களங்கத்தை உண்டு பண்ணியிருக்குன்னு உனக்குத் தெரியாது.

மோக: தயவு செய்து அதைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். நான் மீனுவைக் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன்.

மீனுவின் அருகில் வருகிறுன்.

தங்: இதிலே உன்னுடைய முடிவுமட்டும் போதாதப்பா. உன்னுடைய தாயாரும் தகப்பனும் சம்மதிக்கலேன்னு இந்த பெண்ணேட கதி என்ன ஆகும்?

மோக: நிச்சயமா அவுங்க சம்மதிப்பாங்க. இந்தக் குடிசையையே கோயிலாகவும் உங்களையே தெய்வமாகவும் நெனச்சி சத்தியம் பண்றேன். மீனுதான் என்னுடைய வாழ்க்கைத் துணைவி. எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க.

இருவரும் காலில் விழ, மோகன் என்று உணர்ச்சியோடு, கண்களில் நீர் வழிய இருவரையும் அணைத்துக் கொள்ளுகிறுர் கிழவர்.

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50 - க்கு, 96" x 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல்பணம்வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR SHAWL HOUSE (PM)
AMRITSAR.

காட்சி 6

தலைக்கு வைத்தது...

மளிகைக்கடையில் வேலை பார்க்கும் மோகன், பக்தி வசப்பட்டு பொருள்களை யெல்லாம் பணம் வாங்காமல் தருவதால் முதலாளி துரத்தி விடுகிறுர். அவன் ராஜா மூலம் டாக்ஸி டிரைவராகி விடுகிறுன். சதாசிவம் மோகனை பார்க்க சென்னை வருகிறுர். மோகனே அவரை அப்பாதுரை வீட்டில் கொண்டு விடுகிறுன். சதாசிவத்தை கண்ட சேகர் ஓடி வரும்போது மோகன் தடுத்து, அவனுடன் அப்பாதுரையின் காரியாலயத்திற்குப் போகிறுன். சதாசிவம், அப்பாதுரை இருவரையும் ஏமாற்ற அங்கே திட்டம் தீட்டுகிறுன் மோகன். காரியாலத்தில் தன் மகன் வேலை செய்வதைப் பார்க்க வருகிறுர் சதாசிவம். அப்போது சேகர் டைப் அடிப்பவனைப் போல உட்கார்ந்திருக்க, மோகன் அவனை மிரட்டுகிறுன்.

மோக: 175 ரூபாய். இங்கே என்ன நோட்டு பிரிண்ட் பண்றுங்கன்னு நெனைச்சியாய்யா? ஏய்யா, கொஞ்சமாவது ரெஸ்பான்ஸி

இனாம்! **இனாம்!!** **இனாம்!!!**



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 போன்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (P. P. M.)
Jullundur City.

பிலிடி இருக்காய்யா? ஒன்னை ஒடனே டிஸ்மிஸ் பண்ணுவேன். ஒவ்வொரு ரூபாயும் அப்பாத்துரை பிள்ளையின் ஒவ்வொரு சொட்டு ரத்தமய்யா.

சதாசிவம் வருகிறார்—மோகன் என்கிறார்—அவரைப் பார்க்காதது போல் நடிக்கிறான் அவன்.

மோக: போங்க சார், இப்ப நேரமில்லே, ரொம்ப பிசியா இருக்கேன். (சேகரிடம்) ஏன்ய்யா என்ன நெனச்சே? கொஞ்சமாவது பொறுப்பு வேணும்?

சதாசிவம் மகிழ்ச்சி அடைகிறார். மோகன் தகப்பனாரைப் பார்க்கிறான்.

மோக: அப்பா! எப்பப்பா வந்தீங்க? அம்மா சௌக்கியமாப்பா? நான் பழைய சோம்பேறி மோகன் இல்லே. உழைப்பாளி மோகன். நான் வேலை செய்யிற காட்சியை நீங்க பாக்கணுங்கறதுக்காகத்தான் இப்படிச் சத்தம் போட்டேன். இல்லே வீட்டிலேருந்து ஓடியாந்தேன்.

சதா: ரொம்ப சந்தோஷம்ப்பா. என் கனவெல்லாம் நனவாயிட்டுது. இனிமே நீ என்னத்துக்காக இங்கே இருக்கணும்? நம்ம ஊருக்கு வந்து நம்ம ஆபீஸையே பாத்துக்கலாமே.

மோக: ஐயையோ, அது எப்படிப்பா? திடீர்னு எல்லாத்தையும் போட்டது போட்டபடியே விட்டுட்டு வந்திட முடியுமா?

சதா: சரி மோகன், கல்யாண விஷயமா?

மோக: கல்யாணமா? யாருக்குப்பா?

சதா: அதாம்ப்பா, அந்த மாலதிக்கும் உனக்கும்.

மோக: ஐயையோ!

சதா: என்ன?

மோக: வந்து.......வந்துப்பா. அது வேண்டாம்ப்பா.

சதா: போடா போ. உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் கல்யாணம் பண்ணிட்றதுன்னு நாங்க ரொம்ப நாளா பேசிக்கிட்டிருந்தோம்.

மோக: அப்பா! அந்த பொண்ணு கொஞ்சம் பைத்தியம்ப்பா.

சதா: பைத்தியமா! நான் போயி அந்த அப்பாத்துரை பயலை என்ன பண்றேன் பாரு. நீ வேலையைக் கவனி.

சதாசிவம் போகிறார். மோகன் சேகரிடம் வருகிறான்.

சேக: ஏண்டா, என் மாலதி யாடா பைத்தியம்?

மோக: சரிதான் நிறுத்துடா. உன் மாலதியே நான் குடுத்த பிச்சை தானேடா.

'மோகன்' என்ற குரல் கேட்கிறது.

சேக: டேய், அந்த கரெக்ட் அப்பாத்துரை வரார்டா.

நாற்காலிக்குப் பக்கத்தில் நிற்கிறான். மோகன் டைப் ரைட்டருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து டைப் பண்ணுவதைப் போல் நடிக்கிறான்.

சேக: மாமா...

நடுங்குகிறான்.

அப்: அப்பாவைப் பாத்த பயம் இன்னும் தெளியலியா?

சேக: மாமா, இந்த ஊரை விட்டே தொரத்திடுங்க ... பயமா இருக்கு!

அப்: பாத்தியா, மறுபடியும் உன்னை பயமுறுத்திட்டானா? அவனை இப்பவே இங்கே கூப்பிட்டு ஒனக்கு நேராகவே என்னா செய்யிறேன் பாரு.

கூப்பிட முயற்சிக்கிறார். சேகர் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிறான்.

சேக: மாமா! உங்களைக் கும்பிட்றேன். அவரை கூப்பிடாதிங்க. என் உயிரே போயிடும்.

அப்: சரிப்பா, நீ பயப்படாதே.

சிரித்துக் கொண்டே போய் விடுகிறார்.

மோகனும் சேகரும் 'சக்சஸ்' என்று கத்திக்கொண்டு ஆடிப் பாடி அமர்க்களம் செய்கிறார்கள். கதவைத் திறந்து கொண்டு அப்பாத்துரையும் சாதாசிவமும் வருகிறார்கள். மோகனும் சேகரும் ஸ்தம்பித்துப் போய் நிற்கிறார்கள்.

சதா: மோகன்! இன்னைக்கு சாயந்திரம் ஆறு மணி வண்டிக்கு

உங்கள் அதிருஷ்டம் 1959-க்கு



உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில், லாப நஷ்டம், உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

SHREE SWAMI SATNARAIN JYOTISH AHSRAM
(P.P.M.) JULLUNDUR CITY (Pb.)

ஊருக்குப் போகிறேன். வரட்டுமா மோகன்?

இருவரும் தலை ஆட்டுகிறார்கள்.

அப்பா : வர்ரேன் மோகன்.

இருவரும் மீண்டும் தலை ஆட்டுகிறார்கள். அப்பாத்துரையும் சதாசிவமும் போகிறார்கள். மோகனும் சேகரும் மயங்கி விழுகிறார்கள்.

காட்சி 7

சங்கரின் விறைப்பு

ரங்கநாதம் என்பவர் ஒரு லட்சாதிபதி. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அவரது மகன் காணாமல் போனதால் அவருக்குப் பைத்தியம் பிடித்திருந்தது. யாரைப் பார்த்தாலும் 'மகனே!' என்றழைத்து வீட்டுக்குக் கூட்டி வருவார். மோகனை அவர் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறார். காரியதரிசி ராஜாவும் தொடருகிறான்! அவர் மனைவி மரகதத்திடம் விவரம் கேட்கிறான் மோகன். காணாமற்போன தன் மகனுக்கு முதுகில் மாங்காய் உருவில் மச்சமொன்று இருக்கும் என்றும், இருபதுலக்ஷ ரூபாய் முதல் போட்ட தங்கள் கம்பெனியின் நிர்வாகத்தை சங்கர் என்பவன் கவனித்து வருவதாகவும் கூறுகிறாள். அவர்கள் சிறிதுகாலம் தங்கியிருந்தால் தன் கணவனின் பைத்தியமும் தெளிந்து விடுமென்று கூற, இருவரும் சம்மதிக்கின்றனர். இதற்கிடையில் ரங்கநாதம் மோகனை கம்பெனிக்கு அழைத்துச்சென்று சங்கருக்கு அறிமுகப் படுத்துகிறார். அவன் ஒரு 'சுரண்டல் பேர்வழி' என்பதை மோகன் கண்டு கொள்கிறான்.

காட்சி 8

ரிக்ஷாக்கார மூக்கன்

சேகர், அப்பாதுரையின் வீட்டில் அனாவசியமாகப் பயந்து வீட்டை விட்டு ஓடி வந்து விடுகிறான். அரச மரத்தருகேயுள்ள மேடை மீது படுக்கிறான். அப்போது சேகரைப் போன்ற தோற்றமுள்ள மூக்கன் என்ற ரிக்ஷாக்காரன், எதிரேயுள்ள குடிசைக்குள் நுழைகிறான். மூக்கனும் அவன் மனைவி வள்ளிக்கண்ணுவும் பேசிக் கொள்ளுகிறார்கள்.

மனை : அடப்பாவி, நீ நல்லா இருப்பியா? இப்படி அக்ரமம் பண்றியே.

ரிக் : இந்தாமே, நீ சும்மா சும்மா நம்ம கைலே ராங் பண்றே. இனிமே ஏதாவது பேசினே கையைக் காலை முறிச்சிப் போட்டுடுவேன் பாத்துக்க.

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான் : தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை : இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

இரவில் தனியாக இருக்கும்
போதுதான் பார்த்துக்
கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் செட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ.வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE
Durgiana (P.P.M.) Amritsar.

மனை : நீ பண்ற அக்ரமத்துக்கு ஆண்டவன்தான் கூலி குடுக்கணும்.

ரிக் : எங்கேடி குடுக்குறான், கூலி? ஒரு நாள் பூராவும் மாடு மாதிரி இஸ்துக்கினு திரியிறேன். முழுசா ரெண்டு ரூபா கெடைக்க மாட்டேங்குது.

மனை : எப்பிடிய்யா கெடைக்கும்? கெடைக்கமாட்டேங்குதா? ஆப்ட்ட ரூபாயை ஆப்பகாரிச்சி கையிலே குடுத்து அவ கால்லே வீந்துட்டு வந்து, எங்கைலே இந்த ஒரு ரூபாயை நீட்டுறியே, நான் இதை வச்சிக்கினு கஞ்சி காச்சி உனக்கு ஊத்துவேனா, ஒங் கொயந்தங்களுக்கு ஊத்துவேனா?

ரிக் : ஆப்பக்காரியைப் பத்திப் பேசினே ஒம் பல்லைக் கழட்டிப் புடுவேன் பாத்துக்க.

மனை : ஐயே, பல்லைக் கழட்டு வாரு. இவரு பெரிய டாக்டரு பாரு.

ரிக் : ஏதாவது பேசினே லிவரை ஒடைச்சிடுவேன் பாத்துக்க.

மனை : இந்தாய்யாவ், நீ ஒண்ணு ஒண்ணா கயட்டிகினு இருக்காதே. ஒரேயடியா ஒங் கையாலேயே கொன்னு போட்டுடு. அப்புறமா அலுப்பில்லாமே ஆப்பக்காரிச்சியே இஸ்தாந்து இங்கே வச்சிக்கினு குடுத்தனம் நடத்து. கட்டின பொண்டாட்டிக்கும் பெத்தக் கொயந்தைங்களுக்கும் சோறு போடத் துப்பில்லே.

ரிக் : என்ன சொன்னே? துப்பில்லாதவங் கிட்டே இருக்க வேண்டாண்டி நீ. போ......நீ என்ன போறது? நான் போறேன். இனிமே உன் கையாலே சோறு வாங்கித் தின்னு நான் ஆம்பிளை இல்லே. இத பாரு. நான் சத்தியமா திரும்பி வரப் போறதில்லே.

மனை : சரித்தான் போயேன். எங்கே போவியாம்? வயிறு வத்தினா இந்த வல்லிக்கண்ணு கைலே தான் வரணும். போ....போ.

வெளியே அரசமரத்தடியில் படுத்திருக்கும் சேகரை கடந்து போய்க் கொண்டிருக்கிறான், ரிக்ஷாக்கார முக்கன்.

காட்சி 9

ஓடு, ஓடு, ஓடு!

சேகர் முகத்தைக் கழுவிவிட்டு எழுந்திருக்கும்போது ரிக்ஷாக்கார மூக்கனின் ஆசைநாயகியான ஆப்பக்காரி வருகிறாள். சேகரை அவள் மூக்கன் என நினைத்துப் பேசுகிறாள்.

ஆப்: ஏந்தே, ஆப்பம் துண்றியா?

சேக: நல்லவேளை, கொண்டாம்மா. நேத்து ராத்திரி வேறே பட்டினி. இரு, இரு, (*காசு இருக்கிறதா என்று பார்க்கிறான்.*) ஆ... இருக்குது இருக்குது.

இரண்டணவை அவளிடம் தந்து இந்தா, இந்தா, என்கிறான்.

ஆப்: ஏந்தே இண்ணைக்கு என்ன பேச்சு கீச்செல்லாம் ஒரு தின்சா இருக்கு?

சேக: தின்சா இருக்கா?

ஆப்: இதெல்லாம் என்ன வேஷம்? மீசை திடீர்னு இளைச்சுப் போயிருக்கு. டிரஸ்ஸெல்லாம் அநியாயத்துக்குப் பெருத்துப் போயிருக்கே.

சேக: இந்தா இந்தா, அந்தக் கேள்வியெல்லாம் உனக்கெதுக்கு? நீ போ.

ஆப்: அது சரி. நேத்து சாயங்காலம் சினிமாவுக்கு இட்டுக்கினு போறேன்னு சொன்னியல்ல, அப்பாலே ஏன் வரல்லே?

சேக: என்னது சினிமாவா? என்னம்மா இது? யாருகிட்ட பேசறே?

ஆப்: இந்தாதே, அந்த ஜோக்கெல்லாம் நீ நம்ப கைலே வச்சிக்காதே!

சேக: நீ என்ன பெரிய அகராதியாய் இருப்பே போலிருக்கே?

ஆப்: சரி, அது போகட்டும். ஏந்தே அண்ணைக்கு சென்ரல்

இனும் ரூ. 1000

ஜலந்தரில் ஒரு தோலா தங்கம் விலை ரூ. 2-50 தான்

இந்த அமெரிக்கன் நியூ கோல்ட் அசல் தங்கத்தைப் போன்றது. நீண்ட கம்பிகளாக்கவும், எல்லாவிதமான ஆபரணங்கள் செய்வதற்கும் ஏற்றது. மிக்க அனுபவசாலிகளான வியாபாரிகள்கூட, அசல் தங்கத்திற்கும் இந்த அமெரிக்கன் நியூகோல்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கத் திணறுவார்கள்.

விலைவாசி உயர்ந்துள்ள இந்நாளில் கல்யாணம், மற்றும் இதர விசேஷங்களில் பணத்தைச் சேமிக்க இன்றே உங்கள் தேவையைக் குறித்து அனுப்புங்கள். இந்த அமெரிக்கன் நியூ கோல்ட் பொய்யானது என்பதை நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஒரு தோலா ரூ. 2-50; மூன்று தோலா ரூ. 7. ஆறு தோலா ரூ. 13. பத்து தோலா ரூ. 20. தபால் செலவு தனி. இன்றே எழுதுங்கள். **நீங்கள் அங்கீகரிக்கா விட்டால் உங்கள் பணத்தை வாபஸ் செய்ய நாங்கள் உத்திரவாதம் தருகிறோம்.**

IMPERIAL COMMERCIAL COMPANY
(PM) JULLUNDUR CITY.

ஜெயில் மின்னே என்னைப் பாத்து நீதானே சொன்னே, கோடம் பாக்கம் புடவை ஒண்ணு வாங்கித் தர்ரேன்னு.

சேக : அட! இதென்னடா வம்பு, காலங்காத்தாலே? ஏம்மா, நீ யாருன்னு நெனச்சிகிட்டு பேசறே?

ஆப் : யோவ், யோவ், இந்த டுப் அடிக்கற வேலையெல்லாம் எங்கைலே வச்சுக்காதே.

தற்செயலாகத் திரும்பியவள் அங்கே வல்லிக்கண்ணு நிற்பதைப் பார்த்து விடுகிறாள். ஆப்பக்காரி செல்ல, வல்லிக்கண்ணு தன் சுற்றுப்புறமிருந்தவர்களின் உதவியால் சேகரைப் பிடிக்கச் சொல்லுகிறாள். அவனுக்குப் பிசாசு வந்து விட்டதென மரத்தில் கட்டி பூசை போடுகிறார்கள். முடிவில் அவனை அவிழ்த்துவிட ஓடி விடுகிறான் சேகர்.

காட்சி 10

மோகனின் புத்திமதி

சேகரை மூக்கன் என்று நினைத்து பூசாரி சலாட்டா செய்ததுபோல மூக்கனை சேகர் என்று நினைத்து அப்பாதுரை வீட்டுக்கு அழைத்துப் போகிறார்கள், அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக நினைத்து வைத்தியம் செய்கின்றனர். மோகன் சேகரை சந்திக்கப் போய் மூக்கனிடம் அடிபட்டுத் திரும்புகிறான். அப்போது சேகர் அங்கு வர, மோகனும் அவனை பைத்தியம் என்று நினைத்து ராஜாவிடம் அவனை ஒப்படைத்துவிட்டு, ஸ்டிரைக் செய்யும்தன் தொழிலாளிகளிடம் வருகிறான். சங்கர் தொழிலாளர்களைக் கிளப்பிவிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறான். மோகன் விஷயத்தை விளக்கி சங்கரின் சதித்திட்டத்தையும் அம்பலப் படுத்தி, அவர்களைச் சமாதானமாக வேலைக்குத் திரும்பச் சொல்கிறான்.

நாகப்பனின் கதி

சங்கர், நாகப்பன் என்னும் குமாஸ்தாவைக் கொண்டு ஒரு சூழ்ச்சி செய்கிறான். அதன்படி மோகனை மடக்கி வெத்துத் துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தி லட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபாயையும் அவனே எடுத்ததாக கையெழுத்திடும்படிக் கூறுகிறான் நாகப்பன். அப்போது மோகன் வெத்துத் துப்பாக்கியைத் தட்டிவிட்டு எடுத்துச் சுட, நாகப்பன் அடிபட்டது போல் பாசாங்கு செய்து விழுகிறான். கொலை செய்து விட்டதாகப் பயந்து மோகன் ஓடி விடுகிறான். சங்கர் அங்கே வந்து இந்தச் சதியின் இறுதிக் கட்டமாக நாகப்பனை உண்மையாகவே சுட்டுக் கொன்று விடுகிறான் இதை போலீஸிலும் சொல்லி விடுகிறான். மோகனைபோலீசார்தேடுகின்றனர்.

காட்சி 11

மூக்கனின் கோபம்!

சதாசிவம் அம்புஜம் இருவரிடமும் போலீஸார் மோகனின் போட்டோவை வாங்கிச் செல்லவே, அவர்கள் அப்பாதுரையிடம் ஓடி வருகிறார்கள். மோகனை சி. ஐ. டி. போலீஸார் கைது செய்கிறார்கள். சேகர், மோகன் என்ற பெயரில் உலவியதால் அவனும் கைது செய்யப்படுகிறான். மூக்கன் சேகரைப்போலிருப்பதால் அவனும் கைதாகிறான், இன்ஸ்பெக்டருக்கு ஒரே குழப்பம். சிறையில் மூக்கன் சங்கரைப் பார்த்து விட்டுத் திகைக்கிறான்.

மூக் : யோவ், என்னாய்யா என்னை மாதிரியே இருக்கே? அதுக்காகத்தான் என்னை புடிச்சாந்து அடைச்சானுங்களா! யோவ் சோமாரி. நீ கொலை பண்ணத்துக்கு நானாய்யா தூக்குலே சாவணும்?

சேக : யப்பா! நான் நொந்து போய் வந்திருக்கேன். நீ வேறே ஏதாவது சொன்னே நான் தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போவேன்.

மூக் : சீ, சும்மா இர்ரா. கொலை பண்ணிட்டு பேச்சு வேறயா ஏண்டா கயிதை, கயிதை?

காட்சி 12

மூக்கனின் கவலை

அப்பாதுரையிடம் தன் குழப்பம் பற்றிக் கூறி வரவழைக்கிறார்

இன்ஸ்பெக்டர். அப்பாதுரைசேகர், மூக்கன் இருவரையும் கண்டு திடுக்கிடுகிறார். மூக்கன் அவரைக் கண்டு ஆத்திரத்தோடு பேசுகிறான்.

மூக் : என்னய்யா மொறைக்கிறே? மாப்பிள்ளை மாப்பிள்ளைன்னு கூப்பிட்டு என்னை மாமியார் வீட்லே கொண்டாந்து தள்ளிட்டியே நல்லாயிருப்பியா நீ?

அப்பாதுரை சேகரிடம் வருகிறார் சேகர் பேசுகிறான், அவரிடம் உருக்கத்தோடு.

சேக : மாமா! சாரி, கடைசி முறையாச் சொல்றேன். கரெக்டாக் கேட்டுக்கங்க. நான் அறுதை. ஏதோ கேப்பார் பேச்சைக் கேட்டு இந்த கதி ஆய்ட்டேன். நீங்கதான் கண்கண்ட தெய்வம். ஏதாவது முடிஞ்சா செய்ங்க.

அப் : இந்த ரெண்டு பேர்லே யார் கரெக்ட் மோகன்?

இன்ஸ் : அதைத்தானே சார் நானும் கேக்கறேன். நீங்கவேறே?

அப் : கரெக்ட், கரெக்ட்! ஏம்ப்பா செப்டம்பர் மாசம் 22-ம் தேதி என் வீட்டுக்கு வந்த பய யாரு?

சேக : நாந்தான் மாமா.

அப் : கரெக்ட், அப்ப நீ?

மூக் : யோவ், உனக்கு நான் எத்தினி தபா சொல்றதுய்யா? நான் மோகன் இல்லே மூக்கன்னு ...பைத்யம்னு சொல்லி என் உயிரை வாங்கிட்டே. உள்ளே வேறே தள்ளிப்புட்டே.

வல்லிக்கண்ணு ஓடி வருகிறாள்.

வல் : எஜமான், எஜமான். எங்க ஊட்டுக்காரரை விட்டுடுங்க. அது லபோ திபோன்னு கத்தும். ஒண்ணும் கையாலாகாது. உங்கக் கால்லே விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன். விட்டுடுங்க எஜமான்.

மூக் : ஏய் கய்தே பாத்தியாடி. சாபங்குடுத்தே. நான் இங்கே வந்திட்டேன். கொயந்தைங்க எங்கடி? கொண்ணுட்டியா?

வல் : அடச் சீ, சும்மா இரு. எஜமான் அவரை உட்டுடுங்க.

மூக் : சாமி. அவ கொலைகாரி.

இன் : ஷட் டப்.

மூக் : சரி சாமி.

இன் : ஏ 144, அவனைத் திறந்து விடய்யா.

இன்ஸ்பெக்டர் போகிறார். போலீசார் திறந்து விடுகின்றனர். வெளியில் வருகிறான் மூக்கன்.

வல் : இப்பவாவது புத்தி வந்திச்சா?

மூக் : சும்மா இருமே கய்தே. ஏய், ஆப்பக்காரிச்சி எப்டிக்கிரா?

வல் : என்ன......?

மூக் : சத்தம் போடாதே...அப்பாலே ரெண்டு பேரையும் சேத்து மூடிடுவாங்க.

அவளை இழுத்துக்கொண்டு போகிறான். இன்ஸ்பெக்டரும் அப்பாதுரையும் இருக்கிறார்கள். சதாசிவமும் அம்புஜமும் வருகிறார்கள்.

சதா : சார், என் மகன் மோகன் காணமல் போய்ட்டான். அவனைக் கண்டு பிடிச்சுக் கொடுக்கணும்.

அப் : சதாசிவம்! என்னப்பா குருட்டுத்தனமா உளறிக்கிட்டு? உன் மகன் தான் இங்கே இருக்கானே கல்லுப் பிள்ளையார் மாதிரி.

எல்லோரும் ஓடுகிறார்கள். பார்க்கிறார்கள். சேகர் லாக்கப்பில் இருப்பதைப் பார்த்துவிட்டு திடுக்கிடுகிறார்கள்.

சதா : என்னய்யா, மடத்தனமா இருக்கு? இவனு என் மகன்?

அப் : என்ன! இவன் ஒன் மகன் இல்லையா?

சேக : நான் மோகன் இல்லே, என் பேர் சேகர்ன்னு நானே சொன்னேனே, நீங்க கேட்டீங்களா.

அப் : அட அயோக்கியப் பயலே.

அப்பா என்ற குரல் கேட்கிறது. சதாசிவம், அம்புஜம், அப்பாத்துரைஆகியோர் அங்கே போகிறார்கள். மோகன் அங்கே 'லாக்அப்' பில் இருக்கிறான்.

அம் : மகனே!

சதா : மோகன்!

மோக : அம்மா!

அப்பாதுரையின் பக்கம் அம்புஜம் திரும்புகிருள்.

அம் : அடப்பாவி, ஒன் வீட்டுக்கு அனுப்பினதுக்கு எம்புள்ளேயை ஜெயில்லே தள்ளி யிருக்கியே.

அப் : ஏம்ப்பா, இவனு உன் மகன்?

சதா : ஏம்ப்பா மோகன். நீ அப்பாத்துரை வீட்டுக்கு போகலியா?

மோக : இல்லேப்பா. எனக்குப் பதிலா சேகரை அனுப்பிச்சேன்.

அம் : நம்ம பரம்பரையிலே எல்லாரும் ரத்தத்தைப் பார்த்தாலே பயப்படுவாங்களே. நீ இப்படி கொலேகாரன்னு வந்து நிக்கிறியே?

மோக : நான் என்னம்மா பண்றது? தற்காப்புக்காக அவனே கொலே பண்ணவேண்டி ஆயிடுச்சி.

இருவரும் அழுகிருர்கள்.

காட்சி 13

சங்கர் அகப்பட்டான்

மீனுவும் அவள் தந்தையும் ராஜாவும் மோகனே பற்றியும் அந்தக் கொலே விஷயம் பற்றியும் பேசிக் கொண்டிருக்கின்றனர். ராஜாவின் யோசனேப்படி மீனு சங்கரிடம் சாகஸசம் செய்து, உண்மையான விஷயங்களே அவன் வாய் மூலமே வெளியிடச் செய்கிருள். அவன் பேசியதை அப்படியே டேப் ரிகார்டில் பதிவு செய்து கொண்டு, மறைவிடத்திலிருந்து போலீசாருடன் வருகிருன் ராஜா. போலீசார் சங்கரைக் கைது செய்கின்றனர்.

89696

காட்சி 14

மாங்கா மச்சம்!

சேகர், மோகனின் விடுதலேச் செய்தியை அப்பாதுரை படிக்கும் போது சேகர் வருகிருன். அவனே வெளியே துரத்த அவர் முயற்சிக் கையில் மாலதியும் உடன் கிளம்பவே, அவர்களே மணமக்களாக்கச் சம்மதித்துச் செல்கிருர் அ...

ரங்கநாதம் வீட்டில் ராஜா கை... கட்டுடனிருக்க அவனேச்சுற்றி ப... மோகன் முதலியோர் இருக்கிறனர்.

ராஜா : மாஸ்டர், ஓங்க ... தலேயைக் கேட்டதுக்கப்பறந்தா... தங்கச்சி மொகத்திலே க... வந்திச்சி.

மீனு : போங்கண்ணு.

ராஜா : இருக்கட்டும், இ... கட்டும்.

அம் : அம்மா மீனு, எ... புள்ளேக்கி மறுபடியும் வாழ்... குடுத்த தேவதையே நீதாம்மா,

சதா : ஆமாம்மா, இனிமே இவன் வாழ்க்கையிலே நீதாம்மா ஒளி வீசிக்கிட்டிருக்கணும்.

ராஜா : தங்கச்சி! எங்க மாஸ்டரை பொறுப்புள்ள பெரிய... மனுஷனுக்கினது பெரிசில்லே... பணம் படைச்ச மாமியாரையு... மாமனுரையும் பரம ஏழையா... ஒன்னே மருமகளாய் அடைய ஏ... பாடு பண்ணிட்டே பாரு, சபாஷ்... மீனு, சபாஷ் மாஸ்டர். இ... சேதியைக் கேட்டவுடனே எ... காயமெல்லாம் ஆறிப்போயிடுச்சி...

ராஜா : இந்த முடிச்சை அ... ருங்க.

மோக : முடிச்சவுக்குற வா... தையையே இனிமே மறந்திடுங்...

ராஜா : ஐயோ! வார்த்... மட்டுமில்லே அந்த டெக்குனிக்... மறந்து போச்சி. எதிர்காலத்தி... தேவைப்பட்டா புதுசா ட்ரெயினிங் எடுத்துக்கணும்.

மோகன் கட்டுகளே அவிழ்க்கிருன். ராஜா முதுகில் மாங்காய் மச்சம் இருக்கிறது.

மோக : ஆ, மாங்கா மச்சம்!

மரகதம் : ஆ, மாங்கா மச்சம்!

ஆச்சரியப்படுகிருள் — எல்லோரும் வந்து பார்க்கின்றனர். ரங்கநாதத்தின் பைத்தியம் தெளிகிறது. தாயும் தகப்பனும் மகனேத் தழுவிக் கொள்ளுகின்றனர். மோகன்-மீனு, சேகர்-மாலதி திருமணங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. தன் முயற்சியால் மோகனே திருத்தி 'சபாஷ் மீனு!' என்று யாவராலும் பாராட்டப்படுகிருள் மீனு. ★